கழக வெளியீடு : கOஅ

உ

திருச்சிற்றம்பலம்

# சேக்கிழார் அடிகள் வரலாறும்

## பெரியபுராண ஆராய்ச்சியும்

★

ஆசிரியர் :
வழக்கறிஞர், தாகூர் சட்ட விரிவுரையாளர்
பேராசிரியர்
கா சுப்பிரமணிய பிள்ளையவர்கள் எம் ஏ, எம் எல்,
எழுதியன

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
1975

கார்த்திமதிநாதன் சுப்பிரமணிய பிள்ளை (1888)

© 1975 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Branches:

Tirunelveli-6. Madurai-1. Coimbatore-1.
Kumbakonam-1. Tiruchirappalli-2.

Ed 1 Sep 1928
Ed 2 Sep 1954

Reprints Feb 1963; May 1975

Q23 wxlw
N 75

☆

CHEKKIZHAR ADIKAL VARALAARU

Appar Achakam, Madras-1. (1/1)

## பதிப்புரை

நம் செந்தமிழ் நாட்டுச் சமயப்பெரியார் வரலாறு களுள் மிகச் சிறந்தனவாயுள்ள அறுபான்மும்மைச் சமயப்பெரியார் வரலாறுகளைத் தொகுத்துரைப்பது **திருத் தொண்டர்புராண** மெனப்படும் **பெரியபுராண** மாகும். இது வேறுபடாவண்ணம் மெய்யடியார் வரலாறுகளைத் திரு வருள் வலத்தால் மெய்ப்படத் தெரிக்கும் இலக்கிய அழகு சிறந்த உண்மைப் புராணமாய்த் திகழுதலின், இம் மெய் வரலாற்று இலக்கிய நூலொன்றுமே நந்தந் தமிழ் நாட்டின் நாகரிகத்தினை இன்றுள்ளதுபோற் செவ்விதின் விளக்கிக்காட்டுதற்குரிய ஆடியாகும் என்பது மிகை **யாகாது.**

இத்தகைய அரும்பெரும் மெய் வரலாற்று இலக் கியப் பெட்டகமாகிய திருத்தொண்டர் புராணத்தை இயற் றியருளினவர் அத் தொண்டர்சீர் பரவுவாரான **ஆசிரியர் சேக்கிழாரடிகள்.** இவர் தொண்டர் வரலாறுகள் அறிவ தனையே தமது பிறப்பின் நோக்கமாகக்கொண்டு விளங்கிய பெரியாராகலின், இவர்தம் வரலாறு அறிவதனையுந் தமிழ்ச் சைவ மக்களாகிய நாம் நமது பிறப்பின் கடமை யாகக் கொள்ள வேண்டியிருக்கின்றது.

ஆசிரியர் **சேக்கிழார் பெருமான்** வரலாறு முதன் முத லாக உமாபதி சிவாசாரியராற் செய்யுளில் எழுதப்பட் டிருக்கின்றது. செய்யுள் கண்டு படிப்பவர்கள் இக்காலத் தில் மிக அரியராதலால், அடிகள் வரலாற்றினை எல்லாரும் எளிதிற் படித்து உண்மை உணர்தற்குரியதான உரை

நடையிலிட்டு எழுதுதல் நந்தமக்குக் கட்டாயமாயிற்று. அப்பர் சம்பந்தர் முதலான சமயாசாரியர் சீர்பரவிய இச் சேக்கிழார் வரலாற்றினை, அவ் வப்பர் சம்பந்தர் முதலான நால்வர் வரலாறுகளையுந் தக்க ஆராய்ச்சி முறையி லெழுதித் தமிழுலகுக்கு ஈந்த திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். அவர்களே எழுதியுதவினார்க ளாகலின், இதனை எல்லாரும் வாங்கிப்படித்தற்கு இடமாயிருக்கின்றது. பிள்ளையவர்கள் தமிழிலும் ஆங்கி லத்திலும் நிரம்பிய புலமைபெற்றுச் சித்தாந்தக் கருத்து களையும் நுட்பமாயுணர்ந்து விளங்கும் பெரியாராகலின், அவர்கள் ஆராய்ச்சித் திறமைகள் பொதிந்துள்ள இவ் வரலாறும், இதன் ஈற்றிலே சேர்க்கப்பட்டுள்ள விரிந்த பெரியபுராண ஆராய்ச்சியுங் கற்றற்குரியன.

இவ்வாக்கத்தைத் தமிழுலகுக்கீந்த பிள்ளையவர் கட்கும், இப் பதிப்புக்கு எழுத்துப்பிழை முதலியன திருத்தியுதவிய தமிழறிஞர்கட்கும் நன்றி செலுத்து கின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## உள்ளுறை


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | 3 |
| | சேக்கிழார் புகழ்மாலை | 7 |
| 1. | தோற்றுவாய் | ௧ |
| 2. | சேக்கிழார் மரபுவிளக்கம் | ௭ |
| 3. | வேளாளர் ஆராய்ச்சி | ௧௧ |
| 4. | பெரியபுராணத் தோற்றம் | ௨௬ |
| 5. | சேக்கிழாரும் பெரியபுராணமும் | ௪௫ |
| 6. | பெரியபுராண அரங்கேற்றம் | ௫௬ |
| 7. | சோழ அரசனும் ஊர்கோலமும் | ௬௮ |
| 8. | பெரியபுராண ஆராய்ச்சி | ௭௫ |

# சேக்கிழார் புகழ்மாலை

## காஞ்சிப்புராணம்

தூக்கு சீர்த்திருத் தொண்டத் தொகைவிரி
வாக்கி னாற்சொல்ல வல்லபி ரானெங்கள்
பாக்கி யப்பய னுப்பதி குன்றைவாழ்
சேக்கி ழானடி சென்னி இருத்துவாம்.

## திருவானைக்காப்புராணம்

தொகையா நாவ லூராளி
தொடுத்த திருத்தொண் டப்பெருமை
வகையால் விளங்க வுயர்நம்பி
யாண்டார் வகுப்ப மற்றதனைத்
தகையா வன்பின் விரித்துலகோர்
தம்மை யடிமைத் திறப்பாட்டின்
உகையா நின்ற சேக்கிழான்
ஒளிர்பொற் கமலத் தாள்பணிவாம்.

## திருப்பெருந்துறைப் புராணம்

பரவுறும் அடியார் மேன்மை பாடவல் லவரென் றெங்கள்
குரவருள் ஒருவர் அன்பிற் குறிக்கொடு துதித்தல் கண்டுந்
தரமிகு சிறப்பு வாய்ந்த தன்மையார் சேக்கி ழாரைக்
கரவறத் துதியேம் என்னிற் கடும்பிழை ஆகும் அன்றே.

## திருவம்பர்ப்புராணம்

ஓங்கு சைவத் துயர்பரி பாடையும்
வீங்கு பேரொளிப் பத்திசெய் மேன்மையுந்
தேங்கு பேறுந் தெரித்தருள் சேக்கிழான்
பாங்கு சேர்மலர்ப் பாதம் பரசுவாம்.

## சேக்கிழார் புராணம்

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

---

## சேக்கிழார் பெருமை

கருங்கடலைக் கைநீத்துக் கொளஎளிது முந்நீர்க்
கடற்கரையின் நொய்மணலை எண்ணிஅள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை ஒன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகுந்
தருங்கடலின் மீனைஅள விடலாகும் வானத்
தாரகையை அளவிடலாஞ் சங்கரன்தாள் தமது
சிரங்கொள்திருத் தொண்டர்புரா ணத்தைஅள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே.

---

திருச்சிற்றம்பலம்

# சேக்கிழார் அடிகள் வரலாறு

## 1. தோற்றுவாய்

புராணமென்பது பழைய வரலாறு எனப் பொருள் படும். இந்த நாட்டிலே மக்களுடைய வரலாறு சமயத் தொடர்பில்லாத முறையில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப் படவில்லை. சமயத் தொடர்பில்லாத வரலாறுகள் பெரும் பான்மையும் பொழுதுபோக்குக்குப் பயன்படும் கதைகளாக உருவெடுத்தன. சமயத் தொடர்புள்ள கதைகள் அரசர், முனிவர், உலகத்தின் தோற்றம், ஒடுக்கம் என்பவற்றைப் பற்றியும், கடவுளைத் தொழுது பயன்பெற்றவர்களைப் பற்றியும் கூறுமிடத்துப் புராணமெனப் பெயர் பெறும். இதிகாசமென்பது ஓர் அரசன் கதையைத் தலைமையாகக் கொண்டு அதனைப் பல கிளைக்கதைகளோடு இணைத்துக் கூறும் ஒருவகைப் புராணமேயாம். ஒரு தலத்திலுள்ள கடவுளை வழிபட்டுப் பயன்பெற்றவர்கள் வரலாறுகளைத் தொகுத்துக் கூறும் புராணம் தலபுராணம் எனப்படும். சில திருப்பதிகளின் வரலாறுகள் பதினெண் புராணங்கள்*

---

*சைவபுராணம் :—சிவபுராணம், பவிஷ்ய புராணம், மார்க் கண்டேய புராணம், இலிங்கபுராணம், காந்தபுராணம், வராக புராணம், வாமன புராணம், மச்சபுராணம், கூர்மபுராணம், பிர மாண்டபுராணம் என்னும் பத்துமாம்; தேவிக்குரிய புராணம்

சிலவற்றுட் கூறப்பட்டிருக்கின்றன. இப்பொழுதுள்ள வடமொழிப் புராணம் பதினெட்டனுட் பத்துப் புராணங்கள் சிவபுராணமெனவும், நான்கு அரிபுராணமெனவும் இரண்டு புராணங்கள் அயன் புராணமெனவும், ஒரு புராணம் சூரிய புராணமெனவும், மற்றொரு புராணம் அங்கித் தெய்வத் திற்கு உரியதெனவுங் கூறுப. இவை யனைத்தும் சூதமுனி வரால் நைமிசாரண்ய முனிவர்கட்கு இயம்பப்பட்டன. சூதர் பாரத மியற்றிய வேத வியாசரின் மாணுக்கர்.

புராணங்களை உற்றுநோக்கும்பொழுது அவற்றுள் சூதர் காலத்திற்கு நெடுநாட்குப் பிற்பட்ட செய்திகள் கேட்கப்படுதலான், அவையனைத்தும் ஒருகாலத்தி லெழுந் தனவென்று கொள்ள இடமில்லை. சூதர் சில புராணங் களைத் தம் மாணுக்கர்களுக்கு விளம்பியிருத்தல் கூடும். அவருக்குப் பிற்காலங்களில் ஏற்பட்ட புராணங்கள் பல வற்றையும் அவரியற்றியனவாகக் கூறும் வழக்கம் ஏற்பட்டு விட்டது. திருஞானசம்பந்தப்பெருமான் பாடியருளிய திருமுகப்பாசுரத்தில் 'சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே' என்றமையாற் சூதமுனிவர் சிவபெருமானைப் பற்றியும் சிவனடியாரைப்பற்றியும் புராண முரைத்தன ரென்று தெரிகின்றது. அவற்றைப் பதினெட்டு என்று ஞானசம்பந்தர் கூறவில்லை. ஒரு சமயத்திலுள்ள பெரு மக்கள் பிறசமயக் கடவுளரைப்பற்றிப் புராணமுரைப்பின், அக் கடவுளரைத் தஞ்சமயக் கடவுளினும் பெரியராகக் கூறுதல் பொருத்தமின்மையா மாதலானும், விண்டுபுராண முதலியவற்றிலே அவ்வக்கடவுட்குப் பரத்துவம் கேட்கப் படுதலானும், சூதமுனிவர் ஒருவரே வெவ்வேறு கடவுளர்க்

---

தேவீபாகவதம்; தேவி பாகவதத்தை யொழித்து அரிகதை யாகிய பாகவத புராணத்தைக் கூட்டுவாருமுளர். அரிபுராணங்கள்: காருடபுராணம், நாரதீயபுராணம், வைணவபுராணம் என்பன: பிரமபுராணம் பதுமபுராணம் என்னும் இரண்டும் அயற்குரியன; ஆக்கிநேயபுராணம், அக்கினிபுராணமே: சூரியபுராணம் பிரமகை வர்த்தம் என்பது.

குரிய பல புராணங்களையும் கூறினரென்று கருதுதல் நமது அறிவிற்குப் பொருந்துவதன்று. திருஞான சம்பந்தப்பெருமான் றிருவாக்காற் சூதமுனிவர் சிவபுராண முரைத்தாரென்று பெறப்படுதலின், ஏனையவற்றை அவர் உரைத்தாரென்று கோடல் பொருத்த மில்லாததே. உப புராணங்கள்* பதினெட்டுள்ளன. அவற்றுட் பலவும் சைவத் தொடர்புடையனவே. சூத முனிவர் பதினெண் புராணங்களையும் உரைத்தாரென்பது உறுதியேயாமென் பார், தலைமைப் புராணங்கள் யாவும் இறைவன் பெரு மையை வெளிப்படையாயுங் குறிப்பாயுமாதியில் உணர்த்தி நின்றன என்றும், இறைவன் பரத்துவத்திற்கு மாறாய கொள்கைகள் பிற்காலத்தில் விண்டுபுராண முதலியவற்றிற் புகுந்தனவென்றுங் கொள்ளவேண்டும்.

புராணங்களுள் இவை தலைமைப் புராணமென்றும், இவை துணைப்புராணமென்றும் வகுப்பமைத்த காலம் சூதர்க்கு நெடுநாட்குப் பிற்பட்டதாகும். புராணங்களுள் ஆங்காங்கு அளவைகட்குப் பொருத்தம் இல்லாதனவாய் முன்னொடுபின் முரண்படுவனவாய்க் கொள்கைகளுங் கதைகளுங் காணப்படுகின்றன. அத்தகைய கொள்கை களுட் சிலவற்றைப் பௌராணிக மதமுடிவென ஆசிரியர் சிவஞானயோகிகள் மறுத்திருக்கின்றனர். அவற்றையெல் லாம் ஒழித்து இருவகைப் பதினெண் புராணங்களையும் செம்மையான முறையில் அமைத்துக்கொள்ளுதல் அறிஞர் கடமையாகும். இது தலபுராணங்களுக்கும் ஒத்ததே. இதிகாசங்களுள்ளும் பொருத்தமில்லாதவற்றைக் களை தலே நன்று.

---

*உபபுராணங்களாவன :—சனற்குமார புராணம், நரசிங்க புராணம், நந்திபுராணம், சிவதருமபுராணம், துருவாசபுராணம், நாரதீயபுராணம், கபிலபுராணம், அவுசனபுராணம், சௌமிய புராணம், வாருணபுராணம், காளிகபுராணம், வாசிட்டலைங்க புராணம், மானவபுராணம், சௌசபுராணம், பராசரீயபுராணம், மாரீசபுராணம், காம்பேடபுராணம், பார்க்கவபுராணம்.

தமிழிலே திருவாசகத்தின் முதற்கண்ணுள்ள சிவ புராணமே முதற்கண் புராணமெனப்பட்டது போலும்! அது சிவனருளாலே உயிர் பல பிறவி எடுத்துப் பக்குவமடைந்து மெய்யுணர்ந்து வீடுபேறெய்துந் தத்துவ வரலாற்றினையே கூறுவதாய்க் கதைகளொன்றுங் கூறாததாய் அமைந்துள்ளது. தென்னாட்டுத் தலபுராணங்கள் பலவும் பலதலங்களைப்பற்றிய கதைகளைக் காவிய முறையில் தொகுத்துக் கூறுபவை. அவற்றிற் சிலவே வடமொழியில் ஆதியில் எழுதப்பட்டன. தமிழ் மொழிக்கேயுரிய தலபுராணங்களைப் பதினெண் புராணங்களுட் சிவபுராணம் ஏதாவதொன்றினோடு இயைத்துவிடுதல் பெருமை என்று கருதி வடமொழிக் காந்தம், சைவபுராணம் முதலிய பெருநூல்களின் ஒரு பகுதியுள் தாம் கூறும் புராணக் கதை உண்டென்று புகலுந் தப்பு வழக்கம் பிற்காலத்துத் தலபுராண ஆசிரியர்பாற் காணப்படுகின்றது. தலபுராணங்கள் காவியம் போன்று உயர்வு நவிற்சி, புதுவது புனைதல் முதலிய கற்பனைப் பகுதிகளோடு திகழ்வன வாதலால், அவை கூறும் யாவும் மெய்ச் செய்திகளே என்று கருத இடமில்லை. இத்தகைய புராணங்களின் குறைபாடு யாதும் இல்லாததாய் இறைவன்பால் அன்பு செலுத்தி வீடெய்திய தமிழ்நாட்டு மெய்த்தொண்டர் வரலாறுகளைத் தொகுத்துப் பெருங்காப்பிய நயங்களோடு செவ்விதிற் கூறும் புராணம் திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணம் ஒன்றேயாகும். இப் புராணமானது தேவர் அசுரர் அரக்கர் முதலியோருடைய பயன் கருதிய தவத்தினையும் போரினையும் புனைந்து எடுத்துக் கூறுவதன்று. பல சமயச் சார்பான கதைகளைக் கலந்து கூறி மயல் விளைப்பதில்லை. தமிழ்நாட்டிலே பல இடங்களில் வரலாற்றுக்குட்பட்ட காலத்திலே ஊரும் பேரும் உசாவி யறியத்தக்க பல்வகை மரபுகளிலுந் தோன்றித் திகழ்ந்து பயன் கருதாது பேரன்புடன் இறைவனை வழிபட்டு அவன் திருவருள் பெற்ற சிவனடியாரின் வரலாறுகளைத் தொகுத்து உயர்வு நவிற்சியின்றி இணையற்ற இனிய செந்தமிழ் நடையில் திருத்தொண்டர் புராணமியற்றியருளிய பெருமை

அதன் ஆசிரியர்க்கே உரியது. இதுபோன்றவேறு புராணம் வடமொழியிலும் தென்மொழியிலும் இல்லை என்றே கூறலாம். இதன் மொழிபெயர்ப்பாக வட மொழியி லமைந்த 'உபமன்யு பத்த விலாசமும்' 'அகத்திய பத்த விலாசமும்' இதற்கிணையாகமாட்டா.

இசைத் தமிழும் நாடகத் தமிழும் மறைந்தொழிந்த பிற்காலத்தே இயற்றமி ழிலக்கியங்களே தமிழ் நன்மக் களுக்குப் பெரிதும் கல்வி யின்பம் பயப்பவாயின. மக்க ளுணர்ச்சி நுட்பங்களை ஒப்பற்ற முறையில் அழகாகப் படம்பிடித்துக் காட்டும் இலக்கியங்களே மக்களுள் என்றும் நிலைபெறும் உலப்பிலாப் பெரும் பேரின்ப ஊற் ருகும். மக்களுணர்ச்சி உலகநெறி கடவுள்நெறி என்னும் இருநெறியின்பாற்படும். உலக நெறியைப் பெரிதாகக் கருதும் மக்கட் பகுப்பினருக்கு அந்நெறியிற் பயில்வோ ருடைய அறிவின் திறங்களையும் உணர்ச்சி நுட்பங்களையும் துருவி ஆய்ந்து அவற்றை விளக்கும் மக்கட் சரித்திரங்களை நயமிகக் கூறும் இலக்கியப் பேராசிரியர்களே ஒப்பற்ற பெரும்புலவராகக் கருதப்படுவர்.

ஆங்கிலப் புலவருள் தலைவராகிய **செகப்பிரியர்** (Shakespeare) என்பவர் உலகியல் நுட்பங்களை நாடக இலக்கியத்திற் படமெழுதிக் காட்டுவதில் இணையற்றவரா தலின், அவரை ஆங்கில மக்கள் தமதிலக்கிய மன்னராகக் கருதுகின்றார்கள். தமிழ்நாட்டிலே தமிழ்மக்கள் கடவுள் நெறிச் செல்லுதலையே உயர்ந்த வாழ்க்கை முறையாகக் கருதிய காலத்திலே அந்நெறிச் சென்ற பெருமக்களது பேரன்பின் நுண்ணிய திறனனைத்தும் ஆய்ந்தறிந்து அவற்றை அழிவுபடாத ஒப்பற்ற வனப்பு முறையில் புராணப் பெருங்காப்பிய வாயிலாகத் திறம்பெற விளக்கிய பேராற்றல் **பெரியபுராண** ஆசிரியராகிய **சேக்கிழார் நாயனர்க்கே** யுரியதாகலின், தமிழ் நன்மக்கள் அவரைத் தமிழ்ப்பெருங் காப்பிய மன்னராகக் கருதற்பாலார். தமிழில் விருத் தப்பாவில் அமைந்துள்ள பெருங் காப்பியங்களுள் விளக் கமுந் தெளிவும் இனிமை முதலிய எவ்வகை நயங்களுங்

கலந்த ஒரு பெருநூல் பெரியபுராணமேயாதலால், சொன்னடையிலும் பொருளமைப்பிலும் ஆசிரியர் சேக்கிழார் இணையற்றவர் என்பது போதரும். கடவுள்பால் அன்பினை விளைப்பதில் நிகரற்ற பெருமை வாய்ந்ததாகலின், திருத்தொண்டர் புராணமானது பெரியபுராணமென்று அழைக்கப்படுகின்றது. 'எடுக்கு மாக்கதை' என்றவிடத்து, 'மாக்கதை' என்பது பெரியபுராணமென்று பொருள்படுதல் காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றினை முதலிலும் நடுவிலும் இறுதியிலுங் கொண்டு அவர் மொழிந்தருளிய திருத்தொண்டத் தொகையிற் போந்த அடியார்களின் சரித்திரங்களையே பெரியபுராணங் கூறுதலின், அது பெரியதோர் இதிகாசமாமென்று கூறுதற்கும் இடமுண்டு. அத்தகைய பெருநூலை இயற்றியருளிய சேக்கிழார் பெருமானது வாழ்க்கை வரலாற்றை ஆய்ந்தறிதல் தமிழ் மக்கள் கடமையாதலின், அவ்வாராய்ச்சி ஈண்டு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சேக்கிழார் நாயனார் புராணமானது சைவ சந்தான குரவருள் ஒருவராய்த் தில்லைவாழந்தணர் மரபைச் சார்ந்த உமாபதி சிவாசாரிய சுவாமிகளால் இயற்றப்பட்டதென்ப. இவர் சைவசித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூல்களியற்றியவர். இவர் சங்கற்ப நிராகரணம் என்னும் தமது நூலை இயற்றிய காலம் சாலிவாகன சகாப்தம் ௧௨௩௫ என்று குறித்திருக்கின்றார். அது கி. பி. 1313 ஆகும். சேக்கிழார் புராணம் இவர் எப்பொழுதியற்றினாரென்று தெரியவில்லை. சேக்கிழார் சுவாமிகள் பெரியபுராணம் இயற்றிய காலம் முதற் குலோத்துங்க சோழமன்னன் காலமாகிய பதினோராம் நூற்றாண்டின் இறுதி என்று சரித ஆசிரியர்கள் கணித்திருக்கின்றார்கள். கி. பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலெழுந்த சிந்தாமணிக்குப் பின்வந்த பெருங்காப்பியம் பெரியபுராணமாகும். இவற்றிற்குப் பின்னேயே கந்தபுராணமும் கம்பராமாயணமுந் தோன்றினவென்ப.

## 2. சேக்கிழார் மரபு விளக்கம்

*பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி*
*ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி*
*வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி*
*ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.*

இவ்வாழ்த்து, சேக்கிழார் நாயனார் புராணத்துப் பாயிரத்திலுள்ள தாய்ப் பெருவழக்கிற்றாய் வழங்குதலானும், அடியார்களுட் சிறந்த சைவத் திருநெறித் தலைவர்களது வாழ்த்துப்பாயிரத்திலுள்ள பிற வாழ்த்துக்களினுஞ் சிறந்ததாகலானும் அதனை மாத்திரம் ஈண்டு எடுத்துக்கொண்டோம்.

பாலாற்றின் பெருக்கினால் நிலவளமிகுந்த பூஞ்சோலைகள் தழைத்தோங்கி அவற்றிலே வண்டுகள் பாடவும் மயில்களாடவும் கண்டு மக்கள் மகிழத்தக்க தொண்டை மண்டலத்திலே உள்ள இருபத்து நாலு கோட்டங்களில், புலியூர்க் கோட்டத்தைச் சார்ந்த குன்றைவள நாட்டிலே குன்றத்தூரிலே **சேக்கிழார்** என்னும் வேளாளர் திருமரபு சிறப்புற்றிருந்தது.

சோழமன்னர் முற்காலத்திலே தொண்டைமண்டலத்தில் குடி ஏற்றும் வண்ணம் தெரிந்தெடுத்த நாற்பத்தெண்ணாயிரம் நற்குடிகளுள், கூடல்கிழான், புரிசை கிழான், வெண்குளப்பாக்கிழான் என்பவர்களோடு உயர்தர வரிசையிற் புகழ்பெற்று விளங்கிய சேக்கிழார் குடியிலே, தமிழ்நாடு உய்யும் வண்ணம் அருண்மொழித் தேவரும், அவருடைய தம்பி பாலறாவாயருந் தோன்றி வாழ்ந்தனர்.

அருண்மொழித்தேவர் நூல்நுட்பமும் மதிநுட்பமும் நல்லொழுக்கமும் உடையராய்ச் சோழ மன்னனுற் பெரிதும் போற்றப் பெற்றனர். அவன் அவருக்குச் **செங்கோல் ஒச்சுந் தலைமையும், உத்தம சோழப் பல்லவன்** என்னும் உயர்ந்த பட்டமுங் கொடுத்தனன். அவர் சோழ நாட்டிலுள்ள திருநாகேச்சுரத்தில் வீற்றிருக்குங் கடவுள் மீது மிகுந்த பேரன்புடையவராய் அத் தலத்தை மறவா திருந்தமையால் தம்முடைய ஊராகிய குன்றத்தூரிலே மாடவீதியுந் திருக்கோயிலுந் திருநாகேச்சுரத்தில் உள்ளன போலவே யமைத்துச் சிறப்போடு பூசனை செவ்வையாய் அத் திருத்தளியில் நடைபெறும்படி ஏற்பாடு செய்தனர்.

சேக்கிழார் மரபின் பெருமையை அவர் புராணம் பாடிய உமாபதி சிவாசாரியர் விளக்கமாக எடுத்துப் பேசி யிருக்கின்றார். அது வருமாறு: "உமையம்மை சிவபெருமானைத் திருக்காஞ்சி நகரின்கண் வழிபட்டு அவர்பாற் பெற்ற எட்டுழக்கீராழி நெல்லைத் தம்முடைய பிள்ளைகளாகிய வேளாளரிடங் கொடுக்க, அவர்கள் அதனை வித்தாகக் கொண்டு பயிர்செய்து உலகிலுள்ளார்க்கு உணவளித்தமையால் அவர்கள் மிகவும் புகழ்பெற்று விளங்கினர். நிலப் பரப்பு முழுவதும் வயலாகவும், கடல் ஏரியாகவும், கூற்றுவனிடத்தும் ஈசனிடத்துமுள்ள மாடுகள் உழவு மாடாகவும், ஆண்டுதோறும் விதையை அளந்து தப்பாமற் கொடுப்பவள் கச்சிநகர்க் காமபீடத்தில் வீற்றிருக்கும் அறம் வளர்த்த அம்மையாகவும் இருக்கப் பெற்று, வேளாளர் நடத்தும் உழவின் செழுமையால் எறும்பு முதல் தேவர் வரையுள்ள உயிர்களனைத்தும் உணவு பெற்று மகிழ்ந்தன. பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் அவள் கணவன் உயிரிழக்க, அங்ஙன மவன் இழத்தற்குக் காரணம் தாமென்றுணர்ந்த வேளாள மன்றத் தலைவர்கள் எழுபதுபேரும் செந்தீக்குழியில் விழுந்து திருவாலங்காட்டு அப்பர் திருவடியை யடைந்தமையால், வேளாளரது வாய்மைக்கு அளவில்லை.

வேளாளர் தாற்று முடியைச் செவ்வையாய் நட்டாத் பாராளும் அரசர் முடி திருத்தமாக நிலைபெறும். அவர்கள் ஏரடிக்கும் தாற்றுக்கோலால் நிலத்தை உழுது ஆட்சி செய்ய, மன்னர் செங்கோல் செலுத்துமியல்பினராவர். "அறுபது தனி நாயன்மாருட் பதின்மூவர் வேளாளரே." இக் கருத்துகள் சேக்கிழார் புராணத்துட் காணப்படுவன.

# 3. வேளாள ராராய்ச்சி

வேளாளர் வரலாற்றினைப்பற்றிய ஒரு சுருங்கிய ஆராய்ச்சி செய்தல் ஈண்டு வேண்டற்பாலதே. வேளாளர் என்ற சொற்றொடர், நிலத்தையாள்பவர் என்பதாகும். வேள்—மண், நிலம். மக்கள் வரலாற்றிற் கெட்டாத பழைமையான காலத்திலே வேட்டுவ வாழ்க்கை அல்லது கனி காய் பொறுக்கும் வாழ்க்கை நிலையிலிருந்து, பின்னரே நிலத்தை உழுதுண்ணும் நிலையான நாகரிக மடைந்தன ரென்பது மேலைநாட்டுப் புலவர் கொள்கை. வேட்டுவ நிலையில், குறிஞ்சி நில மாக்களும், நெய்தல் நில மாக்களும் அடங்குவர். முல்லை நில வாழ்க்கை, காலத்தாலும் நாகரிகத்தாலும் இடையாயது. மருதநில வாழ்க்கைதான் மக்கட் கூட்டத்தினர் ஓரிடத்திற்றங்கி ஊர்களும் நகர் களும் அமைத்து நாகரிகத்தை வளர்ப்பதற்கேற்ற வசதி களைத் தருவதாகும். உழவினை மேற்கொண்டு நிலமுடை யராய்த் திகழ்ந்த மக்கள் வேளாளரென்ற பெயர்க்குரிய ராயினர். தெலுங்க நாட்டில் 'வேலம்மார்' (Velamma) என்பாரும், கன்னட நாட்டில் 'பெல்லாலா' என்பவரும், ஆதியில் வேளாளரே யென்று கருத இடமுண்டு. மலையாளத்தில் நிலத் தலைவர் 'தலைவர்' என்றழைக்கப் பட்டுப் பிற்காலத்தில் அதற்கு நேராய 'நாயகர்' 'நாயர்' என்ற பட்டம் பெறுவாராயினர். மேனோன் என்பது மேலோன் என்பதன் மரூஉ, அலைந்து திரியும் வாழ்க்கையைத் தவிர்த்து ஒரு நிலத்திலமர்ந்து அதனைப் பயிர் செய்யத் தொடங்கிய மக்கட் கூட்டம், நிலவளத்தாற் பயன் பெற்றகாலை விரிவுற்று மிகுதிப்படுத லியல்பே. அங்ஙன மிகுதிப்பட்ட கூட்டத்திற் பல வேலைகளைப் பல்வேறு பகுதியினர் தனித்தனி மேற்கொள்ளுதல் குடிவாழ்க்கைக்குச் சிறந்ததொரு முறையாமாதலின், அம்முறைப்படி கடவுள் வழிபாட்டிற்கு வேளாளருள் ஒரு

பகுதியார் வேறு பிரிந்தனர். அவரே பார்ப்பாரெனப் பட்டார். இவர் இக்காலத்தே ஆதிசைவரெனப் படுகின் றனர். மருதநில வாழ்க்கையில், நிலமுடையர் உயர்ந்தோ ராகவும், அவர்க்குப் பணிசெய்வோர் தாழ்ந்தோராகவுங் கருதப்படுதல் உலகியல்பு. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந், தொழுதுண்டு பின்செல் பவர்" என்றதுமது. பார்ப்பார் உயர்ந்தோர் மூவருள் வைத்தெண்ணப் படுதலால், அவர் உயர்ந்தோராகிய வேளாளரினின்று பிரிந்தவரென்றலே அறிவிற்குப் பொருத்தமாவதொன்று. நிலமுடையாருள், தனித்தனி நிலவுரிமை ஏற்பட்டபின் சிலர் தமது விடாமுயற்சித் திறனல், நிலப்பொருளை மிகுதியாகப் பெற்று இடம் பொருளேவலாட்சியிற் சிறந்தவிடத்து வேளாண் டலைவ ராய்க் குறுநில மன்னராய் மேம்பட்டனர். அன்னேர் வேளி ரென்று பண்டை நூல்களிற் சிறப்பிக்கப்பட்டனர். இவ் வேளாண்டலைவர் பலர்க்கும் ஒரு தலைவனய்த் தனது பரம்பரையிற் றனது பெருமையை நிலைநிறுத்திய ஆற்றல் சான்றவனே மன்னனயினன். ஒரு மன்னனுக்குட்பட்ட இடம் நாடாயிற்று. தமிழ்நாடு முழுவதிலும் ஆதியில் ஒரு வேந்தனும், பின்னர் மூவேந்தரும் ஏற்பட்டமையால், சேர சோழ பாண்டிய நாடுகள் தமிழகத்துக் குட்பட்ட மூன்று நாடாயின. இம் மூவரும் வேளிர் வகுப்பினரோடு பெண்கோடல் கொடுத்தல் முதலியன செய்துவந்தனர். உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி, அழுந்தூர் வேள் புதல்வியையும், கரிகால்வளவன் நாங்கூர் வேள் மகளையும் மணந்ததாக ஆசிரியர் **நச்சினார்க் கினியர் தொல்காப்பிய** உரையிற் கூறியது காண்க. மூன்று வேந்தர் மாத்திரம் ஒரு குலமாதல் இயலாததே. இம் மூவேந்தரும், வேளிர் வகுப்பினரென்பதற்கு அடையாள மாகவே, வேளாளர் மன்னர்க்கு முடியெடுத்துக் கொடுக்கும் வழக்கம் நெடுநாளாக நிகழ்ந்து கம்பர் காலத்திலும் அதற்குப் பின்னும் ஆட்சியிலிருந்திருக்கிறது. முடியுடை அரசரும் வேளிருமொழித் தொழிந்த வேளாண் மக்களுள் ஒரு பகுதியார் பண்டமாற்றினை மேற்கொண்டு செட்டி

யென்ற பட்டத்துடன் பிரிந்தவிடத்து வணிக ரெனப்பட்டார். எஞ்சிய வேளாண் மக்கட்கு முன்னுள்ள வேளாளரென்ற பெயரே நிலைபெற்றது. இவர்களே பிற்காலத்தில் 'நாலாங்குலத்தினர்' என்றெண்ணுதற்குரிய ராயினர். ஆதிசைவர் பண்டைத் தமிழ்ப் பார்ப்பனராவர். நம்பி என்ற தமிழ்ப்பெயரும் அவர்களைக் குறித்து வழங்கு கின்றது. இவர்களின் வேருய ஆரியக்குருக்கண்மாரே ஆதிப்பிராமணராவர். தமிழ்நாட்டில் அவர்கள் தங்கித் தமிழ்மக்களோடு கலந்து வாழ்ந்தகாலை, 'பார்ப்பார்' என்ற தமிழ்ப் பெயருக்கும் அவர்கள் உரியரானார்கள். 'பேர் கொண்ட பார்ப்பா' ரென்றதுமது. இப்பொழுதும் சைவவேளாளரிற் பலர் சைவாசாரியாபிடேகம் பெற்றுச் சிவபூசையியற்றிச் சிவாக்கினி வளர்த்து மந்திரோப தேசமுஞ் செய்து வருதலால் சைவ அந்தணரென்ற பெயர்க்குரியராய்த் திகழ்கின்றனர். இவர்க்கும் ஆதி சைவர்க்கும் சைவசமயக் கிரியைகளில் வேறுபாடு இல்லை. பிராமணர் வடமொழி வேதமோதுதல் போல, ஓதுவார் முதலியோர் சிவன் கோயில்களில் தமிழ்மறை ஓது முரிமை யுடையவரே.

வேளாளர் முடி எடுத்துக் கொடுக்கின்றனர் என்பது கம்பராமாயணத்துச் செய்யுளால் விளங்கும்.

'அரியணை யனுமன் றாங்க வங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் குடைக விக்க வி ருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க வெண்ணெயூர்ச் சடையன் றங்கண்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.'
(திருமுடி சூட்டுப் படலம், கஅ)

சோழமண்டல சதகத்துள் 'கண்டன் கரிகாலனுக்கு முடி கவித்துக் காணிபடைத்தோரும்' என்றும், திருக்கை வழக்கமென்னும் நூலுள்,

'மங்கையொரு பாகர்க்கு மன்னவர்க்கு மாதவர்க்குந்
துங்கமணி முடியைச் சூட்டுங்கை'

என்றும் வருவன இதனை வற்புறுத்தும் தஞ்சையிலாண்ட மராட்டிய மன்னருக்கு அணைக்குடிச் சாமிநாத பிள்ளை என்பவரால் முடிசூட்டப்பட்டதென்ப. வேளாளப் பெருஞ் செல்வர்க்கு இளங்கோ என்ற பெயருங் கேட்கப்படுகின்றது. தொண்டைமண்டலத்திலே இருபத்து நான்கு வேளாண் தலைவர்கள் இருபத்துநான்கு கோட்டையுடையவர்களாய்ச் சிற்றரசுப் பட்டம் பெற்றுப் பெருவள்ளல்களாய்த் திகழ்ந் தனர்.

அவ் வேளாளருக்கும் பத்துறுப்பிலக்கண மென்னுந் தசாங்கங் கூறப்பட்டுள்ளது. புராணசாரத் திரட்டு என்னும் நூலுள் அவை இனிது விளக்கப்பட்டன. அதனுள் வேளாளரென்ன வியத்தகு பேரும், மேரு மலையும், கங்கையாறும், எழுபத்தொன்பது நாடும், ஒன்றொழியாயிரம் ஊரும், இந்திரனளித்த யானையும், குதிரையும் செங்குவளை மாலையும், குயில் சிங்கமேழி என்பவை யெழுதிய கொடியும், கலப்பைப் படையும், ஆதுலர் விளிக்கும் அருட்கொடை முரசுங் கூறப்பட்டன. வள்ளன்மையில் வேளாளர் இணையற்றவரென்பது **தொண்டைமண்டல சதகத்தா**லினிது விளங்கும்.

'உழுங் குலத்திற் பிறந்தாரே
உலகுய்யப் பிறந்தாரே'

'அழுங்குழவிக் கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கு
மெழுங்கருணைப் பெருக்காளர்'

"பொன்னு லமுதும் பொரிக்கறியுந் தான்கொணர்ந்து
கன்னு வலர்க்களித்த நாணயக்கை—பன்னரிய
வையகமெங் குந்தேடி னந்ததமி ழோன்புகழச்
செய்யமுடி யைக்கொடுத்த செம்பொற்கை—துய்யபுகழ்"

என்றது காண்க.

திருஞானசம்பந்தப் பெருமானும் தேவாரத்துள் "வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந் தாளாளர்"

என்றருளினர். "மாகதர்கோன் மாறன் புகழ்கூரு வாயுண்டோ" "மாவேந்த னேகம்ப வாணன்" என்ற பகுதிகளால் மகதநாட்டை ஏகம்பவாணன் என்னும் வேளாண்டலைவன் அரசாண்டது புலனாகின்றது. ஆமூர் முதலி என்னும் வள்ளலைக் காளமேகப்புலவர் அரசர்பிரான் என்றனர். எழுபத்தொன்பது நாட்டில் ஒன்றாகிய திருக்காஞ்சி நாடானது கொடுங்கோன் மன்னன் ஒருவனால் காடாகிப் பின் நாடானபோது குடிகளெல்லாம் பேரவை கூட்டி ஆலோசனை செய்து ஒழுக்கம் வீரம் வாய்மை இன்சொல் முதலிய நற்குணங்களையுடைய வேளாளத் தலைவ னொருவனையே தங்கள் மன்னனாகத் தெரிந்தெடுத்துக் கொண்டனர். வேளாளர் அரசர்க் கமைச்சராக விருந்தமை சேக்கிழார் சுவாமிகள், தாயுமான சுவாமிகள் முதலியோர் சரிதங் களால் இனிது விளங்கும். அரிய நாயக முதலியார், ஆறை அழகப்ப முதலியார், குமாரசாமி முதலியார் முதலியோர் பிற்காலத்தே அமைச்சராகவும் படைத் தலைவராகவும் விளங்கினர். தளவாய்ப் பட்டம் பெற்றோர், பிள்ளையாயிருந்தோர் முதலியவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலே அரசரதிகார முடையராய்த் திகழ்ந்தனர். பெரியபுராணத்தில் கோட்புலி நாயனார், கலிப்பகை நாயனார், கலிக்காமர், மானக்கஞ்சாறர் என்போர் படைத்தலைவராய் விளங்கினவர்களே.

கோட்டமென்பது பெரும்பிரிவாயும், நாடு என்பது சிறு பிரிவாயும், அதனுளடங்கியது ஊராயும் உள்ளன. இருபத்துநாலு கோட்டங்களின் பெயர்களும்* எழுபத் தொன்பது நாடுகளின் பெயர்களுங் காலஞ்சென்ற தொழுவூர் வேலாயுத முதலியாரால் ஏரெழுபதிற் கியற்றப் பட்ட உரையினுட் காணப்படும்.

---

*கோட்டம் இருபத்து நாலு: புழல், புலியூர், ஈக்காடு, மணவூர், செங்காடு பையூர், எயில், தாமல், ஊற்றுக்காடு, களத் தூர், செம்பூர், ஆமூர், ஈதூர், வெண்குன்றம், பல்குன்றம், இளங் காடு, கலியூர், சிறுகாரை, படுவூர், கடிகை, சந்திரிகை, குன்றம், வேங்கடம், வேலூர்.

புலியூர்க் கோட்டத்துள், குன்றத்தூர், பேரூர், மாங்காடு, அமரூர், கோட்டூர் என்னும் ஐந்து நாடுகளுள்ளன. நாடு என்பது பல சிற்றூர்களடங்கியது. குன்றத்தூர் என்பது ஒரு சிற்றூர்க்கும், அதனையும் வேறு பல சிற்றூர் களையு முள்ளடக்கிய நாட்டிற்கும் பெயராயிலங்கியது. திருநெல்வேலி நகர்க்கும், இதனையும் பிற ஊர்களையு முள்ளடக்கிய மாவட்டத்திற்கும் பெயராதல்போல. ஆனல், கோட்டப்பெயர் நாட்டிற்காதலில்லை.

தொண்டர் நாடு என்பது தொண்டர்மான் என்னும் அரசனல் ஆளப்பட்டமையால் அப்பெயர் பெற்றதென்ப. தொண்டைமான் இளந்திரையன் என்பான் தொண்டைக் கொடியாற் சுற்றப்பட்டுக் கடலிற் றிரை கொணர்ந்து வீசப் பெற்றவனுதலின், அப் பெயர் பெற்றுனென்றும், அவன் பெயர் நாட்டிற்காயிற்றென்பதும் ஒரு கொள்கை. நாகபட்டினத்துச் சோழனெருவன் நாககன்னிகை யொருத்தியை மணந்து பெற்ற பிள்ளையை அவன் தொண்டைக் கொடியாற் கட்டிவிட அது கரை வந்துசேர்ந்த கதை ஆசிரியர் நச்சினுர்க்கினியரால், பெரும்பாணுற்றுப் படையுரையிற் கூறப்பட்டது. மணிமேகலையுள்,

'வென்வேற் கிள்ளிக்கு நாகநா டாள்வோன்
றன்மகள் பீலிவளை தான்பயந்த புனிற்றிளங்குழவியை'

என்றமையால், அக் குழவிதான் திரையனெனப்பட்டது போலு மென்பாருமுளர். (இளந்திரையனல் கஅடு ஆவது புறப்பாட்டுப் பாடப்பெற்றது.) தொண்டை நாடு குறும்பரசர் பலராற் கொள்ளை கொள்ளப்பட்டகாலை, சோழ மன்னன் அவர்களைப் பொருது தொலைத்துத் தன் மகனுகிய இளந்திரையனுக்குப் பட்டங்கட்டி நாடெங்கும் தக்க வேளாண் குடிமக்களைத் தெரிந்தெடுத்துத் தொண்ட மண்டலத்திற் குடியேற்றினனென்ப. அக் குறும்பரசர் கோட்டம் உச ஆதலின் பின் குடியேறிய வேளாண் டலைவரும் உச பேர் ஆயினரெனக் கொள்க.

வேளாளப் பெருமக்கள் மன்னர் பின்னராகக் கருதப் பட்டனர். ஆதியில் உழவும் வணிகமும் வேளாளர் பாலிருந்தன. தொல்காப்பியத்திலே 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்' 'ஐவகை மரபினரசர் பக்கமும்' என்றதன் பின்னர் 'இருமூன்று மரபி னேனோர் பக்கமும்' என்றமையால் அந்தணர், அரசர், வேளாளரென்ற மூன்று பிரிவே ஆதியிலிருந்தனவென்பது தெளிவு. உழவும் வணிகமும், ஆரிய நூலில் வைசியர்க்குரியன வென்றமையால், வேளாளரை வைசியரென்று கூறும் வழக்கம் ஏற்பட்டது. வேளாளர்க்கு வணிகமு முண்டென்பது பட்டினப்பாலையுள், (வரி ௨௦௩ - ௨௧௨)

"கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கை"

என்றமையாற் பெறப்படும். இறையனாரகப்பொருளுரையில் உப்பூரி குடிகிழார் மகனாரென, வணிகப் பிள்ளையாகிய உருத்திரசன்மரைக் கூறியவிடத்து, 'கிழார்' என்ற வேளாண் பட்டம் வணிகர்க்கு வழங்கினது காண்க. பிங்கலம்,

'தாளாள ரீப்பர் தருமக் கிழவர்
வேளாள ரிளங்கோக்கண் வைசியர் பொதுப்பெயர்'

"இளங்கோக்கள் மன்னர் பின்ன ரிப்பரெட்டி யார்கா ராளர்
வளம்பெற வாழ்வே ளாளர் வைசியர்தம் பொதுப்பே ராகும்

இளங்கோக் காத்தன் மற்றுங் கிளர்பொரு ளீட்டலேரை
விளங்கவே யுழலான் மூன்று குலம்பெறும் பேர்கள் சொல்வாம்"

இம் மேற்கோள்களாலே வேளாளரென்ற சொல் வைசியர்க்குரிய பெயரென்பது தெளிவு.

"வந்தகோ வலரு டன்கோ வர்த்தன ரிப்பர் முப்பேர்
முந்துகோ வைசிய ரென்று மொழிந்திடும் வணிகர் நாய்கர்
தந்தநூற் பரதர் முப்பேர் தனவைசி யர்க்கே சாற்று
முந்துபூ வைசியர் முப்பே ருழவர்மே ழியர்வேளாளர்"

இச் செய்யுளினுலே கோவலர் கோவர்த்தனர் இப்பர் என்னும் பெயர்கள் பசுக்காக்கும் வைசியருடைய பெயர்களென்றும், வணிகர் நாய்கர் பரதர் என்ற பெயர்கள் பண்டமாற்ருற் பொருளீட்டும் தனவைசியர் பெயர்களென்றும், உழவர் மேழியர் வேளாள ரென்ற பெயர்கள் உழுதூண் வைசியர்க்குப் பெயர்களென்றும் அறிகின்ருேம். நாயகரென்ற சொல் வணிகருக்குண்டென்பது சிலப்பதிகாரத்தில் 'மாநாய்கன் மகள் கண்ணகி' என்பதாற் புலனுகின்றது. தெலுங்கருள் நாய்க்கரென்பாரும் வைசியர் போலும்! எட்டிய ரென்ற சொல்லே ரெட்டியரென்பதால் ரெட்டிய மரபினரும் வைசியரென்றே கருத இடமுண்டு. நாய்க்கரென்ற சொல்லே நாயுடு என்று தெலுங்கில் வழங்குகின்றது போலும்! ஏரெழுபது என்னும் நூலினுல் உழவர் பெருமை பகரவந்த கம்பரும்,

"தொழுங்குலத்திற் பிறந்தாலென்
சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்திற் பிறந்தாலென்
னிவர்க்குப்பின் வசியரெனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாராய்ச்
சிறப்புடைய ராய்வாய்மை
உழுங்குலத்திற் பிறந்தாரே
உலகுய்யப் பிறந்தாரே"

என்றனர்.

"உழவுவா ணிபத்தி னீட்டி
யுறுபொருள் கொண் டியாரும்
விழைவுறத் தம்பா லீர்க்கு
மிகுதியான் வசிய ராவார்
தழைதரு முபகா ரத்தாற்
ருரணி பிணித்த லாலும்
மழைநிகர் கொடைமை யாலு
மற்றும்வே ளாள ராவார்"

என்றவிடத்து வேளாளரை வைசியரென்றமை காண்க. இனி, ஏரெழுபது நூலுள் முப்பத்தொன்பதாவது பாட்டுள்

"அந்தணர்க்கு வேதமுதல்
வெற்றிமுதல் மன்னவர்க்கு
முந்தியசீர் வைசியர்க்கு
முதலுழவாம் மூதுலகில்
வந்தஉயிர் தமக்கெல்லா
மருந்தாக வைத்த முதல்
செந்தமிழ்க்கு முதலாமத்
திருவாளர் செய்முதலே"

என்றதுங் காண்க. இதனுல் வைசியருக்குச் சிறப்பாகிய தொழில் உழவென்பது தெளிக. மூவகை வைசியருள்ளும் வேளாளர் சிறந்தோரென்பார், "முந்தியசீர் வைசிய" ரென்றும், அவர் செந்தமிழ்ப் பேணும் பெருமையுடையா ரென்பார், "செந்தமிழ்க்கு முதலாம் அத் திருவாளர் செய் முதலே" என்றுங் கூறினமை காண்க. மனுஸ்மிருதி முதலத்தியாயம் தொண்ணூருவது சுலோகத்தில் வைசிய னுக்குப் பசுக்காத்தல், தானங்கொடுத்தல், வேதமோதல், வியாபாரஞ்செய்தல், வட்டிவாங்குதல், பயிரிடுதல் என்றிவ் வாறு தொழிலுங் கூறப்பட்டது. இக் கருத்துப் பராசர ஸ்மிருதி ஆசாரகாண்டம் தொளாயிரத்துப் பன்னிரண் டாவது சுலோகத்திலும், பிருகஸ்பதி ஸ்மிருதியிலும் யாஞ்ஞ வல்கிய ஸ்மிருதியிலும், வராகபுராணம், மார்க்

கண்டேய புராணம் இவற்றிலுந் தெரிவிக்கப்பட்டது. இன்னும் இது மனுஸ்மிருதி ஒன்பதாவது அத்தியாயம் முந்நூற்றிருபத்தேழாவது முதல் முந்நூற்று முப்ப தாவது சுலோகம் வரையும், பத்தாவது அத்தியாயம் எழுபத் தொன்பது எண்பத்திரண்டு, நூற்றுப்பதினைந்திலும்-காளத்திப் புராணத்திலும், மிதாட்சரம் முதலத்தியாயம் முதற்பிரிவு ௩௬௧ ௩௭0, ௩௭௪-சுலோகங்களிலும், விஷ்ணு புராணத்திலும், பகவத் கீதையிலும் விளக்கப் பட்டது. செங்கற்பட்டு மிராஸ் ரைட்டைப்பற்றி அரசாங் கத்தார் சேகரித்துள்ள ரிகார்டுகளிலே வேளாளரே நிலத் தலைவரென்பது தெளிவாக நாட்டப்பட்டது. மேற்கூறிய வடமொழி ஆதாரங்களினாலும் பிறவற்றாலும் உழவுத் தொழில் வைசியருக்கே என்பது தெளியப்படும். தென் னாட்டிலே வேளாளரே வணிகராகவும் உழவராகவும் பிரிந் தமையால் உழவர் நாலாங்குலத்தினர் எனப்பட்டனர். ஒரு வகையாரே வணிகரும் வேளாளருமாயின ரென்று ஆரிய வருண முறைப்படி நாலாங் குலத்தின ரென்பார் உழவரல்லர், சூத்திரராவரென்று தெளிக.

சூத்திரரென்பார்க்கு மனுஸ்மிருதியில் முதலத்தி யாயம் ௯௧ ஆவது சுலோகத்தில் மூன்று வருணத் தாருக்கும் பணிசெய்வதொன்றே முக்கிய தருமமாக விதித் திருக்கின்றது. மனுஸ்மிருதி ௧௧ ஆவது அத்தியாயம் உ௩௬ ஆவது சுலோகத்தில் வைசியனுக்குப் பயிரிடுதலும், வர்த்தகமும் சூத்திரருக்குப் பணிவிடையுந் தவமும் கூறப் பட்டது. யாஞ்ஞ வல்கிய ஸ்மிருதியில் சூத்திரனுக்கு இருபிறப்பாளரைச் சேவிப்பதே தக்க கருமம், பண்டங் களைக் கொடுக்கல் வாங்கலாகிய வாணிபமுஞ் செய்யலாம், சிற்பத்தொழிலாற் பிழைக்கலாமென்றும், ஹாரிதஸ் மிருதியில் இருபிறப்பாளரைச் சேவிப்பதே சூத்திரனுக்குச் சிறந்த தருமமென்றும், குப்பை களைதல், பண்ணைவேலை செய்தல், சுமை சுமத்தல், சித்திரவேலை, கூத்து வாத்தியம் வாசித்தல் முதலியனவும் உளவென்றுங் கூறப் பட்டது. பராசரஸ்மிருதியுள் மூவருக்கும் பணிபுரிதல்,

எல்லாவகைப்பட்ட சிற்பத்தொழில்களையுஞ் செய்தல், எல்லாப்பொருளையும் விற்றல் ஆகிய இவை சூத்திர கருமமென்று சொல்லப்பட்டன. இன்னும் அந்நூலுள் சூத்திரன் வேதியனுக்குப் பணிசெய்தல் மறுமைக்கேயன்றி இம்மைக்குமா மென்றுந் தமது பணி செய்யும் சூத்திர னுக்குத் தக்க சீவன வழியை உண்டுபண்ணவேண்டு மென்றும், எச்சிலன்னம் அநுபவித்து, மிகுந்த பண்டங்கள், பழைய ஆடைகள் முதலியவை சூத்திர னுக்குக் கொடுக்கப்படுவன என்றும், பாரதம் சாந்தி பருவத்துள் குடை, தலைத்துணி, அரைநாண், பாய், செருப்பு, விசிறி, உடுப்பு முதலியவை பழைமைப் பட்டால் பணிவிடை செய்யுஞ் சூத்திரனுக்குக் கொடுக்க வேண்டுமென்றுங் கூறப்பட்டது. பராசர ஸ்மிருதி இரண் டாவது அத்தியாயத்துள் சூத்திரர் இருபிறப்பாளர் பணி விடையைக் கைவிட்டுப் பிற தொழிலைக் கைக்கொண்டால் அற்பாயுளையுடையவராய் நரகத்தையடைவர் என்றமை யால் சூத்திரருக்குத் தம்பொருட்டுப் பயிரிடும் உழவுத் தொழில் இன்றென்பது தெளிவு. தொல்காப்பியத்துள்

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

என்றமையால் உழுதுண்ணும் தொழிலையே சிறப்பாக வுடைய வேளாளர் தொழுதுண்ணும் தொழிலையே சிறப் பாகவுடைய சூத்திரராகார் என்பது அங்கை நெல்லிக் கனியாம். இன்னும் காளத்திப் புராணத்தில் வருணாச் சிரமம் கூறிய அத்தியாயத்தில்,

"வணிகனுக் கிம்மையில் வாணி பத்தொடு
தணிவில்வே ளாண்மைசெய் திடல்ச துர்த்தனுக்
கிணையிலிம் மூவரு மின்பு றும்படி
தணிவிலா தவர்பணி தானி மைத்தலாம்"

என்றதுங் காண்க. வேளாள நிலத் தலைவருக்குத் தொழி லாளர்கள் பதினெட்டு வகையினராய்த் திகழ்ந்தனர்.

அவர்கள்: நாவிதர், வண்ணர், குயவர், உவச்சர், ஐவகைக் கம்மாளர், மூவகைவாணியர், மாலைக்காரர், பாணர், வாயிற் காவல் செய்யும் வலைஞர், இடையர், விருதுகூறுவோர் என் பார்கள். தொண்ட நாட்டிலுள்ள பதினெண் குடிமக்களே ஈண்டுக் கூறப்பட்டனர். வேறு மரபினரும் இப்பதினெட்டு வகையில் அடங்குவர்.

தொண்டமண் டலவரிசை மூவாறு குடிமக்கள்
சுருதிநாள் முதலா கவே
துங்கமிகு நாவிதன் குயவன்வண் ணுனேலை
சொன்னபடி யெழுது மோச்சன்
கண்டகம் மாளர்வகை யைவர்வா ணியர்மூவர்
கந்தமலர் மாலைக் காரர்
கலைமீது சரடோட்டு பாணன் றலைக்கடைக்
காவல்புரி வள்ளி வலையன்
பண்டுமுத லூரான் மறிக்குமிடை யன்விருது
பலகூறு வீரமு டையான்
பதினெண்மர் குடிமக்க ளனைவருங் காராளர்
பணிசெய்து பலமு றைமையுங்
கொண்டுபரி வட்டமுங் கட்டியே வருவரிக்
குவலய மதிக்க வேதான்
கூறரிய கச்சிவா ழேகம்ப ராலயக்
குமுதத்தி லிட்ட லிபியே''

(வேளாண் மரபு விளக்கம், எ ஆம் பக்கம்)

என்றதுங் காண்க. கம்பரும் 'பற்றுடைய பதினெண்மர் வேளாளர்முன் கையேற்று எதிர் நிற்பர்' என்று ஏரெழு பது அறுபத்தோராவது செய்யுளிற் குறித்தமை காண்க. தமிழ் நாட்டுப் பதினெண் வகைத் தொழிலாளரையுங் கூடச் சூத்திரர் என்ற சொல்லால் அழைப்பதற்கிடமில்லை. ஏனெனில், சூத்திரரென்ற சொல் வடமொழியில் தொழி லாளரைக் குறிப்பதுடன் வேறு பல இழிந்த மக்களையுங் குறிக்கப் பயன்படுகின்றது. மனுஸ்மிருதி எட்டாவதத்தி யாயம் சுகங ஆவது சுலோகத்தில் போரில் சிறைபிடிக்கப்

பட்டவனும், வேசி மகனும், விலைக்குக் கொள்ளப்பட்டவனும், குற்றத்திற்காக வேலை செய்பவனும் சூத்திரரென்ற சொல்லாற் குறிக்கப்பட்டனர். அவ்வத்தியாயத்தின் ௬௪ஐ ஆவது சுலோகத்தில் சூத்திரர் தமது பொருளுக்குரிமையுடையவரல்லரென்பது சுட்டப்பட்டது. பாரதத்துள் அனுசாசன பர்வத்தில் ஆசை, வெறுப்பு, வேட்கைப் பெருக்கம், வன்சொல், இரக்கமின்மை, தேராது செய்தல், தீராப் பிடிவாதம், மானமின்மை, செவ்வனே யொழுகாமை, பொய் புகலுதல், கோள், லோபம், அறியாமை முதலிய தீக்குணங்கள் சூத்திரன் பிறந்த அளவில் அவனுக்கு ஏற்படுவன என்றியம்பியதுங் காண்க. இக்காரணங்களால் எக் குலத்தாரையுமே சூத்திரரென்றல் இழுக்கென்பது தெளிவு. தமிழ்நாட்டில் தலைநின்ற குலத்தாராகிய வேளாளரை நாலாங் குலத்தினரென்ற காரணத்தால் அவரைச் சூத்திரரென்று கூறுதல் பெரும் பிழையாகும்.

நுண்ணறிவிலாத சிலர் வேளாளரைச் சூத்திரரெனக் கருதித் தமது கொள்கைக்கு ஆதாரமாகச் சில நூல்களில் திருத்தங்களைப் புகுத்துவாராயினர். ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலையுள், உயர்ந்தோர் மூவருக்கும் ஏவல் வழுவாத குலத்தவனை உழுவானென்றது தொல்காப்பியக் கருத்துக்கும் வடநூற் கருத்துக்கும் முற்றிலும் மாருயதாதலானும், வணிகருக்கு அவர் உழவு கூறுதலானும் 'உழுவான் உலகிற்கு உயிர்' என்று முடியுஞ் செய்யுள் நூலாசிரியரால் இயற்றப்பட்டதன்றென்று கொள்ளவேண்டும். அல்லது உழவின் பொருட்டுப் பண்ணையாளாக வேலைசெய்யும் பள்ளர் பறையரைப்பற்றி அச்செய்யுள் கூறியதென்று கொள்ளவேண்டும். அங்ஙனங் கொள்ளுதல் பொருத்தமில்லாததென்பது தெளிவு. ஆதலால், அது நூலாசிரியர் தவறு, அல்லது இடைச் செருகலென்பதே தக்க முடிவாகும். சூடாமணி நிகண்டினுள் பிங்கலந்தையிற் கூறியவாறே வேளாளர் என்னுஞ் சொல் பூவைசியர்க் குரியதென்று மொழிந்து சூத்திர ரிலக்கணத்தை,

'இந்தமுக் குலத்து ளார்க்கே யேவல்பூண் டொழுகு கின்ற
வெந்திற லாளர் தாமே விதித்தசூத் திரரென் றுருகுந்
தந்தநூ லுரைத்த வாறே சாற்றின மிவர்க டாமே
யுந்திய தொழிலுக் கெல்லா முரியவர் தெரியுங் காலே'

என்ற பாட்டினுள் வேருகக் கூறி, அச் செய்யுள்களடங்கிய தொகுதியின் கடைக் காப்பில் ''மருவிய ஏழு செய்யுள் மக்கள் தம் பெயர்க்குச் செய்தான்'' என்று முடித்தமை காண்க.

ஆறுமுகநாவலர் ஈண்டுக் கூறியவாறே சூத்திர இலக்கணங் கூறுஞ் செய்யுளினை எடுத்துவிடாது கஅ௫0 இல் அச்சிட்ட புத்தகத்தில் வெளியிட்டனர். யாது காரணம் பற்றியோ, தாம் பின்னரச்சிட்ட சூடாமணி நிகண்டின் பதிப்பில் சூத்திரருக்கு இலக்கணங் கூறிய பாட்டை எடுத்து விட்டு, வைசியர்க்குரிய இரண்டு பாட்டினையுந் திருத்தி, அவற்றுள் ஒரு பாட்டில் வேளாளரென்ற சொல்லைச் சூத்திரப் பெயரோடு சேர்த்தமைத்து, இம்மாறுதல்களுக் கேற்பவே கடைக்காப்பில் 'மருவிய ஏழு' என்பதை 'மருவிய ஆறு' என்று திருத்தியிருப்பதாகத் தெரிகின்றது. இவ்வாறேபன்னிரண்டாவது தொகுதியினும் ஒரு செய்யுளை வேளாளரைச் சூத்திரரென்னுங் கருத்துடன் திருத்தி யிருப்பதாகத் தெரிகிறது. இத்தகைய நூற்புரட்டுகளைத் தூத்துக்குடி சைவ சித்தாந்தசபை நிறுவிய காலஞ் சென்ற திருவாளர் தெ.ச.சு சுப்பிரமணியபிள்ளையவர்கள் தாமியற்றிய வேளாண் மரபுண்மை விளக்கத்தில் ௫க-முதல் கூஎ-வரையுள்ள பக்கங்களில் தெளிவாக விளக்கியுள்ளார்கள். நூல்களிலே செய்யுட் சிதையாவாறு மாறுதல் ஏற்படு வதற்கு ஈண்டுக் காட்டிய சூடாமணி நிகண்டு மாறுதல்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனுல் நாம் அறிந்து கொள்வது யாதெனில், நாவலர் போன்ற பெரியோர்கள் பதிப்பித்த நூல்களிலுங்கூடப் பொருட் பொருத்தமில்லாத செய்யுட் பகுதிகள் காணப்படின், அவை பிற்காலத்துப் புகுத்தப்பட்ட இடைச் செருகல் என்று கருதவேண்டும்

என்பதே. திருவிளையாடற் புராணத்துள்ளும், திருநகரப் படலத்துள் வேளாளரியல் கூறுஞ் செய்யுளின்கண் 'மூவர் ஓதிய தமிழ்' என்பதற்குப் பதிலாக 'மூவர் ஏவிய தொழி' லென்று இருப்பதாக ஓர் அறிஞர் கூறினர். அஃதெவ் வாறுயினும் திருக்காளத்திப் புராணத்துள் பதினொராவது வருணச்சிரம தருமம் உரைத்த அத்தியாயத்தில் வணிகருக்கு வேளாண்மையும், சூத்திரருக்கே மூவர் வழிபாடும் கூறப்பட்டமை காண்க. சேக்கிழார் பெரிய புராணத்துட் பல இடங்களில் வேளாளர் பெருமை கூறப் பட்டது. திருநாவுக்கரசு நாயனர் புராணத்தில் 'மேதக்க நிலை வேளாண் குலத்தின்கண்' என்றும், மானக்கஞ்சாற நாயனர் புராணத்தில் 'விழுமிய வேளாண் குடிமை' என்றும், சாக்கிய நாயனர் புராணத்தில் 'தகவுடைய வேளாண் குலத்துதித்தா' ரென்றும், அரிவாட்டாய நாயனர் புராணத்தில் 'தொக்க மாநிதித் தொன்மையி லோங்கிய மிக்க செல்வத்து வேளாண் தலைமையார்' என்றும், முனையடுவார் புராணத்தில் 'வேளாண் தலைமைக் குடி முதல்வர்' என்றும், சத்திய நாயனர் புராணத்தில் 'வரிஞ்சை யூரினில் வாய்மை வேளாண் குலம்' என்றும் வேளாண் மரபினரைச் சிறப்பித்துப் பாடிய சேக்கிழார் பெருமான், இளையான்குடி மாறநாயனர் புராணத்தில் 'நம்புவாய்மையின் நீடு சூத்திர நற்குலஞ் செய் தவத்தினல்' என்றியம்பி வேளாளரைச் சூத்திரரென்றார் என்பது மிகவும் அறிவிற்குப் பொருந்துவ தொன்றன்று. சூடாமணி நிகண்டில் செய்த மாறுதல்கள் போலவே இவ்வடியின் கண்ணும் சூத்திரரென்ற சொல் செருகப்பட்டிருக்க வேண்டும். 'நம்பு வாய்மையுள் நீடுமேழியர் நற்குலஞ்செய் தவத்தினல்' என்பது மூலபாடமாக விருத்தல் கூடுமென்று சில அறிஞர்கள் கருதுகின்றார்கள். வாயிலார் நாயனர் புராணத்திலும் சூத்திரரென்ற சொல் காணப்படுகின்றது. அதுவும் இடைச் செருகலே. 'தொன்மை நீடிய சூத்திரத் தொல்குலம்' என்ற அடியின்கண் 'தொன்மை; தொல்' என்ற இரண்டு சொற்கள் வருதல் மிகையாகும். மிகைபடக் கூறுங் குற்றம் ஆசிரியர் சேக்கிழார்பாற் காணப்

படாமையின், சூத்திரத்தொல்குலம் என்ற பகுதி அவர் வாக்கன்றென்பது தெளிவு. 'தொன்மை நீடிய வாய்மை வேளாண்குல' மென்பதே மூலபாடம் என்பாருமுளர்.

ஒரு சாரார் வேளாளரைச் சற்சூத்திரரென்பர். சற் சூத்திரரென்ற சொல் நல்ல சூத்திரரென்று பொருள்படும். நல்ல சூத்திரர் இருப்பதுபோலவே நல்ல வைசியர், நல்ல க்ஷத்திரியர், நல்ல பிராமணர் முதலியோரும் உலகத்திலுள்ளாராதலின் சூத்திரரை மாத்திரம் சற் சூத்திரர், அசற் சூத்திரர் என்று பிரித்தல் இயைபில்லாத தாகும். அங்ஙனமாயின், இப் பகுப்பு ஏற்படுத்துவதற்குக் காரணம் என்னையெனின்? சுமார்த்த நெறியைச் சைவ நெறியொடு மயங்கக் கொண்டமையே யாமென்க. வட மொழி வேதப்படி நூலணிந்து வடமொழி வேதமோதி, அதனுட் கூறியவண்ணம் பல தெய்வங்கட்கு ஊன்வேள்வி செய்பவர்களே உயர்ந்த வருணத்தார் என்ற கொள்கை யானது தமிழ் நாட்டிற் கல்லாமாந்தர் நடுவில் நிலைபெற்ற காலை, அவ் வைதிக முறையைத் தழுவாது செந்தமிழ் அருண் நூல்களை யோதிச் சிவவழிபாடும், சிவ வேள்வியு மியற்றும் வேளாளர், நம் நாட்டினர் கிறித்தவர்களால் அஞ்ஞானிகளென் றழைக்கப்படுதல்போல, சுமார்த்தரால் சூத்திரரென்றழைக்கப்பட்டனர் ஆதலால், வேளாளரைச் சூத்திரரென்றல் மதவேறுபாடு பற்றியே யாமென்க. சாதி என்பது தொழில்பற்றியே வகுக்கப்பட்டதாதலின் சாதியையும், மதத்தையும் குழப்புதல் தவறாகும். ஒரு மதத்தார் அன்னிய மதத்தாரைத் தாழ்ந்தவரென்று இகழ்தல் ஒருபாற் கோடியமதப் பற்றினால் விளைவதாதலின், அவ் விகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டு மக்களின் மரபைத் தீர்மானித்தல் இழுக்கிய முறையாகும். சுமார்த்தர் உபநயனத்தைத் தங்கள் சமயம் புகுஞ் சடங்காக வைத்துக் கொண்டதுபோலச் சைவர்களுஞ் சிவதீக்கையைக் கொண் டுள்ளார்கள். வேளாளருள் வைணவருக்கு அங்ஙனமே முத்திராதாரணம் என்னுஞ் சடங்கு விதிக்கப்பட்டுள்ளது. பூணூலென்பது ஆதியில் தோள்மேலிட்ட ஆடையைக்

குறித்து நின்றது. பராசரஸ்மிருதி இரண்டாம் அத்தியாயம் நான்காம் அதிகாரத்தில் இருடிசிங்க முனிவரென்பவர் ஆடையாற்ருனே பூணூலைத் தரிக்கலாம்; அது கிடையா விடத்து மூன்றிழை நூலினுலாவது அதனைத் தரிக்கலாம் என்று கூறியதாகக் கேட்கப்படுகிறது. ஆடை கிடைக்கப் பெருது நூலாலதனைத் தரிக்க முயன்ற பிராமணருக்கு அதை எப்போதுந் தரித்துக்கொள்ளுதல் எளிதே. தமிழ் நாட்டு வேளாளர் திருநீற்றினையுங் கண்மணியினையுமே சிறந்த சமய அடையாளங்களாகக் கொண்டனரே யொழியப் பூணூலினை எப்பொழுதும் அணிந்துகொள் வதைச் சிறப்பாகக் கொள்ளவில்லை. நூலுஞ் சிகையு மிருப்பதனுல் பிரமத் தன்மை வராதெனவும், தன்னை யறிதலே பூணூலணிதலெனவும், இறைவனை அறியு ஞானமே சிகையெனவும் தமிழிலே திருமூல முனிவரும், வடமொழியிலே ஜாபால சுருதியில் யாஞ்ஞுவல்கியரும் கூறிப்போந்தனர். பிப்பலால சுருதியில் மேலான யோகத்தினை அனுட்டித்திருப்பவன் வெளிச்சூத்திரத்தினை ஒழிக்க வேண்டுமென்று கூறப்பட்டது. வியாச ஸ்மிருதியில் கருமஞ் செய்து கொண்டு இருக்கும் வரையில் உபவீதத்தினைத் தரிக்கவேண்டும். கருமத்தோடு இதுவும் விடப்படும் என்று விதித்த முறைக்கேற்ப, வேளாளர் பலருஞ் சமயச் சடங்கியற்றுங் காலங்களில் பூணூலைத் தரித்துக்கொள்வதும் சடங்கு முடிவில் அதனைத் தவிர்த்து விடுவதும் வழக்கமாக விருக்கிறது. பூணூலணிவது உயர்மரபிற் கடையாளமெனிற் ருெழிலாளிகள் வகுப்பைச் சார்ந்த பலர் பூணூலணிதல் மாத்திரையானே மேம் பாடுற்றவராவரா ? ஆகாரென்பதே திருமூலராற் குறிப் பாலுணர்த்தப்பட்டது.

'நூலது கார்ப்பாசம்' 'நுண்சிகை கேசமாம்' என்றது காண்க. கார்ப்பாசம் என்பது பஞ்சு. கேசம் என்பது மயிர். நூலுஞ் சிகையும் பஞ்சு மயிருமே யாமென்றமையால், அவை மாத்திரமே ஒருவனுக்கு மேன்மை தராவென்பது பெறப்பட்டது. இதுகாறுங் கூறியவாற்ருல் பூணூலணி

யாமைபற்றி வேளாளரைச் சூத்திரரென்றல் தவறு என்றது காட்டப்பட்டது.

தமிழ்நாட்டிலே வேளாளரே உயர்ந்த மரபினராவர். சுமார்த்தநெறி ஒழுகும் பிராமணர், தம் நெறியில் ஒழுகும் ஆரிய வருணக் கொள்கையுடைய வேளாளரையே வைசிய ரென்பது பொருந்தும். தமிழ்நாட்டுச் சிற்சில பகுதியில் ஊனுணவுகொண்டு சைவநெறியில் வாராத வேளாளரும் தொழில்பற்றி வைசியரென்ற பெயர்க்குரியரே. வட நாட்டிலே பிராமணருள் ஊன் கொள்வாரும் பலராதலின் ஊனுணவு இழிகுலத்தைக் குறிக்கும் என்பது ஆரியவருண முறைக்கு ஒத்ததன்று. ஊனுண் வேளாளருள் நிலைத் தலைவராய் உள்ள இளங்கோக்களை அரசவகையினரென்று கூறுதலும் பொருத்தமே. சுமார்த்த வைதிகநெறி முறைப்படி ஒழுகாது உலகக் கல்வி கற்றுப் பொருளீட்டலிற் பொழுது போக்குவோரை வேளாளரினும் உயர்ந்தோ ரென்று கொள்ளுதலுந் தவறே. ஆசிரியர் திருவள்ளுவனர் (குறள், கூஎஉ)

> "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்"

என்றமையால், பிறப்பு மாத்திரம்பற்றி மேன்மை கூறுதல் தகாது.

இனிச் சைவ நெறியைத் தமது சமயமாகக் கொண்ட வேளாளர் சுமார்த்த நெறியைத் தமக்கு வேருகக் கொள்ளுதலால் மதவேறுபாட்டைக் கவனியாது சைவ வேளாளரினும் சுமார்த்தப் பிராமணர் உயர்ந்தோரெனக் கூறுதல் பெரியதொரு தவருகும். சிவநெறி நிற்போர் பிறநெறி நிற்கும் எக்குலத்தாரையும் தம்மின் உயர்ந் தோராகக் கருதமாட்டார். சிவநெறி ஈதென அறியாது சுமார்த்தர் கொள்கையைத் தழுவிய வேளாளர் சிவநெறி நிற்கும் வேளாளரோடு கலந்து சிவன்கோயில் முதலிய

பொதுநிலேயங்களில் அறஞ்செய்தற்கும் அதிகாரஞ் செய்தற்கும் உரிமை பெற்றதனுலேயே அவ்விடங்களிற் சுமார்த்த மதத்தினர் கலப்பேற்பட்டுச் சிவநெறியின் உண்மை வடிவம் மாறுபட்டு நிற்கின்றது.

சைவ வேளாளர் சைவசமயத்தை மேற்கொண்ட மக்கட் கூட்டத்தில் எந்நிலேயரென்று தீர்மானிப்பது வேண்டற்பாலதொன்றே. ஆதிசைவரும், தமிழ்நாட்டு முடியுடை வேந்தரும், குறுநில மன்னர் சிலரும் முன்னுளிலே வேளாளரிற் பிரிந்தோர் என்பது மேலே காட்டப்பட்டது. இந்நாளிலே சைவ வேளாளர் தமிழ் மறை ஓதுதலானும், சிவாகமங்களுட் கூறப்பட்ட ஐவகை வேள்விகளே[1] இயற்றுதாலனும், திருநீறு கண்மணி என்பனவற்றைச் சிறந்த சமய அடையாளமாகக் கொள்ளுதலானும், எச்சடங்கிலும் கள், ஊன் கலவாத தூய உணவு கொள்ளுதலானும், பிறவுயிருக்கிரங்கி ஈயும் அருளொழுக்கம் உடைமையானும், ஊன் பயில் வேள்வி இயற்றும் சுமார்த்தப் பிராமணரினும் ஒருவாற்ருனும் தாழ்ந்தோ ராகா ரென்று தெளிக.

குற்றமற்ற எத்தொழிலேயும் எக் குலத்தாரும் பிழைப்பின்பொருட்டு ஏற்றுச் செய்யும் இக்காலத்திலே பண்டைத் தொழில்பற்றி உயர்வு தாழ்வு பேசுதற் கிடமில்லே. சைவ வேளாளருள் சமய விசேட நிருவாண தீக்கைபெற்று ஆசிரியத் தன்மை பொருந்திச் சைவச் சடங்கியற்றுவித்தலாகிய தொழிலே மேற்கொண்ட சைவக் குருக்கண்மார், சைவாசிரிய இலக்கணம் நன்கு வாய்க்கப் பெருது சிவநெறி ஒழுகாது சுமார்த்த நெறியை மேற் கொண்டொழுகும் ஆதிசைவரினும் ஒரு சிறிதும் தாழ்ந் தோரல்லர் என்று தெளிக. சைவக் குருக்கண்மார் ஆசிரியத் தன்மையால் தானம் ஏற்பதற்குச் சிறந்த பாத்திரராவர்.

---

1. ஐவகை வேள்வியாவன : கருமயாகம், தவயாகம், செப யாகம், தியானயாகம், ஞானயாகம் என்பன.

சிவாகமங்களுள் தீக்கைப் பேறு பற்றியே மேன்மை தாழ்மை கணிக்கப்பட்டதென்பது மகேசுர பூசையினில் ஆறுமுகநாவலர் சிவாகமக் கருத்தை வெளியிட்ட இரண்டாம் சைவ வினுவிடை உரைப்பகுதியால் நன்கு விளங்கும்.

வைதிகப் பிராமணர் ஆயிரம் பேருக்கு அன்ன தானஞ் செய்த பலமும், சமய தீட்சிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும்.

வைதிகப் பிராமணர் பதினுயிரம் பேருக்கு அன்ன தானஞ் செய்த பலமும், விசேட தீட்சிதர் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும்.

வைதிகப் பிராமணர் லட்சம் பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும், நிருவாண தீட்சிதர் ஒருவருக்கு அன்ன தானஞ் செய்த பலமும் ஒக்கும்.

வைதிகப் பிராமணர் கோடிப்பேருக்கு அன்னதானஞ் செய்த பலமும், சைவாச்சாரியார் ஒருவருக்கு அன்ன தானஞ் செய்த பலமும் ஒக்கும் என்றது காண்க.

சைவவேளாளருள் சிவாக்கினி வளர்த்தல், சிவபூசை செய்தல் இவற்றைச் சீடர் பொருட்டுச் செய்வித்தல் தமிழ் மறை ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத் தொழிலுடைய ஆசிரியன்மாரும், ஓதுவா மூர்த்திகளும் உண்மையானும், சமயபோதனை இயற்றும் பேராசிரியர் பலர் உண்மையானும், அரசு, அமைச்சு படைத்தலைமை முதலியவற்றிற் குரிமையும், அரசர்க்குரிய பத்துறுப்பும் வேளாளருக் குரியன வென்று கேட்கப்படுத லானும், வணிகமும் உழவும் வேளாளருக்குத் தொழிலாத லானும் ஆரிய மூவருணப் பெருமையும் வேளாண் மரபிற் றிருத்தல்பற்றிக் கல்வியிற் பெரிய கம்பர்,

"சாதிவளம் படைத்துடைய தாயனைய காராளர்
கோதில்குலம் தனக்குநிகர் உண்டாயிற் கூறீரே"

என்றனர். வேளாளர் பண்டுதொட்டுச் சிவபெருமானையே பெரிதும் வணங்கினர் என்பது பெரிய புராணத்தில்,

"நஞ்சை யமுது செய்தவருக்கு
இம்பர்த் தலத்தில் வழியடிமை என்றுங் குன்று மியல்பில்
தம்பற் றுடைவே ளாண்குலத்தில்" [வருக்

என்பதால் இனிது விளங்கும். சிவபெருமானை உருத்திரராகவும் வேளாளரை வைசியராகவும் கருதிய ஒரு புலவர், வேதியருக்குத் தெய்வம் பிரமன், வேந்தர்க்குத் தெய்வம் விண்டு, வைசியர்க்குத் தெய்வம் உருத்திரன், சூத்திரருக்குத் தெய்வம் இந்திரன் என்ற கருத்துப்பற்றிப் பின் வரும் செய்யுளைப் பாடினரென்க.

"பிரமனந் தணரே யாகப் பெருநில வேந்தர் தாமும்
திருமரு மார்ப னாகத் திகழுருத் திரர்க ளென்பார்
பொருவிலா வசிய ராகப் புகலுஞ்சூத் திரர்க ளென்றும்
தருநிழ லமரர் வேந்தன் றானெனச் சமைத்த வாறே."

இவ்வளவில் வேளாள மரபியல் ஆராய்ச்சியை முடித்துச் சேக்கிழார்புராண ஆராய்ச்சிக்கு மேற்செல்வாம்.

(புராணத்தினுள் இரண்டாம் பாட்டினுள் நாற்பத் தெண்ணாயிரம் வேளாண்குடிகளை ஒரு சோழன் தெரிந்து தொண்டமண்டலத்தில் குடியேற்றினதாக இயம்பப் பட்டது. வேளாளக் குடிகள் பன்னிரண்டாயிரமெனப் பிற்காலச் செய்யுட்கள் பகர்கின்றன. 'மிராசு ரைட்' என்னும் நூலில்,

"பார்கொண்ட கோத்திரம் பன்னிரண்டா யிரம்முன்
பகர்ந்தபட் டயமுள் ளது"

என்றும்,

"தாட்டொழு கோத்திரங்கள் சகத்திரம் பன்னிரண்டாம்"

எனவும் வருவன காண்க, நாற்பத்தெண்ணுயிர மென்பதன் காரணம் இக்காலத்திற் புலப்பட வழியில்லை. தொண்டநாடு நாற்பத்தெண்ணுயிரம் குடிகட்கு இடங் கொடுத்தல் இயலாத தொன்றில்லை.

குறும்பரசர் வதிந்த இருபத்துநான்கு கோட்டைகளையும், சோழமன்னன் கைப்பற்றி இருபத்து நான்கு வேளாண் தலைவரிடம் ஒப்புவித்த காலை ஒவ்வொரு தலைவர் ஆட்சியினும் இரண்டாயிரம் குடிகள் இருந்திருத்தலியல்பே. பிற்காலத்திற் பல காரணங்களால் வேளாண் மரபினர் குறைந்து பன்னீராயிரங் குடிகளே நிலைபெற்றிருத்தலுங் கூடும். தில்லை மூவாயிரவருள் மிகுதிப்பேர் இப்பொழுது மறைந்து போனமையுங் காண்க. எச் சோழன் வேளாளரைக் குடியேற்றினனென்று தெரியவில்லை. ஆதொண்டைச் சக்கரவர்த்தி, தொண்டைமான் இளந்திரையன் என்னுஞ் சொற்றொடர்கள் மணிமேகலையிற் பேசப்பெற்ற நெடுமுடிக்கிள்ளிக்கு நாக நாட்டு மன்னன் மகளாகிய பீலிவளை பயந்த அரசிளம் புதல்வனைக் குறிக்குமாயின், நெடுமுடிக்கிள்ளியே குடியேற்றிய சோழனுதல் வேண்டும். அவன் கரிகால் வளவனுக்குப் பின் ஆண்டவன். காஞ்சியில் திருப்பணி யியற்றிய கரிகால் வளவன் காலத்திற்கு முன்னேயே குடியேற்றம் நிகழ்ந்திருக்குமாயின் குடியேற்றிய சோழன் பெயரை அறிய வழியில்லை.

சேக்கிழார் நாயனரது பெற்றோர் பெயர்களைப் புராணத்துட் கண்டிலம். காலஞ்சென்ற உயர்திரு கலியாணசுந்தர யதீந்திரரவர்கள் எழுதிய சேக்கிழார் சுவாமிகள் சரித்திரத்தில் சேக்கிழாரின் தந்தை பெயர் வெள்ளியங்கிரி முதலியாரென்றும், தாயார் பெயர் அழகம்மை என்றுங் கூறப்பட்டிருக்கிறது. இவற்றை அவர்கள் எவ்வாறு அறிந்தனரென்று விளங்கவில்லை.

திருக்காஞ்சிநகர்க்கண் இறைவனைத் தொழுது உமையம்மையார் அறம் வளர்த்தகாலை வேளாளருக்கு ஒன்பது உழக்கு நெற் கொடுக்க, அவர்கள் அவற்றைப் பெற்று விதைத்துப் பயிர் செய்து உலகத்திற்கு வேண்டும் உணவுப் பொருளைத் தந்தனரென்ற வரலாறு பெரிய புராணம், காஞ்சிப்புராணம் முதலிய நூல்களிற் கேட்கப் படுகின்றது. உயிர்கட்கு உணவளிப்பது அன்னை யாகலின், எவ்வுயிர்க்குந் தாயாகிய உமையம்மையார்க்கு வேளாண்டலைவர்கள் உழவுத் தொழில் செவ்வையாய் நிகழ்தற்பொருட்டு ஒன்பது வகைத் தானியங்களையும் ஓரளவாகப் படைத்து வழிபட்டு அவற்றைக் கொண்டு முதன்முதல் உழவு இயற்றிப் பெரும் பயன் பெற்றதையே இக்கருத்துக் குறிக்குமென்பாருமுளர். அற்றன்று, இறைவனது திருவருட்சத்திவடிவாகிய உமையம்மையாரே மன்னுயிர்களை உய்யக்கொள்ளும் வழியைத் தாமே காட்டும் பொருட்டு அருந்தவமிக்க அடியவர்களுக்குக் கச்சியிற்றேன்றி அறங்கள் பலவற்றை வளர்த்த காலை ஆது லர்க் கன்னமிடும் அறஞ் செவ்வையாய் நிகழ்தற் பொருட் டுத் தவத்திற் சிறந்த வேளாண்டலைவர் சிலர்க்கு ஒன்பது வகை விளைபொருள்களையும் ஓரளவாகக் கொடுத்து உணவுப்பொருள்களை விளைவித் தருளினமையே இவ் வரலாறு குறிக்கும் என்று கொள்ளுதலே தக்க தென்ப. வேளாண்டலைவர் அறுவரென்று **முதுமொழிச்சீர் அகவல்** என்பதனுட் கூறப்பட்டது. வேளாளருக்குப் 'பிள்ளை, முதலியார்' என்ற பெயர்க ளமைத்தற்குக் காரணம் பின் வரும் அடிகளிற் காண்க :

''புனிதைசீர்காம பீடத்தெம் அன்னை புதல்வராய் நென்முதல் பெற்றுத், தனியற மதலை யாதலான் வேளாண் தலைவர்தாம் பிள்ளையே'' எனவும்,

''சைவமே வாழச் செம்பியன் கேட்பத்
தாவிலாத் திருத்தொண்டர் சீர்த்தி
உய்வகைச் சிற்றம் பலத்தொரு முதலி
யுவந்தருண் மொழிமுத லாகத்

தெய்வமாக் கதைமுன் செப்பிய திறத்தால்
திகழ்தரு முதலியே''

எனவும், 'நைவறு மேவ லாற்றலா ளுலோர் நற்பத்த' ரெனவும் மண் வழங்கும்.

சேக்கிழார் புராணத்துள் நானில முழுவதும் விண்ணவ ருதவிகொண்டு உழவு நடந்தது என்று கூறிய பாட்டு உயர்வு நவிற்சியின்பாற்படும். இக்கருத்து 'முதுமொழிச்சீர் அகவல்' என்பதனுள்ளுங் கூறப்பட்டது.

''மூல மாக்கி முழுநிலஞ் செய்யாக்
கார்கோ ளேரியாக் கடல்நீர் கட்டினன்
மேற்றிசை வருணுறு வாற்றுஞ் சுமையாள்
வெள்ளை நாகனும் வெருவரு மறலி
யள்ளலங் கழனி யுழூகரும் பகடாம்
பாற்கடல் பிறந்த பைம்பொழி லலமா
வமைத்தன லாய்ந்தனள் அறத்தின் கிழவ
ரிவரென நாடியெம் மகார் கிழாரென
நல்லறம் வளர்க்குதிர் நவையின் றிசினே''

பழையனூர் நீலி கதை தேவாரத்துள்ளும் ஞான சம்பந்தராற் கூறப்பட்டது.

''வஞ்சப் படுத்தொருத்தி வாணுள்கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூ ராலங்காட்டெம் மடிகளே''

என்றது காண்க.

நீலிகதை வருமாறு:— வேதியனெருவன் மனையாளுடன் வாழுங்காலத்துப் பரத்தை யொருத்தியைச் சார்ந்து கைப்பொருள் முற்றுமிழந்து வறியனுயினுன். ஒருநாள் தன் மனைவியை அவள் பெற்ற குழந்தையோடு அவள் தாய் வீட்டினின்றும் அழைத்து வரும் வழியில் அவள் அணிந்திருந்த நகைகளைப் பரத்தையருக்குப்

பயன்படுத்தக் கருதி அவற்றைக் கொடுக்க அவள் மனம் இசையாளென்று கண்டு, அங்கொரு பாழ்ங்கிணற்றில் அவளை மகவோடும் வீழ்த்திவிட்டு அணிகளைக் கைக் கொண்டு விழைந்தவிடஞ் சென்றொழிந்தான். மறு பிறப்பில் அவன் வணிகனாகப் பிறந்து பெரும் பொருள் படைத்து வாணிகம் பேணி ஒழுகும் நாளில் பெரியவ ரொருவர் அவன்பாற் சென்று அவனால் வழிபாடுற்றுப் பிரியுங்காலை, 'ஐயா; நீ வடக்கே செல்லற்க! முற்பழி யொன்றுளது. எத்திறத்தும் உன்னைப் பழிவிடாதாயினும், இம் மந்திரவாளை நீ கையில் வைத்திருக்கும்போது அஃது உன்னை வருத்தமுடியா'தென்று சொல்லி அதனைக் கொடுத்துப் போயினர். சின்னாட் கழித்து அவ் வணிகன் வர்த்தகத்தின் பொருட்டுப் பழையனூர்க்குச் சென்றிருந்த போது முற்பழிவாங்கச் சமயம் பார்த்து ஆங்கிருந்த பார்ப்பன நீலி மகவுடைய பெண்போன்ற வடிவம் பூண்டு அவ்வூர் நீதிமன்றத்தினராகிய வேளாளர் எழுபதின் மருடைய அவைக்களம் புகுந்து "பெரியீரே! இவ் வணிகன் என் கொழுநன்; இப் பிள்ளை அவனுக்கு என்னிடம் பிறந்தது; இவன் நெடுநாளாக என்னை வெறுத்துத் தள்ளிக் காமக்கிழத்தியர் வசப்பட்டான் ஆதலின், இவனோ டெங்களைக் கூட்டுவீராக" என்றனள். அவர்கள் இதனைக் கேட்டு வணிகனை வினவியபோது அவன் அவர்களை நோக்கி 'இவள் என் மனைவியல்லள், பெண்வடிவெடுத்து வந்த பேய்; இவள் என்னைக் கொல்லவந்தாள்' என்றான். அதைக் கேட்டவர்கள் ஐயுற்றபோது, அவ் வஞ்சப்பெண், அவன் குலமுறை யாவுங் கூறி அழுதமை கண்டு, அவையோர் இரக்கமுற்று, வணிகனை வலிந்து உடன் படுத்தி, அவனுயிர்க்குத் தம்முயிரினைப் பிணை என்று உறுதி கூறி, அவளோடு அவனை ஓரிடத்து ஓர் அறையுள் இருத்தினர். அவன்பால் மந்திரவாளினைக் கண்டச்சுற்ற நீலி சபைவாணர்க்கு அதைத் தெரிவித்து முறையிட, அவர்கள் அதனையும் அவனிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். சபையோர் தத்தம் மனைக்கு ஏகின பின் அன்றிரவு அந்நீலி வணிகன் உடலை இருகூறாக்கி உயிர்

வவ்விச் சென்றனள். மறு நாட்காலை அவைக்களத்தோர், அறைக்குட்சென்று வணிகனுடல் இருதுணிபட்டுக் கிடப்பக் கண்டு பழிக்கஞ்சித் தாம் கூறிய சொற்பிழையாமைப் பொருட்டு நெருப்பு வளர்த்து அதனுள் அவர்கள் எழுபதின்மருங் குளித்து ஆலங்காட்டடிகள் திருவடிநிழலெய்தி நிலைத்த புகழுடம்பு பெற்றனர்.

வேளாளர் வயலில் நடும் நாற்று முடியைப்பற்றிக் கம்பர் கூறிய கருத்துச் சேக்கிழார் புராணத்தில் 'காராளரணி வயலில்' என்று தொடங்குஞ் செய்யுளிலமைந்துள்ளது.

"தென்னன்முடி சேரன்முடி
தேங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த
காசினியோர் தங்கண்முடி
இன்னமுடி யன்றியுமக்
கெடுத்துவைத்த முடிகளெலாம்
மன்னுமுடி வேளாளர்
வயலின்முடி கொண்டன்றே."

இன்னும், ஏரடிக்குங் கோலைப்பற்றியும் ஏரெழுபதில் உள்ள பாட்டு வருமாறு:

"வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோடைக் கடற்றானைப் போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோல் ஏரடிக்குஞ் சிறுகோலே."

திருத்தொண்டருள் பதின்மூவர் வேளாளராயினும், ஆதி சைவ நாயன்மாரையும் உடன் சேர்த்தால் தமிழ்ச் சைவ மரபினர் தொகை மிகுதிப்படும்.

சைவ சமயாசாரியர் நால்வருள் திருஞானசம்பந்தப் பெருமானைச் சங்கராசாரியர் சௌந்தரியலகரியுள்

"திராவிட சிசு" என்றமையாலும், பெரியபுராணத்துள் 'மரபிரண்டும் சைவநெறி வழிவந்த வாய்மையவர்' என்றமையாலும் அவரைத் தமிழந்தணருள் ஒருசாரார் என்பாருமுளர். தமிழந்தணர் ஆதியில் வேளாள ரென்பவரினின்றும் பிரிந்தவரென்ப. திருஞானசம்பந்தர் பரம்பரை சைவ வேளாள ஆசாரியர்களாலேயே இன்னும் மதுரையிற் போற்றப் பெற்று வருகிறது. திருநாவுக்கரசர் வேளாளர். சுந்தரமூர்த்திசுவாமிகள் ஆதி சைவரென்பது தெளிவு. மணிவாசகப்பெருமான் ஆதிசைவரென்றே வட மொழி ஆலாசியங்கூறும். ஆதலாற் சைவத் திருநெறித் தலைவர் நால்வரும் வேளாண் குலத்தொடர்புடையா ரென்று கருதுதல் மிகையாகாது. பட்டினத்தடிகளும் வணிகம் பயின்ற வேளாள வகுப்பினரே. நாட்டுக் கோட்டைச்செட்டிமார்களும் பட்டினத்தடிகளைத் தம்மினத் தவரெனக் கூறுப. ஆதியில் அவர்கள் வணிக வேளாள வகுப்பினராய்ப் பின்னர்ப் பிற மரபினரொடு கலப்புற் றிருத்தல் கூடும். பன்னிருதிருமுறை வகுத்த நம்பியாண் டார் நம்பிகள் ஆதி சைவராயிருத்தல் வேளாளருக்குப் பெருமை தருவதே. சைவ சந்தாநு சாரியர்களுள் முதல்வராய மெய்கண்டசுவாமிகள் வேளாளரென்பது வெளிப்படை. மெய்கண்டதேவர் பரம்பரையிலே ஏற் பட்டுள்ள துறைசை, தருமபுரம், திருவண்ணுமலை முதலிய பல சைவ ஆதீனங்களின் தலைவர்களும் சைவ வேளாளர்களே. மெய்கண்டதேவரின் முதல் மாணுக்கர் அருணந்திசிவம் ஆதிசைவர். இவர் மாணுக்கரின் மாணுக்கர் உமாபதிசிவம் தமிழந்தணர். பிற்காலத்திற் றிகழ்ந்த சிற்றம்பலநாடிகள், குமரகுருபரசுவாமிகள், தாயுமான சுவாமிகள், சிவஞான சுவாமிகள், கச்சியப்ப முனிவர் முதலிய பெரியோர்கள் சைவ வேளாள மரபினரே. இதுகாறுங் கூறியவாற்ருற் சைவசித்தாந்தத் திருநெறியை நிலைநாட்டிய பெரியார் பலரும் சைவ வேளாண் குலத்தொடு தொடர்புற்றவரென்பது நன்கு தெளியப்படும்.

ஆசிரியர் சேக்கிழார் இளமையிலேயே நுண்ணிய புலமையுடையாரென்பதற்கு எடுத்துக்காட்டாக ஓர் ஐதிகம் கேட்கப்படுகின்றது. அவர் திருக்குறளிற் பயிற்சி மிக்கவராய்க் கடலினும் நிலத்தினும் மலையினும் பெரியவை இன்ன இன்னவை என்பதைத் திருவள்ளுவர் நூலிலிருந்தே எடுத்துக் காட்டியதாகக் கேட்கின்ருேம். அத் திருக்குறள் வெண்பாக்களாவன:

"பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது" (குறள், ௧0௩)

"காலத்தினுற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞானத்தின் மாணப் பெரிது." (குறள், ௧0௨)

"நிலையில் திரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது." (குறள், ௧௨௪)

ஆசிரியர் சேக்கிழார் கல்வியறி வொழுக்கங்களிற் றலைநின்றதின் பயனுகச் சிவவழிபாட்டிலுஞ் சிறந்து விளங்கினுரென்பது அவர் திருநாகேச்சுரப் பெருமானிடம் வைத்த பேரன்பினுற் றெளியப்படும். அவர் முதற்குலோத்துங்க மன்னனுக்கு முதலமைச்சராயிருந்தார் என்பது சரித்திர ஆராய்ச்சியால் விளங்குகின்றது. இவர் தொண்டநாட்டினராயிருப்ப இவர்க்குச் சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரத் திருப்பதியின்கண் வீற்றிருக்குஞ் சிவபெருமானிடத்து மிகுந்த ஆர்வம் விளைந்தமை இவர் அமைச்சராயதற்குப் பின்னேயாமென்க. திருநாகேச்சுரத்தில் இவர்க்குத் தனியன்பு முகிழ்த்தமைக்குக் காரணம் இனிது விளங்கவில்லை. அத் திருப்பதியின்கண்ணே இறைவன் இவர்க்குச் சிறப்பாகத் திருவருள் புரிந்திருத்தல் கூடும். அன்பருள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு திருப்பதியின்கண் திருவருட் பேறுற்ற காரணம் பற்றிச் சிறந்த ஆர்வம் விளைதலியல்பே. இறைவன் ஒவ்வோர் இடத்தில் வெவ்வேறன்பர்க்கு அருள் சுரத்தற்குக் காரணம் அவ்வவ் விடங்களில் அவ்வவர் முற்பிறப்பிற் றவமியற்றினமையே

என்பாருமுளர். திருவருள் பெறுதற்குரிய அமையத்தில் அன்பர்கள் எத் திருப்பதியிலிருக்க நேருமோ, அத் திருப்பதியில் அவர்களுக்கு இறைவன் அருள்புரிந்த காரணத்தால் அத் தலத்தை அவர்கள் பெரிதும் விழைவ தியல்பே. மணிவாசகப் பெருமானுக்குத் திருப்பெருந் துறையிற் பேரன் புண்மை வெளிப்படை.

பல்லவமன்னர் உரிமைகளையுஞ் சோழ அரசர் கைப் பற்றிய பின்னர், முதலமைச்சர்க்குப் பல்லவரென்ற பட்ட மளித்தல் மரபாயிற்றுப் போலும்! பல்லவருங் காஞ்சியில் ஆண்டனர். சேக்கிழாருந் தொண்ட நாட்டினர். முதலமைச்சுத் தொழிலோடு சோழர்க்கடங்கிய சிற்றரசர் போற் றொண்டநாட்டைப் பாதுகாக்கும் அதிகாரம் பெற்றுச் சேக்கிழார் பெருமான் இப்பட்டந் தாங்கியிருத்தல் கூடும்.

---

# 4. பெரியபுராணத் தோற்றம் ✓

ஆசிரியர் **சேக்கிழார்** அநபாய சோழனுக்கு அமைச்சராய்த் திகழ்ந்த காலத்திற் சமணரது பெருங் காப்பியமாகிய சீவகசிந்தாமணி என்னும் நூலை உலகத்திற் பலரும் படித்துப் படித்துப் பெருமகிழ்வுற்றனர். உயிர்க் குறுதி பயக்கும் உண்மைப் பொருள் கற்பியாத அந்நூலைக் கற்றல் பெரும்பயன் பயப்பதில்லையென்பார், (சேக்கிழார் புராணம் உ௦ இல்)

"உலகிலுளோர் சிலர்கற்று நெற்குற் றுண்ணுது
உமிகுற்றிக் கைவருந்திக் கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார்"

என்ருர். சோழமன்னனும் சிந்தாமணிப் பயிற்சிலேயே மிகுதியும் ஈடுபட்டு அதைக் கற்பதிலே பொழுது போக்குவதைக் கண்ட சேக்கிழார் பெருந்தகை அவனை நோக்கிச் 'சிந்தாமணி நூலானது சமணர் கட்டிய பொய்க் கதையினைக் கூறுதலால், மறுமைக்கு யாதும் பயன் தராதது. இம்மைக்கும் அத்தகைத்தே. சிறப்புமிக்க சிவகதையே இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயக்கத் தக்கது' என்று கூறினர். அப்போது அரசன் 'இது பயனற்ற கதையாயின் இருமைக்கும் நன்மை பயக்கத்தக்க சிவகதை யாது? அதனைக் கற்றவர்கள் யார்? அது சீவக சிந்தாமணிபோல இடையில் வந்த புதுக்கதையோ? அல்லது பழங்கதையோ? அதற்கு முன்னூலுண்டோ? உலகத்திலே அக்கதையை மொழிந்தவர் யாவர்? கேட்டவர் யாவர்? பெருந்தவத்தினர் கதையோ? தவங்கிடந்து

பேறு பெற்றவர்களின் கதையோ? இவற்றையெல்லாம் பொருத்தமாகக் கூறுக'' என்றனன். அப்போது சேக்கிழார் பெருமான், 'திருத்தொண்டர் பெருமை கூறுஞ் சிவகதையே நற்கதை. திருவாரூர்ப் பெருமான் அடியெடுத்துத் கொடுக்கத் திருநாவலூர் நம்பியாகிய சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டர் பெருமையை விளக்கினர். அத் திருத் தொண்டத்தொகையின் பொருளைத் திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பிக்கு எடுத் துரைப்ப, அவர் திருத்தொண்டர் திருவந்தாதி என்பதைக் கலித்துறை யாப்பிற் பாடி முடித்தார். அக் கலித்துறை யந்தாதியைத் திருமுறை கண்ட இராசராச மன்னர், சிவாலயதேவர் முதலிய யாவரும் இனிது பாராட்டினர்' என்றனர். அதைக்கேட்ட மன்னன், 'திருத்தொண்டரது வரலாற்றினை முறையாகச் சொல்லுவீராக' என்று பணித்தனன். அப்போது குன்றைவேந்தராகிய சேக்கிழார் தில்லைவாழந்தணர் முதல் திருநீலகண்டத்துப்பாணர் ஈருகவுள்ள அடியவர் கதைகளை விரித்துரைக்க, அதனைக் கேட்ட வளவன் அடியார்களன்பு செலுத்திய முறைமை யையும், சிவபெருமான் அவர்கட்கு எளிவந்து அருள்செய்த கருணைத்திறத்தையும் நினைந்துருகிச் சேக்கிழார்பெருமானை நோக்கித் ''திருத்தொண்டர்கள் இருந்த மரபு, திருப்பேர், திருத்தொண்டின் வகை, காலம் முதலியவற்றையும் சிவனடிப்பேருகிய உயர்ந்த முத்தியைப் பெற்றேர், சீவன் முத்தராயிருப்போர், இனிப் பிறப்போர், உலகத்தில் அடியார்களைச் சார்ந்தோ பகைத்தோ அருள் பெற்றேர், அன்னோர்க்குப் பகைவராய் நரகடைந்தவர், இல்லறத் தினின்று முத்திபெற்றேர், துறவறத்தினின்று வீடு பெற்றேர், மணம் புரியாதிருந்து திருவருள் பெற்றேர், குருலிங்கசங்கமங்கள் வாயிலாகப் பேறுபெற்றேர் முதலியோர்களையும் யாவரும் அறியும் வண்ணம் தெளிவாக இயம்பும் ஒரு பெருங்காப்பியத்தை நீர் இயற்றித் தந்தருள வேண்டும்'' என்று வேண்டி மிகுந்த பொருள் கொடுத்தனன். அதனை வாங்கிக் கொண்டு சேக்கிழார் தில்லைப்பதியை யடைந்தார்.

ஆசிரியர் சேக்கிழார் காலத்திலே சமணப் புலவோருடைய காப்பிய நூல்களே தமிழ் நாட்டிற் சிறப்புற்று விளங்கின தேவார முதல்வர் காலத்துக்கு முன்னே அவர்கள் பெரும்பான்மையும் நீதி நூல்கள் வாயிலாகத் தங்கள் பொதுக் கொள்கைகளைத் தமிழ் நாட்டினருக்கு உணர்த்தினர். தேவார காலத்திற்குப்பின் கி. பி. ஒன்பதாவது பத்தாவது நூற்றாண்டுகளிலே பல சைனசங்கங்கள் தமிழ்நாட்டில் ஏற்பட்டுத் தமிழை வளர்த்து வந்தன. அக் காலத்திலேதான் முதன்முதல் விருத்தப்பாவிலே சீவகசிந்தாமணி என்னும் பெருங் காப்பியமானது, திருத்தக்க தேவரென்னும் புலவரால் இயற்றப்பட்டது. அஃது இன்பச்சுவை நிறைந்ததாய்ப் பத்தழகும் பயின்று மிளிர்ந்தது. நன்றாய்ந்த சொற்களால் ஆக்கப்பட்டு ஒப்பற்ற பெருமிதச் சொல் நடையில் அமைந் திருந்தது. அந் நூலின் இறுதியில் சமண சமயக் கொள்கைகள் யாவுங் கூறப்பட்டன. இலக்கிய நலத்தைத் துய்த்தற்பொருட்டுச் சிந்தாமணியைப் பன்முறை பயில்வார், சமணக்கொள்கைகளையும் கைக்கொள்ளுதல் கூடுமாகலின் சேக்கிழார் சிந்தாமணிப் பயிற்சி தீதென்று உபதேசித்தார். அக் காலத்தில் பலர் சிந்தாமணி நூலில் வைத்த விருப்பங் காரணமாக அதனுட்போந்த சமணக் கொள்கைகளையும் நம்பிச் சைவக் கொள்கைகளையும் சிவனடியார் பெருமையையும் உணராது வறிதே காலங் கழித்தனர். உலகத்தைப் படைத்துக் காத்தழிக்கும் முதல்வனொருவனுளன் என்பதை மறந்து செய்யும் செயல்கள் பயனிலவென்பதைப் பல உவமானங்களால் சேக்கிழார் புராண ஆசிரியர் குறிப்பித்தனர். அவர் குறித்த உவமைகளுட் பல அப்பர் சுவாமிகள் தேவாரத்துள்ளும் வந்தன. அப்பர் சமண் சமயம் புகுந்து பின் சைவத்திற்கு வந்தவராகலின் அவருடைய திருவாக்கு மிகவுங் கருதத் தக்கது. ‘திருவாரூர்ப் பழமொழி’ என்னுந் தேவாரத் திருப்பதிகத்தின் ஆரும் பாட்டில் “மலடு கறந்தெய்த்த வாறே” என்றும், ஏழாம் பாட்டில் “விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்தவாறே” என்றும், பத்தாம் பாட்டில்

"கரும்பிருக்க இரும்புகடித்தெய்த்தவாறே" என்றும் வந்த அடிகளின் சொல்லும் பொருளும் சேக்கிழார் புராணத்தில் அமைக்கப்பட்டமை காண்க.

ஆசிரியர் சேக்கிழார் சிந்தாமணியைச் சமணர் பொய்ந்நூலென்றது எதனாலோ வெனின், அவர்கள் தங்கள் கொள்கைகளைக் காப்பியங்களிற் புகுத்தி, காப்பியங் கற்போர் மனத்திற் றந்திரமாக அவை பதியும்படி செய்தமையேயா மென்பாருமுளர். அவர்கள் கொள்கை தவறென்று குறிப்பித்தாரென்றலு மொன்று. நடந்த கதையைக் கூறாது உலகத்தில் நடவாத வொன்றைச் சமணர் படைத்துக் கூறிய நூலென்று கோடலுமொன்று. சைவநூலன்மையின் சைவருக்கு அது மறுமைக்காகா தென்றார். ஒருவனுக்குப் பல மணங் கூறுதலால் இம்மைக்கும் உயர்ந்த கொள்கையை அது போதிப்பதில்லை என்பார், 'இம்மைக்கும் அற்றே' என்றார், சிவகதையானது இம்மையிற் சிவபெருமானிடத்துப் பேரன்பு விளைத்து மறுமையில் அதன் பயனாக வீட்டின்பத்தையும் உதவுதலால் அஃது இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியாவதே என்றார்.

திருத்தொண்டத் தொகையிற் கூறப்பட்ட அடியார்களின் வரலாற்றினை நம்பியாண்டார் நம்பி திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார்பாற் கேட்டுணர்ந்தமையால் அவரியற்றிய திருவந்தாதியைச் சேக்கிழார் புராண ஆசிரியர் 'சுருதிமொழிக் கலித்துறையந்தாதி' என்றார். 'சுருதி' என்றால் கேட்கப்படுவது என்பது பொருள். பிறரால் எளிதாக அறியக்கூடாத தொண்டர் வரலாற்றினை நம்பியாண்டார் நம்பி பிள்ளையார் திருவருளினாலே யுணர்ந்தோதினமை தெளிவு. திருமுறைகண்ட இராசராச மன்னர் அவர்க்குப்பின் வந்த சிவாலய மன்னர் முதலியோரும் பிறரும் அதனைப் பாராட்டுவாராயினர். மன்னரைத் தேவர் என்பது ஒரு வழக்கு. அரசன் மனைவியைத் தேவி என்றல் யாவரு மறிந்ததே. இராசராச

மன்னரை இராசராசதேவர் என்றல் மரபு. அம்மன்னரே அபயகுலசேகர சோழமன்னராவர். அவர் பத்தாம் நூற்றுண்டின் இறுதியில் அரசு புரிந்தவர். அவரே தேவாரத் திருமுறைகளைத் தேடி நம்பியாண்டார் நம்பியின் திருவருளுதவியால் சிதம்பரத்தில் ஓர் அறையில் அவற்றைக் கண்டெடுத்தவர். ஆதியிலிருந்த தேவாரத் திருப்பதிக ஏடுகளிற் பல அழிந்தொழிந்தன. கிடைத்த தேவாரப் பதிகங்களை நம்பியாண்டார் நம்பி ஏழு திருமுறைகளாக வகுத்தனர். திருமுறை கண்ட இராசராசர் என்றதும் இக்காரணம் பற்றியேயென்க. அநபாயமன்னன் சேக்கிழாரை நோக்கி, 'சிவகதை ஏது ?' என்றதற்கு அது திருத்தொண்டர் வரலாறென்பது விடையாயிற்று. 'அது கற்ற திறமைப் பேரார்?' என்ற கேள்விக்குச் சிவபெருமான் பால் திருத்தொண்டத் தொகை பாடிய நம்பியாரூரரும், பொல்லாப் பிள்ளையார்பால் நம்பியாண்டார் நம்பியும் அதனைக் கற்றனரென்பது விடையாகும். 'நவகதையோ புராதனமோ?' என்பதற்குத் திருத்தொண்டத் தொகையிற் றனித்தனியே பழைய அடியாரும் தொகையடியாருள் முக்காலத்து அடியாரும் குறிக்கப்பட்டமையால் இடையில் வந்த தவ கதை அன்றென்பது கூறியவாரும். 'முன்னூல் உண்டோ ?' என்ற கேள்விக்குத் திருத்தொண்டத் தொகையே முன்னூலும் நம்பியாண்டார் நம்பியந்தாதி வழிநூலுமாமென்பது சுட்டப்பட்டது. ஈண்டு உபமன்ய பக்தவிலாசமாவது, அகத்திய பக்தவிலாசமாவது கூறப் படவில்லை. ஆதலால் அவை சேக்கிழார் புராணத்துக்குப் பின் பெரியபுராணத்தின் மொழிபெயர்ப்பென்பது தெளியப்படும். பெரிய புராணத்துள்ளும் ஆசிரியர் சேக்கிழார் திருமலைச் சிறப்பில் ௩அ, ௩௯ ஆவது பாட்டுகளில் திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பி திருவந்தாதியையுமே தம்முடைய நூலுக்கு முதனூலாகக் கூறினர். 'நானிலத்திற் சொன்னவரார்? கேட்டவரார்?' என்ற கேள்விக்கு நம்பியாண்டார் நம்பி தொண்டர் வரலாற்றினை விரித்துரைக்கத் திருமுறைகண்ட இராசராச மன்னர் கேட்டனரென்பதே விடையாகும். 'தவ கதையோ?

தவம்பண்ணிப் பேறு பெற்ற கதையோ?' வென்பதற்குத் தவத்தினர் கதையாதலிற் றவகதையாமென்பதும், நம்பி யாரூரரும் நம்பியாண்டார் நம்பியும் தமது தவத்தின் பேருக அறியப்பெற்ற கதையாதலின் அது தவம் பண்ணிப் பெற்ற கதையுமாம் என்பதும் விடையாதல் காண்க. திருத் தொண்டர் கதையினைப் பெருங்காப்பியமாகச் செய்தற்கு ஆசிரியர் சேக்கிழார் தாம் மிகவும் விரும்பும் திருநாகேச் சுரத்திற்குச் செல்லாது தில்லைக்குச் சென்றதென்னையோ வென்னின், தில்லை யாவர்க்கும் பொதுவாகும் பேரம் பலத்தை யுடைமையானும், திருத்தொண்டத் தொகைக்கு முதற்சொல் தில்லை யாதலானும், தில்லை வீடுபேற்றிற்குரிய ஞானப் பேரிடமாதலானும் ஆசிரியர் தாம் செப்பலுற்ற திருத்தொண்டர் புராணத்துக்கு ஏற்புடைக் கடவுளாகத் தில்லையம்பலவரைக் கருதினமையானும் அத்திருப்பதிக்குச் சென்ருரென்க. தில்லையே தேவார முதலியவற்றைக் கண்டெடுத்துத் திருமுறை வகுத்த தலமாதலும் காண்க. ஏற்புடைத்தாய பதினொரு திருமுறையும் வகுத்த இடமே பன்னிரண்டாந் திருமுறை வகுத்து அமைத்தற்கும் இடமாமென்க.

# 5. சேக்கிழாரும் பெரியபுராணமும்

சேக்கிழார் பெருமான் தில்லைத் திருப்பதியின் எல்லையில் வந்து அத்திருப்பதியைத் தாழ்ந்திறைஞ்சித் திருக்கோயிலுக்குச் சென்று பொற்றாமரையில் மூழ்கி அம்பல வாணர்முன் சென்று பணிந்து உளமுருகி நைந்து கைதொழுது இறைவனது எல்லை காண்பதற்கரிய திருவருட் பேரொளியாகிய இன்பக்கடலிற்றிளைத்துக் கடவுளை நோக்கி,

"அடிகளேயுன தடியர்சீரடி யேனுரைத்திட வடியெடுத்
திடர்கெடத்தரு வாயெனத்திரு வருளையெண்ணி யிறைஞ்சினர்.
(சேக்கி, ௬௦)

அப்பொழுது வானிழல் மொழியாக **"உலகெலாம்"** என்ற அருள் நாத ஒலியானது அடியார்களெல்லாருடைய செவியின்கண்ணும் நிறைந்தது. தில்லை மூவாயிரவரும் பல திருமடங்களில் வாழும் அடியார்களும் யாவரும் பெரு மகிழ்ச்சியுடன் அதனைக் கேட்டுச் சென்னிமேற் கூப்பிய கையராய் உளமுருகிக் கூத்தப் பெருமானைத் தொழுதனர். அப்பொழுது திருமாலையும் திருநீறும் பரிவட்டமும் சேவையர் காவலருக்கு அர்ச்சகரா லளிக்கப்பட்டன. திருத் தொண்டத்தொகையுட் போந்த நாயன்மாருட் தலை யானவர் மூவராதலின், அத்திருநெறித் தலைவர்களைச் சேக்கிழார் பெருமான் வணங்கிச் சிவசின்னங்கள் தரித்துத் திருநீறணிந்து ஆயிரக்கான் மண்டபத்தே வீற்றிருந்து சிவபெருமான் அடியெடுத்துரைசெய்த செந்தமிழ்ச் சொற்றொடரையே முதலாகக் கொண்ட திருவிருத்தம் பாடிப் பெரியபுராணத்தை இயற்றத் தொடங்கினர். பெரிய புராணத்துள் திருமறையோர் புராணம் பதின்மூன்று; சிவ வேதியர் புராணம் இரண்டு; மாமாத்திரர் புராணம் ஒன்று; முடிமன்னர் புராணம் ஆறு; குறுநிலமன்னர் புராணம்

ஐந்து; வணிகர் புராணம் ஐந்து; வேளாளர் புராணம் பதின் மூன்று; இடையர் புராணம் இரண்டு; சாலியர், குயவர், தயிலவினையாளர், பரதவர், சான்றார், வண்ணார், வேடர், பறையர், பாணர் என்னும் மரபில் வந்தோர்க்கு ஒவ்வொரு புராணம் ஆக, ஐம்பத்தாறு புராணம் மரபறிந்த நாயன்மார் புராணமாகும். மரபு குறித்துரையாத புராணங்கள் பதின்மூன்று; திருக்கூட்டத்தில் ஊரறிந்தார் கதை இரண்டு; மரபறிந்தார் கதை இரண்டு; பேரறிந்தார் கதை ஒன்று; மரபறியாதார் புராணம் ஏழு; இவற்றின் வேருகத் திருத்தொண்டர் புராண முற்றிலும், ஊரறியாதார் பேரறியாதார் கதை எட்டு; எண்வரையறுக்கப் பட்ட திருக் கூட்டம் ஒன்று; எண்ணிலடங்காத திருக் கூட்டம் எட்டு என்றறிக. குங்குலியக்கலய நாயனர், முருக நாயனர், உருத்திர பசுபதியார், சிறப்புலியார், கண நாதர், பூசலார் நாயனர், சண்டேசர், சோமாசி மாறனர், நமிநந்தியடிகள், திருஞானசம்பந்தர், அப்பூதியடிகள், திருநீலநக்கர் என்பவர்கள் அந்தணர் மரபில் வந்தவர்கள். தில்லைவாழந்தணர்களையுஞ் சேர்த்தால் அந்தணர் எண், பதின்மூன்ருதல் காண்க. சிவவேதியராவார் புகழ்த்துணை நாயனரும், முப்போதுந் திருமேனி தீண்டுவாருமாவர். சுந்தரமூர்த்தி நாயனரையும் அவரின் பெற்றோரையும் ஆதிசைவ நாயன்மார்களுட் சேர்த்துக் கூறுக. மாமாத்திரர் மரபில் சிறுத்தொண்டர் ஒருவரே. முடி மன்னர் அறுவராவார்: கோச்செங்கட் சோழர், புகழ்ச்சோழர், மங்கையர்க்கரசியார், இடங்கழியார், நெடுமாறநாயனர், சேரமான் பெருமாள் நாயனர் என்போர். குறுநில மன்னராவார்: நரசிங்கமுனையரையர், கூற்றுவ நாயனர், கழற்சிங்க நாயனர், மெய்ப்பொருள் நாயனர், ஐயடிகள் காடவர்கோ னயனர் என்னுமிவர். வணிகரில் ஐவராவர்: காரைக்காலம்மையார், மூர்த்தி நாயனர், கலிக்கம்பர், அமர்நீதி நாயனர், இயற்பகையார் என்க. வேளாளர் பதின்மூவராவார்: மூர்க்க நாயனர், செருத்துணை நாயனர், வாயிலார், கோட்புலியார், அரிவாட்டாய நாயனர், இளையான் குடிமாறர், திருநாவுக்கரசர், சாக்கிய நாயனர்,

மானக்கஞ்சாற நாயனார், விறன் மிண்ட நாயனார், முனையடுவார், ஏயர்கோன் கலிக்காமர் என்னுமிவர். இடையர் மரபில் வந்தவர்: திருமூலநாயனார், ஆனாய நாயனார் என்னுமிவர். குயவர்: திருநீலகண்டனார். பாணர்: திருநீலகண்டத்துப் பாணர். பரதவர்: அதிபத்தர்: வேடவர்: கண்ணப்பர். சான்றார்: ஏனாதிநாதர். சாலியர்: நேசநாயனார். பறையர்: திருநாளைப்போவார். ஏகாலியர்: திருக்குறிப்புத் தொண்டர். தயிலவினையாளர்: கலிய நாயனார்.

தனியடியாருள் குலச்சிறையார், தண்டியடிகள், கணம் புல்லர், எறிபத்தர், காரிநாயனார், பெருமிழலைக்குறும்பர் என்னும் அறுவர்க்கும் மரபு கூறப்படவில்லை. பத்தராய்ப் பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், திருவாரூர்ப் பிறந்தார், பொய்யடிமையில்லாத புலவர், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலுமடிச்சார்ந்தார் என்னும் ஏழு தொகை யடியார்க்கும் மரபென்பதில்லை. தில்லைவாழந்தணரும், முப்போதுந் திருமேனி தீண்டுவாரும் அந்தண ரெனப்படுவர். அப்பாலுமடிச் சார்ந்தாருள் தமிழர், தெலுங்கர், மலையாளர், மற்றுமுள்ள நாட்டினர் என்பவருள் அடியார்களாவாரும், முற் காலத்தில் அரனடியடைந்தவர்கள்; இப்போதிருந்து அரனை வழிபடுகின்றவர்கள்; இனிமேற் றிருமேனியெடுத்து இறைவனை வழிபடுபவர்கள் என்னும் முத்திறத்தாரு மடங்குவர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், திருமூலர், நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பெருமிழலைக் குறும்பர், கணநாதர், அப்பூதியடிகள், சோமாசிமாற நாயனார் என்னும் பதினொருவருங் குருவருளால் உயர்முத்தி யடைந்தவர்கள். சுந்தரமூர்த்திகளும் அவருள் அடங்குவர்.

எறிபத்த நாயனார், குங்குலியக்கலயர், முருக நாயனார், கண்ணப்பர், ஆனாயர், அரிவாட்டாயர், மூர்த்தி நாயனார்,

சண்டேசுரர், திருநாளைப்போவார், சேரமான்பெருமாள், சாக்கியனுர், கூற்றுவனுர், தண்டியடிகளுயனுர், சிறப் புலியார், உருத்திர பசுபதியார், கலிக்காமர், கலியர், காரி நாயனுர், அதிபத்தர், நீலநக்கர், பூசலார், கணம்புல்லர், கோட்புலியார், நமிநந்தியடிகள், கழற்சிங்கர், வாயிலார், செருத்துணையார், புகழ்த்துணையார், ஐயடிகள் காடவர் கோன், கோச்செங்கட்சோழர் என்னும் முப்பதுபேரும் சிவலிங்கத்தால் முத்தியடைந்தவர்கள். திருநீலகண்டர், இயற்பகை நாயனுர், மூர்க்க நாயனுர், சிறுத்தொண்டர், திருக்குறிப்புத் தொண்டர், விறன்மிண்டர், இடங்கழியார், முனையடுவார், சத்தி நாயனுர், அமர்நீதி நாயனுர், மெய்ப் பொருளுயனுர், ஏனுதிநாதர், புகழ்ச்சோழர், மானக் கஞ்சாறர், இளையான்குடிமாறர், காரைக்காலம்மையார், நரசிங்க முனையரையர், கலிக்கம்பர், நேசநாயனுர் என்னும் பத்தொன்பதடியார்களும் அடியார்களை வழிபட்டு முத்தி யடைந்தவர். சடையனுரும் இதனுளடங்குவர்.

ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசர், ஆளுடைய நம்பி, காரைக்காலம்மையார் என்னுமிவர்கள் இயற்றமிழிலும், இசைத்தமிழிலும் வல்லவர்கள். திரு நாளைப்போவார், ஆனயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பரமனையே பாடுவார் என்பவர்கள் இசைத்தமிழில் வல்லவர்கள். ஐயடிகள் காடவர்கோன், திருமூலர், காரி நாயனுர், சேரமான் பெருமாள், பொய்யடிமையில்லாத புலவர் என்னுமிவர்கள் இயற்றமிழில் வல்லவர்கள். எஞ்சிய நாயன்மார் தவம்புரிந்து சிவகதி பெற்றவர்கள், திரு நீலகண்ட நாயனுர், இயற்பகை நாயனுர் முதலியவர்கள் இல்லறத்து நின்று வீடுபெற்றவர்கள், மூர்த்தி நாயனுர், அப்பர் பெருமான் முதலியோர் துறவறத்தில் நின்ருேர். சண்டேசர் மணம்புரியாதவர். சம்பந்தர் மணம்புரிந்தும் மணவாழ்க்கை நடத்தாது மணத்திற்கு வந்தவருடன் சோதியிற் கலந்தவர். நம்பியாரூரருடன் சென்ற சேரமான் பெருமாள் நாயனுரின் பரிசனங்கள் பலர், அவருடன் திருக்கயிலை சென்றனர். சிவனடியாருடன் பகைத்து

உயர்கதியடைந்தவர்கள் சண்டேசுரர் தந்தையாகிய எச்சதத்தன் என்பவரும், கோட்புலியாரால் மடிந்த அவர் தம் கிளைஞருமாவர். மெய்ப்பொருணயனருக்கு ஊறு செய்த முத்திநாதனென்பவனும், மூர்த்தி நாயனருக்கு இடுக்கண் விளைத்த சமணரும், நரகினை யடைந்தோராவர். பல நாயன்மாருடைய ஊர், மரபு, பெயர், தொண்டு, வீடெய்திய வகை முதலியவற்றையுந் திருவருளானும், ஆராய்ச்சியானுந் தெரிந்து அவர்கள் பெருமைக்குத் தக்கவாறு புராணமியற்றி முடித்தல், திருவருட் பேராற்றல் மிக்க சேக்கிழார் பெருமானுக்கு இயல்வதேயன்றி ஏனையோர்க்கு அரியதே. ஆசிரியர் சேக்கிழார் பெரிய புராணத்தைத் திருத்தொண்டத்தொகை முறைப்படி பதினொரு சருக்கங்களும் முதலிலும் ஈற்றிலும் இரண்டு சருக்கங்களுமாகப் பதின்மூன்று சருக்கங்களிலமைத்து அவற்றையே இரண்டு காண்டமாக வகுத்து நாலாயிரத்து இருநூற்று ஐம்பத்துமூன்று திருப்பாட்டுகளாகப் பாடி முடித்தனர். திருத்தொண்டர் புராணம் பாடி முடித்த அருமையைக் கீழ்வரும் செய்யுட்களால் அறிக.

"ஒருலகோ வொருதிசையோ ஒருபதியோ தம்மி
லொருமரபோ ஒருபெயரோ ஒருகாலந் தானே
பேருலகி லொருமைநெறி தருங்கதையோ பன்மைப்
பெருங்கதையோ பேரொன்றோ வல்லவே யிதனை
யேருலகெ லாமுணர்ந்தோ தற்கரிய வன்னென்
றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு
பாருலகி னுமகணின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார்"
(சேக்கிழார் புரா : ௯௦)

"கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது முந்நீர்க்
கடற்கரையி னெய்மணலை யெண்ணியள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பிரித்துவிட லாகுங்

தருங்கடலின் மீனையள விடலாகும் வானத்
தாரகையை யளவிடலாஞ் சங்கரன்ற னமது
சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே.''

(சேக்கி: ௯க)

தில்லைத் திருப்பதியின்கணுள்ள பொற்றாமரையானது சிவகங்கை யென்னும் பெயருடையது. சிவகங்கை திருவருள் வடிவாதலின், இறைவனது திருவருளைப் பெறுதற்கு அதன்கண் சேக்கிழார் பெருமான் மூழ்கித் தொழுதனர். அடியார் பெருமை கூறும் புராணத்தை அம்பலவர் திருவருளை முன்னிட்டே தொடங்கவேண்டு மென்ற கருத்தினால் அத்திருவருட் பேற்றிற்குச் சிறந்த தோர் அடையாளமாக அடியெடுத்துக் கொடுத்தலை இறைவர்பால் ஆசிரியர் வேண்டினர். வேண்டுவார் வேண்டியதே ஈயுங் கடவுள் அவர் வேண்டியவண்ணமே 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்தார். இறைவன் அங்ஙனம் அருள் செய்யாவிடின் திருவருள் வழிநிற்கும் தாழ்மனமுடைய ஆசிரியர் இப் புராணத்தைத் தொடங்கி யிருக்கமாட்டார் போலும்! அஃது இறைவன் அடியெடுத்துக் கொடுத்தமையால், தாம் புராணம் பாடுவது தக்கதே யென்று பெரியபுராணத்துப் பாயிரத்துட் கூறினமையால் தெளியப்படும்.

“அருளி னீர்மைத் திருத்தொண் டறிவருந்
தெருளி னீரிது செப்புதற் காமெனின்
வெருளின் மெய்ம்மொழி வானிழல் கூறிய
பொருளி னாகு மெனப்புகல் வாமன்றே''

என்றது காண்க.

ஆசிரியர் சேக்கிழார் அமைச்சராகலின், தில்லை வாழந்தணர், மடபதிகள் முதலிய பலருஞ் சென்று அம்பலத்துள் எழுந்த அருட் பேரொலியைக் கேட்டன

ரென்று தெரிகிறது. ஒலிப்பவ ரில்லாமல் ஒலி எழுவது அதிசயமாகத் தோன்றலாம். கடவுள் ஐம்பொறிகளின் உதவியின்றியே பார்க்கவும், கேட்கவும், பேசவும், நுகரவும், பரிசிக்கவும் வல்லவரென்று மெய்ந் நூல்கள் உரையிடுவ தானும், இறைவன் அன்பர்க்கு வேண்டியவாறு அருளுதல் திண்ணமாதலானும் இதனை இயலாததோர் அற்புத மென்று கொள்ள வேண்டியதில்லை. "வானிழல்" கூறியதை ஆசிரியர் தமது திருவாக்காலே தெரிவித்த லாலும் அதனை அந்தணர், அடியார் முதலியோர் உடன் கேட்டதாகச் சேக்கிழார் புராணத்திற் குறித்திருப்பதாலும் அது நடந்ததென்று கொள்ளுதலே தக்கது. இந் நூலினையும், தவத்தினையும் உடன் ஆற்றுவார் பரமாச்சாரியர்களாகிய தேவாரமூவரை முதலில் வணங்கிச் சிவசின்னங்களணிந்து சிவாலயத்திலேயே ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருந்து திருவருளை எண்ணிப் புராணத்தைத் தொடங்கினர்.

சேக்கிழார் புராண ஆசிரியராகிய உமாபதி சிவாசாரியர் அப் புராணத்துள் உசு, உஎ-பாட்டுகளிலே மரபு முதலிய பல்வகைப் பிரிவுகளைத் தொகுத்துச் சுட்டிய வாறே, பின்னர் வரிசை வரிசையாக கூசு - முதல் - சஅ வரை உள்ள பாடல்களை வகுத்துக் காட்டினமை அவர் வகுத்துரைத்த திறமையினை நன்கு விளக்கும். சிவனடியார் எல்லாக் குலத்தினு மிருப்பாராதலின் நான்கு வருணத்தில் தாமிருப்பர், அல்லது ஒரு வருணத்தில் தாமிருப்பர் என்ற கொள்கை தவறென்பதை இனிது விளக்குதற் பொருட்டும் சிவநெறி எல்லாக் குலத்தார்க்கும் பொது வென்பதை வற்புறுத்தற்பொருட்டும் அடியார்கள் மரபினை முதற்கண் வகுத்துக் கூறுவாராயினர்.

திருமறையோர் என்ற சொற்றொடரால் தில்லை வாழந்தணரும் அந்தண வகுப்பிலுதித்த பன்னிரண்டு நாயன்மாருங் குறிக்கப்பட்டனர். திருநெறியாகிய சிவ நெறியில் ஆன்றோர் நின்றனராகலின், அவர்களை

மறையோர் என்று வாளா கூறுது திரு என்று அடை கொடுத்துக் கூறினரென்க. 'சிவபெருமானை வழிபடும் ஆதி சைவர் சிவ வேதியரெனப்பட்டார். நம்பியாரூரர் திருத் தொண்டத் தொகையில் உள்ள அறுபது தனியடியா ருடையவும் ஒன்பது தொகையடியாருடையவும் மரபினையே ஈண்டு வகுத்துக் கூறுதலால் புகழ்த்துணையாரையும் முப்போதுந் திருமேனி தீண்டுவாரையுமே ஈண்டுச் சிவ வேதியரென்றனர். திருத்தொண்டத் தொகை மொழிந்த நம்பியாரூரரையும், அவரின் தந்தையாகிய சடைய னரையும், அவர் தாயாராகிய இசைஞானியாரையும் சேர்த்த விடத்து நாயன்மார் அறுபத்து மூவராவர். அவருட் சிவவேதியர் ஐவராவர். மாமாத்திரர் என்பார் மருத்துவ நூற் பயிற்சிமிக்க ஒருவகைப் பிராமணர் போலும்! சிறுத் தொண்ட நாயனர் ஒருவரே அவ் வகுப்பைச் சார்ந்தவர்.

*"ஆயுள்வே தக்கலையும் அலகில்வட நூற்கலையும்*
*தூயபடைக் கலக்கலையும் துறைநிரம்பப் பயின்றுள்ளார்"*

என்றமை பற்றி இக்காலத்து மருத்துவர் அவரைத் தங்கள் வகுப்பின ரென்ப.

முடிமன்னர் அறுவரில் இருவர் பாண்டிய மரபினர்; ஒருவர் சேரர். இடங்கழியாரென்பவர் கொங்கு நாட்டினர் போலும்! அவரைக் குறுநிலமன்னரென்பாருமுளர். மேலே கூறிய குறுநிலமன்னர் ஐவரும் சோழநாட்டிற்கப்பாலுள்ள நடுநாட்டிலும் தொண்டை நாட்டிலுமிருந்தவர். கழற் சிங்கரும் ஐயடிகள் காடவர்கோனும் பல்லவமன்னர். பல்லவர்கள் குறுநிலமன்னராகவே கருதப்பட்டமை காண்க. வணிகர் ஐவருள், ஒருவர் பெண்மணி. மூர்த்தி நாயனரென்னும் ஒருவரே பாண்டிய நாட்டினர். அமர்நீதி நாயனரும் இயற்பகை நாயனரும், காரைக்காலம்மையாரும் சோழநாட்டினர். கலிக்கம்பர் நடுநாட்டினர். வேளாளருட் செருத்துணை நாயனர், கோட்புலி நாயனர், சத்தி நாயனர், ஏயர்கோன் கலிக்காம நாயனர், முனையடுவார் என்னும்

இவர்கள் சோழநாட்டினிற் றிகழ்ந்தனர். மூர்க்கர், வாயிலார், சாக்கியர் மூவருந் தொண்டை நாட்டினர்; திருநாவுக்கரசர் நடுநாட்டினர்; விறன்மிண்டர் மலைநாட்டினர். இடையருள் திருமூலநாயனார் இடையராய்ப் பிறந்தாரென்று கூற இடமில்லை. அவர் கயிலாயத்திருந்து வந்த ஒரு சித்தர். அவர் தவமிருந்தது துறைசையாதலின், அவரும் ஆனாயரும் சோழநாட்டினரே. குயவராகிய திருநீலகண்டர் தில்லையிற் றிகழ்ந்தவர். திருநீலகண்டயாழ்ப்பாணர் நடுநாட்டினர். பரதவராகிய அதிபத்தர் நாகப்பட்டினத்தவர். கண்ணப்பர் திருக்காளத்தியில் திகழ்ந்தவர். சான்றாராகிய ஏனாதிநாதர் சோழநாட்டினர், சாலியராகிய நேசனார் வாழ்ந்த ஊர் காம்பீலி நகரம். அது தொண்டை நாட்டிலிருந்தது போலும்! திருநாளைப் போவார் சோழநாட்டினர். திருக்குறிப்புத் தொண்டரும் செக்காராகிய கலியனாருந் தொண்டை நாட்டினரே.

மரபு கூறப்படாதவர்களுள் குலச்சிறை நாயனார், பாண்டி மன்னருக்கு அமைச்சராயிருந்தவர். அவரைச் சிலர் வேளாளரென்பர். தண்டியடிகள் நாயனார் திருவாரூரில் திருக்குளத்தினைக் கல் மண் முதலியவற்றை எடுத்துப் புனிதப்படுத்தியவர். அவரைக் கொத்தர் மரபினரென்பாருமுளர். கணம்புல்லர் பெருஞ் செல்வராய்த் திகழ்ந்தவர். அவர் வேளாளராயிருந்திருத்தல் கூடும். எறிபத்தர் போர்வீரர் ஆதலின், வீர மரபினர் போலும்! காரியார் என்ற பெயர் குறுநில மன்னர் மரபிற்கு உரித்துப் போலும்! பெருமிழலைக் குறும்பர் குறுநில மன்னராயிருத்தல் கூடும்.

தொகையடியாருட் பத்தராய்ப் பணிவாருள், திருத்தொண்டு செய்தவர்கள் யாவரும் அடங்குவர். சிவபூசை கண்டு மகிழ்தல், எக்குலத் தொண்டரையுந் தொழுதல், அரனையும் அடியாரையும் ஆகமவிதிப்படி அர்ச்சித்தல், தாங்கள் செய்யும் செயலெல்லாம் சிவபெருமானுடைய பணியாகவே செய்தல், ஈசன் பெருமை பகருஞ் சிவகதை

கேட்டல், இறைவனை நினைந்து விழிநீர் பொழிதல், மயிர்சிலிர்த்தல், எப்போதுங் கடவுளை நினைத்தல், திருப்பணிக்கென்று தாம் பொருள் வாங்கி வயிறு பிழையாமை என்னும் எட்டிலக்கணங்களும் உடையவர்களே பத்தராய்ப் பணிவாராவர். பரமனையே பாடுவார் இசைத் தமிழால் இறைவனையே பாடுவாராவர். சித்தத்தைச் சிவன்பால் வைத்தாரென்பவர் சிவயோகத்தில் தலைநின்றவர். திருவாரூர்ப் பிறந்தாரென்பார் திருவாரூரிற் பிறந்து பிறவிப்பயன் பெற்றவரேயாவர். இறைவனைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்றமையால், இறைவனைப் பேசாதவர்களெல்லாம் பிறவாதவரே யாவர். ஆரூரிற் பிறக்க முத்தி என்ற வாக்கியத்தின் நுண் பொருளாவது உள்ள மலர்மிசை நடிப்பவனாகிய இறைவனை ஒன்றி இருந்து நினைப்போர்கள் வீடெய்துவர் என்பதே. முப்பொழுதுந் திருமேனி தீண்டுவார் என்பார், காலை எழுந்து நீரில் மூழ்கி நீறணிந்து நியதியாற்றித் திருவைந் தெழுத்துப் பயில்கின்ற நாவினராய்ச் சைவ நூன்முறைப் படி இன்ப அன்போடு இறைவனைத் திருக்கோயிலின்கண் பூசைபுரிவாராவர். திருவாரூர், நிலமகட்கு இதய கமலம் என்பது,

"பூதம் யாவையி னுள்ளலர் போதென
வேத மூலம் வெளிப்படு மேதினிக்
காதன் மங்கை இதய கமலமா
மாதொர் பாகனு ராரூர் மலர்ந்ததால்"

என்பதால் தெளிக. சிவநெறி செல்லா ஆதி சைவர் இவர்களு ளடங்கா ரென்ப. உலக நிலையாமையையும், திருவருட் பேற்றினையும் நினைவுறுத்தற் பொருட்டு உடல் முழுவதும் திருநீறணிபவர் முழுநீறு பூசிய முனிவராவார். திருநீற்றினைக் குறியில்லாது பூசுதல், முகக்குறியாக அணிதல், பிறைவடிவாக அணிதல், முக்கோணமாக அணிதல், வட்டமாக அணிதல் என்னும் ஐவகைகளும் இப் புராணத்திற் குறிக்கப்பட்டிருக்கின்றன. சிவ

சத்தியானது ஆதாரங்களில் ஈண்டுக் குறித்த வடிவமுள்ள சோதியாய்த் தோன்றுதலின், அவற்றைக் குறிப்பதற்கு முனிவர் திருநீற்றுக் குறியணிவரென்பாருமுளர். பாசுபத விரத முடையார் திருநீற்றைப் பெருஞ் சாதனமாகக் கொள்வர்.

பொய்யடிமையில்லாத புலவர் என்பார் தமிழ்ச்சங்கப் புலவருள் திருவருள் பெற்றவர்களாவரென்று நம்பி யாண்டார் நம்பி, சேக்கிழார், உமாபதி சிவாசாரியார் என்ற மூவருங் கூறியிருப்பதால் அச் சொற்றொடர் ஓர் அந்தண அடியாரைக் குறிக்குமென்றுதல், மணிவாசகப் பெருமானைக் குறிக்கு மென்றுதல் கொள்ள இடமில்லை. அப்பாலு மடிச் சார்ந்தா ரின்னாரென்பதைச் சேக்கிழார் புராண ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கின்றார்.

"அப்பாலு மடிச்சார்ந்தா ரிவர்கடமிற் சில பேராய்ந்த தமிழ்ப்பேர் சிலபேர் மலையாளர் சிலபேர், தப்பாத தெலுங்கர்சிலர் மற்றுளதே சத்தார் தவஞ்செய்து பரகதியையடைந்தவர்கள் சிலபேர், இப்போது மிருந்தரனை வழிபடுவோர் சிலபேர் இனிமேலுந் திருமேனி கொடு வருவோர் சிலரே."

இவ்வகையாருள் முழுமுதற் கடவுளைப் பயன் கருதாது மெய்யன்போடு வழிபடும் எந்நாட்டினரும் எக்காலத்தவரு மடங்குவர். திருவாசகத்துள் "எந்நாட் டவர்க்கு மிறைவா போற்றி" என்றது மது. இக் காரணத்தினால் எவ்வன்பர் சரித்திரமும் பெரியபுராணத்தின் பகுதியாமென்பதுந் தெளியப்படும்.

குருவருளால் முத்திபெற்றோர்கள் திருஞான சம்பந் தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்திகளும் சிவ பெருமானே குருவாக வந்து ஆட்கொள்ளப்பட்டவர்கள். திருமூலர் திருநந்திதேவரின் மாணக்கர். நெடுமாறரும், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும், திருநீலகண்ட

யாழ்ப்பாணரும், கணநாதரும் திருஞானசம்பந்தரைத் தம் பரமாசாரியராகப் பெற்றவர்கள். பெருமிழலைக் குறும்பரும், சோமாசிமாற நாயனாரும், சுந்தரமூர்த்திகளைக் குருவாகப் பெற்றவர்கள். அப்பூதியடிகள் அப்பமூர்த்தியைக் குருவாகப் பெற்றவர். குருவருளால் முத்திபெற்ற பதினொரு வரும் தாம் வழிபட்ட திருமேனிகளில் நின்று இறைவனால் ஆட்கொள்ளப்பெற்றவர். ஆனால், மாணிக்க வாசகப் பெருமான் இறைவன் மானுடச்சட்டை சாத்தி வந்து ஆட்கொள்ளப்பட்டவர். இருமுறைக்கும் வேறுபாடுண்மை யால் மணிவாசகப்பெருமான் இவரொடு சேர்த்துக் கூறப் படவில்லை. மணிவாசகர்க்கருளிய முறை நூன்முறை என்றும், பெரியபுராண நாயன்மார்க்கருளிய முறையானது அதற்குப் புறனடையாய சிறப்புமுறை என்றும் அறிக.

சிவலிங்கத்தான் முத்தியடைந்த முப்பதின்மருள் எறிபத்தர், சிவனடித்தொண்டருக்கு இடையூறு செய் வாரை மழுவால் எறிவதை மேற்கொண்டவர். குங்குலியக் கலய நாயனார் நறும்புகை யிடுந் தொண்டியற்றியவர். முருகனாரும் செருத்துணையாரும் பூப்பணிவிடையை மேற்கொண்டவர். கழற்சிங்கர் தொண்டிற்குத் துணையாய் நின்றவர். ஆனாயர் இசைத்தொண்டால் இறைவனை மகிழ்வித்தவர். அரிவாட்டாயனார் செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவும் திருவமுதின் பொருட்டு நாடோறும் அளித்தவர். மூர்த்தி நாயனார் சந்தனக்காப்புக் கொடுப்பதைத் தமது தொண்டாகக்கொண்டவர். திரு நாளைப் போவார் இசைக் கருவிகளும் கோரோசனை முதலியவையும் கொடுத்தவர். கூற்றுவனாரும் ஏயர்கோன் கலிக்காமனாரும் பெருஞ் செல்வத்தால் திருப்பணி முதலியவை இயற்றியவர்கள். தண்டியடிகள், திருவாரூர்த் திருக்குளத்தைத் தூர்வையெடுத்துப் புனிதஞ் செய்தவர். கலியநாயனாரும் கணம்புல்ல நாயனாரும், நமிநந்தியடி களும் திருவிளக்கேற்றுந் தொண்டியற்றியவர். கோட்புலி நாயனார் நிவேதனத்துக்கு நெல் சிவாலயத்திற்குதவியவர். சிறப்புலியார், பசுபதியார், நீலநக்கர் மூவரும் இடையறாது

திருவைந்தெழுத் தெண்ணுவதைத் தமது திருத்தொண்டாகக் கொண்டவர். அதிபத்தர், அரனுக்குரியதென விலைமதித்தற்கரிய மீன் விடுத்தவர். ஐயடிகள் காடவர்கோனும், காரி நாயனரும் பாடல்தொண்டியற்றியவர். கோச்செங்கட்சோழர் சிவாலயங் கட்டுவித்தவர். இவர்கள் யாவரும் சரியை நெறியில் நின்றவர்களென்று கூறலாம். கண்ணப்பநாயனரும், சண்டேசுரநாயனரும், சேரமான் பெருமாள் நாயனரும், புகழ்த்துணையாரும் சிவலிங்கப்பெருமானைப் பூசனைபுரிந்தவர். சாக்கியனர் கல்லையே மலராகக்கொண்டு சிவார்ச்சனையியற்றியவர். வாயிலார் அகப்பூசை செய்தவர். பூசலார் நாயனர் தமது திருவுள்ளத்தே இறைவனுக்குத் திருக்கோயில் கட்டியவர். இவர்களனைவருங் கிரியையில் நின்றவர்களென்னலாம்.

சிவனடியாரால் முத்திபெற்றவருள் திருநீலகண்டனர் அடியார்களுக்கு மட்கலம் திருவோடு முதலியன கொடுத்தவர். மூர்க்கநாயனர், முனையடுவார், சிறுத்தொண்டர், இளையான்குடிமாறர், காரைக்காலம்மையார், நரசிங்கர், கலிக்கம்பர் முதலியோர் சிவனடியாருக்குத் திருவமுதளித்தலைப் பெரிய தொண்டாகக் கொண்டவர்கள். சிறுத்தொண்டர் மகவரிந்து திருவமுதூட்டியவர். இளையான்குடிமாறர் அளவற்ற வறுமையிலும் சிவனடியார்க் கமுதளித்தவர். நரசிங்க முனையரையர் தூர்த்த வேடங் கொண்டு வந்த அடியார்க்கு மிகுந்த பொன் கொடுத்தவர். கலிக்கம்பர் தம் பணியாளனுயிருந்து சிவனடியாராக வந்த ஒருவரது திருப்பாதம் விளக்கக் கூசிய மனைவியின் கையைத் தடிந்தவர். இடங்கழியாரென்னு மன்னர் சிவனடியார்க்குத் திருவமுது செய்வித்தற்பொருட்டுத் தமது நெற்பண்டாரத்தைக் கொள்ளைகொள்ள விடுத்தவர். அமர்நீதிநாயனரும், நேச நாயனரும் சிவனடியாருக்கு உடை கோவணம் முதலியன உதவினவர்கள். இயற்பகையார் அடியார் விரும்பிய யாவுங் கொடுப்பதை மேற்கொண்டு மனைவியையுங் கொடுத்தவர். மானக்

கஞ்சாறர் தம்முடைய மகளின் கூந்தலை அவள் மணம் புரியப்போகுந் தருணத்திலும் ஓர் அடியவர் பொருட்டு அரிந்துகொடுத்தவர். சத்திநாயனர் சிவனடியாரை இகழ்ந்தவரைக் கடுமையாய்த் தண்டித்தவர். மெய்ப் பொருள் நாயனர் தம்மைக் குத்திய பகைவனைத் திரு வேடத்தின் பொருட்டுக் கொல்லாது விட்டவர். ஏனதி நாயனர் திருநீறணிந்த பகைவனைக் கொல்லாது அவன் கையால் மாய்ந்தவர். புகழ்ச்சோழர் போரில் திருவேட முடைய ஒருவரைத் தெரியாது கொன்றமைக்காகத் தீயில் வீழ்ந்திறந்தவர். விறன்மிண்டர் ஆண்டவரை வணங்கு வதன் முன் அடியாரை வணங்காத சுந்தரமூர்த்திகளைக் கண்டித்தவர். திருக்குறிப்புத்தொண்டர் அடியார்க்கு உடைவெளுக்குந் தொண்டினை மேற்கொண்டவர்.

திருத்தொண்டர் புராணத்தின் செய்யுட்கள் ௪௨௫௩ ஆமென உமாபதி சிவாசாரியசுவாமிகள் வரையறுத் திருப்பவும், இப்பொழுதுள்ள பதிப்புகள் சிலவற்றில் ௪௨அ௬ பாட்டுகளும், சிலவற்றில் ௪௩௬௩ செய்யுட்களும் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் திருமலைச்சிறப்பு, கண்ணப்பநாயனர் புராணம் முதலிய சில பகுதிகளில் வெள்ளியம்பலத் தம்பிரான் முதலிய பிற்காலத்துப் புலவர்கள் தம்முடைய பாடல்களைச் செருகினமையே என்று தெரிகிறது. அவற்றை வேறுபிரித்துவிட முயலவேண்டும்.

## 6. பெரியபுராண அரங்கேற்றம்

சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் பாடுதற்காகத் தில்லைக்குச் சென்றபின் சோழமன்னன் அவர்பால் தூதரையனுப்பி, "சேக்கிழாருடன் துணையிருந்தவர்கள் யாவர்? கதை எவ்வளவு முடிந்தது? முடியவேண்டிய தெவ்வளவு?" என்னுஞ் செய்திகளை அறிந்துவரும்படி பணித்தான். தூதரையறியாமல் ஒற்றரையும் விடுத்தான். சென்ற தூதர்கள், அவ்வப்போது செய்தியறிந்து கூறினார்கள். பாதிப் புராணம் பாடினரென்று சிலர் ஓடி வந்து சொன்னார்கள். இன்று நாளை முடியுமென்று சிலர் சொன்னார்கள்; இங்ஙனம் வந்து சொன்னவர்கள் எல்லாருக்கும் நவமணிகளும் நல்லுடைகளும் அம் பொன்னும் மிகுதியாக அரசன் வழங்கினன்.

சேக்கிழா ரியற்றிய புராணத்தையும் அவரையும் தொழும் பொருட்டுத் தெருக்கள்தோறும் பரிசனங்கட்குத் தெரிவித்து, நால்வகைப் படைகளுடன் நல்ல நாளிலே புறப்பட்டு அநபாய சோழமன்னன் யானைமேற் சிதம்பரத் திற்குச் சென்றான். அரசனது சேனை முழக்கொலியைக் கேட்டு அவன் வரவறிந்த தில்லைவாழந்தணரும் திருமடத் தலைவரும் நன்மாதரும் பெரியோர்களும் சேக்கிழார் பெருமானும் சோழமன்னனை எதிர்கொண்டழைத்தனர். அரசன் சேக்கிழாரது திருவேடத்தைக் கண்டு உளமகிழ்ந்து தன்னை யறியாது கைகள் தலைமேலேறப்பெற்று அவரது தவவேடத்தைத் துதித்து அவரை யடிமைகொண்ட இறைவரது திருவருளை நினைந்து அவரது திருவடியை இறைஞ்சினன். பின்னர்க் கூத்தப்பெருமானைக் கண்டு தொழும் பொருட்டுத் தில்லைமறையவரும் மடபதிகளுந் தொடர்ந்து வர, அம்பலவர் திருமுன் சென்று பேரன்பினால் கண் மழை பொழிந்து மயிர்ப்புளகங்கொள்ள வாய்குழற

விம்மி விம்மி அருண்மேலீட்டாற் பேரின்பவாரியில் திளைத்துச் சென்னியின் மேற் கூப்பிய கையினனாய் அரசன் கூத்தப்பெருமானைக் கும்பிட்டு விழுந்தெழுந்து நின்றபோது வானிழல் வாயிலாக,

"சேக்கி ழானமது தொண்டர் சீர்பரவ
நாமகிழ்ந் துலக மென்றுநம்
வாக்கி னலடி யெடுத்து ரைத்திட
வரைந்து நூல்செய்து முடித்தனன்
காக்கும் வேல்வளவ நீயி தைக்கடிது
கேளெ னக்கனக வெளியிலே
ஊக்க மான திரு வாக்கெ ழுந்தது
திருச்சி லம்பொலியு முடனெழ."

இறைவன் திருவாய்மொழிந்த மொழியும் சிலம்பொலியு மெல்லாருடைய செவிகளிலும் நிறைந்தன.

அரசன் அளவற்ற மகிழ்ச்சியெய்திச் சேக்கிழார் முனிவர் விரித்துரைத்த திருத்தொண்டர் புராணத்தைக் கேட்கும்பொருட்டுச் சிவனடியார்களெல்லாம் கடுக வருக வருகவென்று திசைதோறும் ஆளும் ஓலைகளும் விடுத்த னன். சிவசமயத்தவர் யாவரும் அத் தவசரிதங் கேட்டற் பொருட்டுத் தில்லையில் வந்து திரண்டார்கள். மறை யொலியும் திருமுறையொலியும் அரகரவென்னு மொலியும் முகிலொலிபோல் எங்கும் முழங்கி நிறைந்தன. அன்பர்கள் இறைவனைப் பூசிப்பதும், இறைவனைப் பூசனை புரிந்து நேசிப்பதும், பிறவா வரத்தை அவன்பால் யாசிப்பதும், திருமுறையை எழுதிக் களிகூர வாசிப்பதுமாக விருந்து மகிழ்ந்தார்கள். தில்லைமூதூர் முழுவதும் முழக்கமும் புனிதமு முடையதாய்த் திகழ்ந்தது. இறைவன் திருநடஞ் செய்யும் அரசமன்றின்கண் மெழுகிக் கோலமிட்டுப் புனிதமாக்கிய ஓரிடத்தில் அறுகாற்பீடமிட்டு, அதன்மேற் பசும்பட்டை விரித்து, அதன்மேல் வெள்ளைப் பட்டை மடித்திட்டு நறுமலர் தூவி, அதன்மேல் திருச் சேக்கிழா

ரியற்றிய திருத்தொண்டர் புராணத்தை வைத்திறைஞ்சித் திருநெறித் தமிழ்வல்லவர்களும், சிவாகமங்கள் கற்றவர் களும், ஞானநூற் பயிற்சியுடையாரும், மறைவல்லாரும், இலக்கணத்தேர்ச்சி யுடையாரும் ஆகிய அனைவரும சேக்கிழார் சுவாமிகளை வணங்கித் திருத்தொண்டர் புராணத்தை நீரே வாசித்துப் பொருளருளிச் செய்வீரென்று கேட்டுக்கொண்டார்கள். அவ்வாறே குன்றை முனிவருந் தாஞ்செய்த சைவப் பெருங்கதையினை விளங்க விரித்துச் சொல்லச் சூழவிருந்த அம்பலவ ரடியாரெல்லாம் சுருதி மொழி இதுவெனக் கைதொழுது கேட்டார்கள்.

சேக்கிழார் பெருமான் கூத்தப் பெருமான் திருநடம் புரியுஞ் சிறந்த நாளும், ஆளுடைய பிள்ளையார் அவதரித்த நாளும், அவரமுது திருஞானம் அமுது செய்த நாளும் ஆகிய திருவாதிரை நாளிலே சித்திரைத் திங்களிலே தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடிப்பதாகப் புராணம் நடத்த அனைவரும் விருப்புடன் அதனைக் கேட்டனர். மூவர் தேவாரமும், திருமந்திரமும், காரைக் காலம்மையார் கழறிற்றறிவார் ஐயடிகள் காடவர்கோன் முதலியவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களும் உறுப்பாகவும், பெரியபுராண திருவிருத்தம் உடலாகவும் இவற்றின் பொருள்கோள் உயிராகவும் ஆசிரியர் இப் பெருங்கதையை நடத்த எல்லாருங் கேட்டார்களாதலினால் இப் பேரறமானது செவ்வையாக நாலடியால் உலகத்து நடைபெறலாயிற்று. இப் புராணம் வாசிக்கத்தொடங்கிய நாள்முதல் நாடோறும் கேட்க வருகின்ற எண்ணிறந்த சிவனடியார்களுக்குத் தங்குவதற்குத் திருமடமும், திருமடங்கள்தோறும் திருவிளக்குகளும், உடுத்துவதற்கு உடை, மேற் போர்வை முதலியனவும், உண்பதற்குச் செந்நெல்லரிசிச் சோறு, சருக்கரை, முப்பழம், தூய அறுசுவைக்கறி, நெய், தயிர், பால், பலவகைப்பண்டம், தண்ணீர், வெற்றிலைபாக்கு முதலியனவும் அரசன் ஏவலினாலே அமைச்சர்கள் தவறாது ஏற்பாடுசெய்து கொடுத்தனர். அவ்வாறே தில்லை வாழந்தணருக்கும்

அமுதுபடி கறியமுது முதலியன உதவி அம்பலவாணர்க்கும் சிறந்த பெரும்பூசனையை அரசன் நடத்திவந்தான். இவ்வகைச் சிறப்புகளினாலே தில்லையானது பூலோக சிவலோகமெனப் பொலிந்து தோன்றிற்று. திருமுறை சேர்த்தவர்களும், எழுதுபவர்களும், இருந்து வாசிப்பவர்களும், பொருளுரைப்பவர்களும், மகிழ்ந்து கேட்டிருப்பவர்களும், புராணங் கேட்டுச் சிரமசைத்துக் குதூகலிப்பவர்களும், புராணத்தின் சுவையை யறிந்து துய்ப்பவர்களும், சேக்கிழார் பெருமானது அரிய தவத்தினைப் பாராட்டுகின்றவர்களும், அம்பலவர் அடியெடுத்துக் கொடுத்ததை வியக்கின்றவர்களும், பெரியபுராணங்கேட்ட வளவர்பிரான் செவிக்குச் சிந்தாமணி இனிப் பிடிக்குமோ என்பவர்களும் ஆகப் பலர் தில்லையில் நிறைந்தனர். இவ்வளவு சிறப்புடன் திருத்தொண்டர் புராணமானது வாசித்து முடிந்தவுடன் திருத்தொண்டர்கள் அரகர வென்று அளவற்ற பெருமுழக்கஞ் செய்தனர். அதனைச் சேக்கிழார் புராண ஆசிரியர் ஒரு செய்யுளில் உயர்வு நவிற்சி நயம் விளங்கக் கூறியுள்ளார்.

"இத்தகைய சிறப்புடனே திருத்தொண்டர் புராண
மிருந்தன்பர் பாராட்ட நடந்தெதிரா மாண்டு
சித்திரையா திரைநாளின் முடியவது கண்டு
திருத்தொண்ட ரரவெனும்பே ரொலியெழுந்து பொங்கக்
கத்துதிரைக் கடலொலியை விழுங்கிமுழங் கோரேழ்
கடலொலியைக் கீழ்ப்படுத்திப் பிரமாண்ட வெளியைப்
பொத்தியிமை யவர்செவியை நிறைத்துயரப் பொங்கிப்
பொன்னுலகுக் கப்பாலும் போய்ப்பொலிந்த தன்றே."

அநபாய மன்னன் பெரியபுராணம் முற்றுப்பெற வேண்டுமென்ற பேரார்வ முடையனா யிருந்தமையால் அடிக்கடி தில்லைக்குத் தூதரை அனுப்பிப் புராணச் செய்தியை உசாவியதோ டமையாது, தூதரறியாமல் ஒற்றரையும் விடுத்து உண்மை யறிய முயன்றான். தூதரினும் ஒற்றர் அரசனுக்கு அந்தரங்க வேலையாளராய்

உண்மை யுணர்த்தும் இயல்பினரென்பது இதனாலே விளங்குகின்றது. ஒற்றர் மன்னவருக்குக் கண்ணாவா ரென்றும், ஒற்றர் அனைவரையும் ஆராய்வதற்குரிய ரென்றும், தூதர் நேரில் அறியக் கூடாததை ஒற்றர் மறைந்தறியும் ஆற்றல் உடையாரென்றும், ஒற்றரையும் ஒற்றரால் அறிய வேண்டுமென்றும் நீதிநூல் கூறுதலால், தூதரே யன்றி ஒற்றரையும் அரசன் உண்மை யறியப் பயன்படுத்தினனென்க. நேரில் அறியவேண்டியதைத் தூதர் வாயிலாகவும், மறைந்தறிய வேண்டியதை ஒற்றர் வாயிலாகவும், தெரியவேண்டியது அரசன் கடமை யாதலின் இருவகையாரும் அரசர்க்கு வேண்டிய வேலை யாளரென்று தெளிக. உலகியலுக்கேற்ப அவ்வப்போது தூதர் கூறு முறைகள் பலவும் சேக்கிழார் புராண ஆசிரியரால் அழகாகப் புனைந்துரைக்கப்பட்டன. நற்செய்தி கூறியவர்களுக்கு உயர்ந்த பரிசளித்தல் ஆர்வ முடைய செல்வர் இயல்பாதலின், புராணச் செய்தியை வந்து சொன்னவ ரனைவருக்கும் வளவன் மிகுந்த பரி சளித்தனனென்று கூறப்பட்டது. அவன் தன் பரிசனங் களோடும், படைகளோடும் தில்லைக்குச் சென்றமையால், அரசர் ஓரிடத்திற்குச் செல்லும்பொழுது பரிசனங்களையும், படைகளையும் உடன் கொண்டுபோதல் அக்காலத்து வழக்கென்பது புலனாகின்றது.

அக் காலத்தில் தில்லையில் தில்லைவாழந்தணரோடு எழுநூறு சைவமடத் தலைவர்கள் துறவறம் பூண்டு சிவ னடியார்க்கு வேண்டுவன செய்தற்குரியவராய்த் திகழ்ந்தன ரென்று தெரிகிறது. 'துறஞ் சிறந்த மடபதிகள்' என்றமையால் அவர்கள் துறவிகளென்பது தெளிவு. அவர்கள் தில்லைக்கு வரும் அடியார்கட்குப் பெரிதும் உதவி புரிதலால் 'வண்மை மடபதிகளும்' என்றார். மடபதி என்ற சொற்கு மடத்து முதலி என்று வழங்குதலுங் காணப் படுகின்றது. அரசர்கள் அக்காலத்தில் யானைமேல் போக்கு வரவு செய்தல் வழக்கம் போலும்! அரசரைப் பெரியார்களோடு பெண்டிரும் வரவேற்றல் அக்காலத்து

வழக்கென்பது இச் சரித்திரத்தால் புலனாகின்றது. சோழ மன்னனைத் 'தளவ மாலை யபயன்' என்றமையால் முல்லை மாலை அவனுக்குரிய தென்பதும், அபயன் என்ற பெயரும் அவனுக்கு வழங்கியதென்பதும் தெளியப்படும். உயர்வு நவிற்சியின்றி உண்மை உணர்த்தும் நன்மொழிகள் தலைப் பெய்து பெரிய புராணம் அமைக்கப்பட்டிருத்தலானும், தக்க சான்றுகளுடன் தாம் உண்மையென்று கண்ட செய்தியையே ஆசிரியர் சேக்கிழார் தமது நூலில் மொழிந் திருப்பதானும் "**களவிலாத மொழிகொடு புராண கதை யுரைசெய்த** கங்கைகுல திலகரும்" என்றார்.

வேளாளரைக் கங்கை குலத்தவரென்று கூறுதல் மரபு. உமையம்மை இமயத்திலிருந்து காஞ்சிக்கு வந்த காலை அவளோடு வந்த வேளாளரிற் சிலர் கங்கைநதிக் கரையில் தங்கி உழவு நடத்துமாறு பணிக்கப்பட்டன ரென்பதும், அங்ஙனம் பணிக்கப்பட்ட காரணம் பற்றியும் கங்கை மைந்தராகப் பிறத்தற்கு வரம் பெற்று அவ்வாறு பிறந்தனரென்பது பற்றியும் வேளாளர்க்கு அப்பெயர் ஏற்பட்டதென்பதும் புராண கதை. கங்கை யென்பது நன்னீரைக் குறிப்பதென்றும், நன்னீரின் உதவிகொண்டு உழவு நடைபெற வேண்டுதலான் கங்கையை உழவர்க்குத் தாயென்று கூறும் மரபு ஏற்பட்டதென்றும் கூறுவாருமுளர். தமிழர் இந்தியா முழுவதும் பரவியிருந்த ஒரு காலத்தில் கங்கைக் கரையில் வேளாளர் சிறந்து விளங்கினமையால், அவரைக் கங்கை குலத்தவரென்று கூறுதல் மரபாயிற் றென்றலும் ஒரு கொள்கை. வேளாண் டலைவராதலின் சேக்கிழாரைக் கங்கைகுல திலகரென்றார். அடியார் பெருமை பகரக் கருதிய ஆசிரியர் தமது அமைச்ச வேடத்தைத் துறந்து அடியார் திருவேடத்தையே கொண்டனராகத் தெரிகிறது. தலையை முண்டிதஞ் செய்து முக்குறியிட்டு முழுநீறு பூசிக் காதிரண்டினும் குண்டலங் களும் ஓங்கார வடிவமான குழையுமணிந்து, சென்னியினும், கழுத்தினும், கையினும், கண்மணி மாலையணிந்து சேக்கிழார் பெருமான் விளங்கினமையால், அரசன் அவரது

தவவேடத்தினைக் கண்டவுடன் தன்னையறியாது கைகள் தலைமீது ஏறப்பெற்றான். சேக்கிழார் பெருமானால் சிவசமயப் பெருமையையும், சிவனடியார் பெருமையையும் அரசன் உணர்ந்தானாதலின், அவரைத் தன் ஞான ஆசிரியராகக் கருதி அவர்தம் திருவடிகளை வணங்கினான். சேக்கிழார் கல்லாடை தரித்தனரென்பது தெளிவாய் விளங்க வில்லையாயினும் கவசமென்ற சொல் அதனைக் குறிக்குமென்ப. சோழமன்னன் அளவற்ற பேரன்பு செலுத்தினமையால், சேக்கிழார் புராணத்தைக் கேட்கும்படி திருச்சிலம்பொலியானும் வானிழல் வாக்கானும் இறைவன் கட்டளையிட்டனரென்க. சேக்கிழார் பெருமை யாவருக்கும் விளங்கும்படி திருவாக்கும், திருச்சிலம்பொலியும் அங்கு நின்ற எல்லார்க்கும் கேட்பனவாயின. அரசனது மெய்ப்பாட்டைச் சேக்கிழார்புராண ஆசிரியர் ஓர் அழகிய செய்யுளால் நன்கு விளக்கியுள்ளார். அது வருமாறு :

*"கண்ட கண்ணருவி தாரை கொள்ளவிரு*
*கைக ளஞ்சலி கொளக்கசிந்து*
*எண்ட ரும்புளக ரோம கூபமெழ*
*வின்ப வாரிகரை புரளவாய்*
*விண்ட தூமொழிகள் குழற வன்பினெடு*
*விம்மி விம்மியருள் மேலிடத்*
*தெண்ட னாகமுன் விழுந்தெ ழுந்துநனி*
*செம்பி யன்பரவ எம்பிரான்."*

அரசன் பெரியபுராண அரங்கேற்றத்தைப் பெரியதொரு திருவிழாவாகக் கொண்டாடக் கருதினமையால், திசைதொறும் ஆளும் ஓலையும் விடுத்தனன். புராணங் கேட்க வந்த அறிஞர்களை வரிசைப்படுத்தியவிடத்துத் திருநெறித் தமிழ் வல்லவர்களை முதலிலும், சிவாகமங் கற்றவர்களை அவருக்குப் பின்னும், வீடெய்தற்குரிய பிற ஞான நூல் கற்றவர்களை அவருக்குப் பின்னும், கிரியை ஆசிரியர்களையும், இலக்கண இலக்கியங்கள் கற்றவர்களையும், சிவபுராண காவியங் கற்றவர்களையும் மேற்கூறப்

பட்டவர்களுக்குப் பின்னுமாக வைத்துச் செய்யுளமைத் தமை காண்க.

"திருநெறித்தமிழ் வல்லபேர்கள் சிவாகமங்கள் படித்தபேர்
கருநெறிப்பகை ஞான நூல்பல கற்றபேர் மறை கற்றபேர்
குருநெறிக்குரி யோரிலக்கண லக்கியங்கள் குறித்தபேர்
பெருநெறிப்பல காவியங்கதை பேசவல்லவ ரனைவரும்."

வாசிப்பாரும், பொருள் கூறுவாரும் ஒருவராயிருத்தல் அக்காலத்து வழக்குப்போலும்! நூலாசிரியரே தாமியற்றிய நூலுக்குப் பொருள் கூறின் நூலின் உண்மைப் பொருள் தெற்றென விளங்குமாதலின், யாவரும் ஆசிரியர் சேக்கிழார் பெரியபுராணப் பொருளை விளக்கிய காலை அவருரையைக் கடவுள் மொழியாகவே கருதிக் கேட்டனர். உடுவினை வைத்து நன்னாளிதுவெனத் துணிதல் அக் காலத்து வழக்கமெனபது புலனாகின்றது. சித்திரைத் திருவாதிரை நாளிலே தொடங்கி, அந்நாளிலே முடித் தமையால் அது தெளிக. சோதிட நூலார் திரு வாதிரையைச் சிறந்த நாளாகக் கூறுவதில்லை. அந் நூன்முறையைத் தழுவாது சைவசமய நூன்முறைக் கேற்பத் திருவாதிரையைத் தெரிந்துகொண்டது உற்று நோக்கத்தக்கது. பெரியபுராண அரங்கேற்றம் நிகழ்ந்த காலை அதனுட் போந்த நாயன்மாரியற்றிய திருவருட் பாடற்றொகுதிகளும் படித்துப் பொருள் கொள்ளப்பட்டன வென்று தெரிகிறது. ஆசிரியர் சேக்கிழார் அவற்றிற்குக் கூறிய பொருளை இற்றைஞான்று அறியக் கூடாதேமாக விருக்கின்றோம். சோழ மன்னன் வந்தவர்க்கு வரையாது யாவும் வழங்கினமை நன்றாக வ ரணிக்கப்பட்டுள்ளது. அக் காலத்து உணவுப் பொருள்கள் இக் காலத்துநின்று மிகவும் வேறுபட்டன வல்லவென்பது கீழ்வருஞ் செய்யுளாலறிக:

"அன்றமுத ளூடோறு நாடோறும் அண்ணல்
அடியரள விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ்
சென்றுறையத் திருமடங்கள் திருமடங்கள் தோறுந்
திருவிளக்கங் கவர்சாத்த வுள்ளுடைமேற் போர்வை

துன்றியசெந் நெலினடிசில் கன்னனறுங் கனிகள்
தூயஅறு சுவைக் கறிநெய் தயிர்திரண்ட பால்தேன்
நன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுதம் அடைக்காய்
நரபதியே வலினமைச்சர் நாடோறும் நடத்த".
(சேக். அஉ)

எவ்வகையானும் யாதொரு குறைவின்றி வாழ்ந்து இறைவனை நேரே வழுத்தப்பெற்றமையால், தில்லையானது பூலோக சிவலோகமெனப் பொலிந்ததென்றார். பெரிய புராண அரங்கேற்றம் நிகழ்ந்தகாலத்தே பலர் தாம் கேட்ட செய்யுட்களை எழுதிவைப்பதும், எழுதி வைத்ததை வாசித்து ஒத்துப் பார்ப்பதும் பொருளுரைப்பதும், சுவை யுணர்ந்து மகிழ்வதும், புராண ஆசிரியரைப் புகழ்வதும், அரங்கேற்றம் நிகழாத மற்றைப் பொழுதில் அவரவரிருக் கைகளில் நிகழ்ந்தனபோலும்! பெரியபுராணங் கேட்போர் பயன் பெற்றவகையினைக் கூறுமொரு செய்யுள் பின்வருந் திருவாசகத் திருப்பாட்டினை நினைவுறுத்தும் :

"சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் திருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனே
நம்பி இனித்தான் நல்காயே."

திருத்தொண்டர் புராணம் முடிவுபெற்றபின் நிகழ்ந்த திருத்தொண்டர்களுடைய பெருங் கிளர்ச்சியைக் கூறுஞ் செய்யுள் பிற்காலத்து உயர்வுநவிற்சிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். இதுபோன்ற உயர்வு நவிற்சிகள் சில இப்புராணத்துள் வந்துள்ளனவெனினும் மிகுதியும் தன்மை நவிற்சியே இந்நூலுட் காணப்படும்.

---

## 7. சோழ அரசனும், ஊர்கோலமும்

தில்லைவாழந்தணர்கள் திருத்தொண்டர் புராணம் எழுதிய திருவேட்டினைச் சிவமூல மந்திரத்தால் அருச்சனை செய்து இஃது ஐந்தாவது தமிழ் வேதமென்று பாவித்துத் திருவமுது, அடைக்காய் படைத்து, நறும்புகை, விளக்கு, கவரி, குடை, கண்ணுடி, ஆலத்தி, திருநீறு முதலியன காட்டி வணங்கினர். அரசன் அத் திருமுறையைப் பசும் பட்டினுற் சுற்றிப் பொற்கலத்தில் வைத்து யானைமேல் எழுந்தருள்வித்துச் சேக்கிழார் அடிகளையும், எழுந்தருளப் பண்ணித் தானும் அவர்பின் ஏறித் தன் இரு கைகளினுலுங் கவரி வீசினன். அவர்கள் திருவீதிவலமாக வந்தனர். அப்போது அரசன் இறைவர் திருவருளை நினைந்து 'இதுவன்றே நான் செய்த தவப்பயன்!' என்றிசைத்தான்.

வீதிகளில் இவர்கள் பவனி வருவதைக் கண்ட நகர மாந்தர் அனைவரும் வீதிகளையும், வீட்டுவாயில்களையுந் தூய்மை செய்து வாழைகளும், பொன்னரிமாலையும், பூமாலைகளுந் தூக்கி நிறைகுடம் அமைத்துப் பொரிதூவி, சுடர் விளக்கும், மணிவிளக்கும் வைத்து எதிர்கொண்டு சிறப்புச் செய்துநின்றனர். மறையோர்களெல்லாம் மந்திரங்களோதி எதிர்கொண் டறுகெடுத்தனர். அரம்பையர்களெல்லாம் வாழ்த்தெடுத்தனர். யானைமீது சேக்கிழார் பெருமான் பவனி வருவதைக்கண்டசிலர் இவர் தவத்தினர், இவருக்கு அரசர் கவரியிடத் தகுமோ என்றனர். சிலர், சேக்கிழார் பெருமான் சிவமாந்தன்மைப் பெருவாழ்வெய்திய சிறப்பு நல்ல சிறப்பென்றனர். விண்ணவரும் எழுதற்கரிய மறைப் பொருளைத் தமிழ்த்திருப்பதிகத்தின்கண் வெளியிடும் மூவரும் ஒன்று சேர்ந்துதித்த முதல்வர் தாம் இவரென்ருர் ஒருசிலர். இத் திருவிழாவின்கண் முதல்

வரிசைகள் மின் மழை பெய்தன. விண்ணவர்கள் கற்பக நறுமலர்மாரி பொழிந்தனர். சேக்கிழார் பெருமான் நாவார யாவரும் இன்புறச் சொன்மாரி பெய்தனர். இரவலர் வறுமை கெடும்படி சோழமன்னன் பொன்மழை பெய்தனன். அன்பர்கள் உருகிய நெஞ்சொடு கண்மழை பொழிந்தார்கள்.

"மின்மழை பெய்தது மேக வொழுங்குகள்
விண்ணவர் கற்பக விரைசேர்பூ
கன்மழை பெய்தனர் சேவையர் காவலர்
நாவல ரின்புற நாவாரச்
சொன்மழை பெய்தனர் இரவலர் மிடிகெட
அள்ளி முகந்தெதிர் சோழேசன்
பொன்மழை பெய்தனன் உருகிய நெஞ்சொடு
கண்மழை அன்பர் பொழிந்தார்கள்."

பெரிய புராணத்தைக் கேட்டு மகிழ்ந்தவர்கள் 'குன்றை முனிவருக்கு இனிய இராமாயணகதை இயற்றிய வான்மீக முனிவரும் ஒப்பல்லர்! பாரதமென்னும் பெரு நூலியற்றிய வேதவியாசரும் ஒப்பல்லர்! ஆயிர நாவும் அறிவுமுள்ள ஆதிசேடனும் ஒப்பல்லன்! பொதியமலைக் குறுமுனிவனும் ஒப்பல்லன்' என்று புகழ்ந்தனர். திருநீறுங் கண்மணியுங் கவசமும் அணிந்து, கவளிகையும் புத்தக ஏடுங் கையிற்கொண்டு உள்ளம் உருகுந்தோறும் அரகர வென்னும் நாமம் நவின்று, யாவரும் உய்யவேண்டு மென்னுங் கருணையோடு விளங்குகின்ற சேக்கிழார் பெருமானின் திருவேடத்தைக் கண்டு உலகவரெல்லாந் தொழுது மகிழ்ந்தனர். 'கலைமகள் வெண்டாமரைப் பூவையும், சங்கப் புலவோர் பாவையும், மலரவன் நாவையும், குறுமுனியாகிய தமிழ்க் கோவையும் மறந்து, சேக்கிழார் பெருமான் திரு நாவிற் குடிகொண்டனள்' என்றனர் பலர். இங்ஙனம் யாவரும் பாராட்டத் திருவீதிவலஞ் செய்து யானையானது திருவம்பல முகப்பினில் நின்றபோது, அரசனும், ஆசிரியர் சேக்கிழாரும் யானையினிறங்கி மறையவரோடு

திரு அம்பலஞ்சென்று இறைவர் திருமுன் திருமுறையை வைத்தனர். பின் கூத்தப் பெருமானை யாவரும் வணங்கி, அருள்மொழித் தேவர்க்குத் 'தொண்டர்சீர் பரவுவார்' என்னுந் திருநாமஞ் சூட்டினர். பின் அரசன் அவரை முன் மண்டபததிலிருத்தி ஞானமுடிசூட்டி வணங்கினன். பின் அரசரும், அந்தணரும், நம்பியாண்டார்நம்பி வகுத்த பதினொரு திருமுறையோடு பெரியபுராணத்தைப் பன்னிரண்டாவது திருமுறையாகச் சேர்த்துத் திருமுறைகளுக்குச் செப்பேடுசெய்து கூத்தப்பெருமான் திருமுன்பு ஏற்றுவிததுப் பாதுகாத்தனர். இச் சிறப்பு நிகழ்த்தியபின் அரசன், 'சேக்கிழார் இளவலாகிய பாலறுவாயர் எங்குளர்?' என உசாவினன். அவர் குன்றத்தூரில் தம் பெயர் துலங்க ஒரு குளம் அமைத்து, அங்குச் சேக்கிழார் சுவாமிகளா லியற்றப்பட்ட திருநாகேச்சுரனார் கோயிலில் திருப்பணி இயற்றிக்கொண் டிருக்கின்றா ரென்று அங்கு நின்றவர்கள் அரசனுக்குத் தெரிவித்தவுடன், மன்னன் அவரை வரவழைத்து, அவருக்கு அமைச்சர் வேலையும், தொண்டைமானென்னும் பட்டமுங் கொடுத்துச் சிறப்புச் செய்தனன். அவர் அமைச்சராயிருந்ததுடன் தொண்டை மண்டலத்தையும் ஆண்டு தம் பெயரை எங்கணும் நிறுத்தினர். சேக்கிழார் பெருமான் தில்லையிலேயே பெரிய புராணப் பயிற்சிசெய்து அடியார்கள் புடைசூழத் தவத்தினில் வீற்றிருந்து அம்பலவாணரது ஆடவெடுத்த பொற்பாத நீழல் எய்தினர்.

"அண்ட வாணர்தொழு தில்லை யம்பலவ
ரடியெ டுத்துலகெ லாமெனத்
தொண்டர் சீர்பரவு சேக்கி ழான்வரிசை
துன்று குன்றைநக ராதிபன்
தண்ட காதிபதி திருநெ றித்தலைமை
தங்கு செங்கைமுகில் பைங்கழல்
புண்ட ரீகமலர் தெண்ட னிட்டுவினை
போக்கு வார்பிறவி நீக்குவார்."

திருத்தொண்டர் புராணமானது தில்லைப்பெருமான் அடியெடுத்துக் கொடுத்தவண்ணமே உலகெலாமென்று தொடங்கித் திருவருள் துணைகொண்டு பாடப்பெற்று உலகெலாமென்று முடிந்தமையால், அதனை இறைவரது திருவடிவமென்றே யாவருங் கருதின ராதலின், சிவ பெருமானுக்குச் செய்யும் வழிபாடனைத்தும் அப் பெரிய புராணத் திருமுறைக்குஞ் செய்யப்பட்டன. மறைகள் நான்கும் இறைவனருளால் வெளிவந்தமைபோல, இப் பெரியபுராணமும் அம்பலவரருளாற் பாடப்பெற்றமையின், இதனை ஐந்தாவது மறை என்று கூறுவாராயினர். தமிழ் நான்மறை மறைந்த பின்னர்ச் சைவத்திருநெறித் தலைவர் திருவாக்கே நான்மறை எனப்படுதற் குரியதாயிற்று. திரு ஞானசம்பந்தர் தேவாரம் இறைவர் நல்கிய ஒப்பற்ற சிவஞானத்தாற் பாடப் பெற்றது. "எனதுரை தன துரையாக நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமலன்" என்றமை யால், அவருரை இறைவனது உரையெனக் கொள்க. திரு நாவுக்கரசர் தேவாரம் இறைவனாலே 'திருநாவுக்கரசு' என்று புகழப்பெற்ற திருநாவினாலே பாடப்பெற்றமையின் அதுவும் இறைவர் திருவாக்கே. சுந்தரமூர்த்திகள் தேவாரம் இறைவனால் அடியெடுத்துக் கொடுத்துப் பாடப் பெற்றது. மணிவாசகப் பெருமான் திருவாசகம்இறைவனால் 'மணிவாசக'மென்று புகழப்பட்டு அவனால் எழுதப்பட்டது. ஆகவே, நால்வர் திருவாக்கும் நான்மறையாயினாற்போல இறைவனால் அடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பெரிய புராணத்தோடு மறைகளும் ஐந்தாயின. இன்னொரு முறை யால் நோக்கும் போதும் பெரியபுராணம் ஐந்தாவதாய் அமைதல் காண்க. அம் முறையாவது தேவாரம், திரு வாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பதே. இம் முறையிலேயே திருக்கோயில்களில் இவை ஓதப்படுதல் காண்க. சேக்கிழார் பெருமான் தன் பரமாசாரியராகலின் புண்ணியமிக்க சோழமன்னன் அவரை முன்னிருத்தித் தான் பின்னிருந்து தொண்டி யற்றினன். வாழ்வெனு மையல்விட்டுத் தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சாரும் நல்வினைப்

பயனுடையனு யிருந்தமையால், தன்னுடைய அரச மாண்பினை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது, அரசன் தன் அருளமைச்சருக்குத் தொண்டு புரிவதில் தலைநின்று, அதுவே தனது தவப்பயனென்று கருதினன். அக் காலத்துத் தில்லைவாழந்தணரும் தங்குலப்பெருமை பாராட்டாது திருவீதி வலம் வருங்காலை மறைமுழக்கஞ் செய்தனர். உலகில் அருட்செயல்கள் நிகழும்போது விண்ணவர் மலர்மாரி பொழிவதும், அரம்பையர் வாழ்த் தெடுப்பதும் வழக்கமென்பது சமயக் கொள்கை. சிறந்த யோகக் காட்சியுடையோரே அதனை நேரில் அறிய வல்லவர். சேக்கிழார் பெருமான் பிறர் தமக்குச் செய்த சிறப்புகளை இறைவனுக்கே உரியனவென வுன்னி இறைவனோடு இரண்டறக்கலந்த உள்ளத்தராய் நின்றுராதலின், 'சேவையர் காவலனுர் சிவமான நல்ல சிறப்பிது' என்ருர். தேவரென்பார் பதமுத்திக்கே உரியராய்ப் பரமுத்திக்குரிய நுட்பங்களை யறியாரென்று சிவ நூல்கள் பகருதலின், தேவரும் எழுதவொண்ணு மறையை என்ருர். மூவர் வரலாற்றினையும் தேவார நுண் பொருளையும் விளக்கிய ஆசிரியரை மூவரும் ஒரு முதலாய் உலகத்து முளைத்த முதற்பொருளென்றது சிறப்புரை எனக் கொள்க. சேக்கிழார் பெருமான் திருவருளை நினைந்து கூப்பிய கையராய், அரகரவென்ற மொழியும் உருகிய நெஞ்சுமுடையராய்த் திகழ்ந்தமையால், தற்போத மிழந்த தாழ்மை மிக்க மனநிலையுடையாரென்பது தெளிவு. யாவரும் உய்வதொன்றுமே கருதிப் புராணம் இயற்றினராதலின், அவரது கருணையை வியந்து உலகவ ரெல்லாம் அவரை வணங்கினரென்ப.

இராமாயண கதை இம்மையிற் பெறுதற்குரிய நன்மையின் பொருட்டும், வீரத்தையும் மானத்தையும் பாதுகாத்தற்பொருட்டும் ஓர் அரசன் மற்ருெரு மன்னனை வென்ற செய்தியைச் சிறப்பாகக் கூறுவதாய், வீட்டு நெறி எய்தும் முறையைப்பற்றித் தெள்ளிதின் யாதும் இயம்பாததால், அந்நூலியற்றிய வான்மீக முனிவர்

மெய்யடியார் புராணமியற்றிய சேக்கிழார் பெருமானுக்கு ஒப்பாகமாட்டார் என்றனர். இலக்கிய நயங்களினும் பெரியபுராணஞ் சிறந்ததென்பது இரு நூலையுங் கற்ற அறிஞர்க்கு நன்கு விளங்கும். வால்மீகி ராமாயணமே வடமொழியில் ஆதிகாவியமெனப்படும். மகாபாரதமானது மிக விரிந்ததோர் இதிகாசம். அதுவும் அரசர் போரினையே சிறப்பாகக் கூறுவது. பல உயர்ந்த கதைகளும் கருத்துகளும் அதன்கண் காணப்படினும், அவை நாயன்மார் வரலாறுகளைப்போல மெய்யன்பின் திறத்தை அத்துணை நன்கு விளக்குவன வல்ல. இவ்விதிகாசங்கள் போலவே வடமொழிப் புராணங்களும் காமியப் பயன் கருதித் தவமியற்றியவர்களுடைய வரலாற்றினையே மிகுத்துக் கூறுவன. பயன் கருதாது திருத்தொண்டு புரிந்த பேரன்பர் புராணமானது அவற்றினும் உயரியது என்பது திண்ணம். ஆதிசேடன் ஆயிரம் நாவுடையா னென்று புராணங்கள் புகலுமாதலால், ஆயிரம் நாவினால் கல்வி கற்ற அவன் மிகுந்த அறிவாளியாய் இருத்தல் வேண்டுமென்ற கருத்துப்பற்றி அவனை உவமைக்கு எடுத்துக் கொண்டார். அவன் நூல் யாதும் இயற்றிய தாகத் தெரியவில்லை. வடமொழிப் பாணினி சூத்திரத் துக்குப் பேருரையியற்றிய ஆசிரியர் பதஞ்சலியார் ஆதிசேடன் அவதாரமென்று கூறுப. யோகசூத்திரஞ் செய்தாரும் அவரே என்ப. அங்ஙனமாயின், ஆசிரியர் பதஞ்சலியாரினும் சேக்கிழார் பெருமான் சிறந்தவ ரென்பதே கருத்து. குறுமுனிவரும் இலக்கண நூல் இயற் றினரே யொழியப் பெரியபுராணம் போல்வதோர் அருட் பெருங் காப்பியம் இயற்றினரல்ல ராகலான், அவரும் ஆசிரியர் சேக்கிழார்க்கு இணையாகமாட்டார் என்றனர். சேக்கிழார் பெருமானுக்கு எவ்வகையான ஞானமுடி சூட்டப்பட்டதென்று இனிது விளங்கவில்லை. அந்த ஞான முடியானது சிவ கண்மணியினால் அமைந்ததோ, பட்டுப் பரிவட்டத்தாலமைந்ததோ தெரியவில்லை. பெரியபுராணம் நீடூழி நிலைத்தற்பொருட்டுச் செப்பேட்டினில் எழுதப் பட்டதுபோலும்! அஃது இப்பொழுது இருக்கின்றதா

என்பது நன்கு விளங்கவில்லை. திருவருள் பெற்றபின் மணிவாசகனாரைப் போலச் சேக்கிழார் பெருமானும் அமைச்சர் வேலையை மேற்கொள்ளக் கருதிற்றிலர். ஆதலின், சோழ மன்னன் அவருடைய இளவலாகிய பாலருவாயற்கு அமைச்சுரிமை யளித்தனன். தொண்டை நாட்டிலேயே மிகுதியும் அவர் தங்கினமையால் அந் நாட்டையாளும் அதிகாரமும், தொண்டைமானென்னும் பட்டமும் அவருக்கு அளிக்கப்பட்டன. அவர் தம் பெயரால் அமைத்த குளம் 'பாலருவாயன் கேணி' என்று இப்பொழுதும் வழங்குகின்றது. இவரும் சிவனடிப் பேரன்பிற் சிறந்தவராகலின், தம்முடைய தமையனார் குன்றத்தூரிலமைத்த திருநாகேச்சுரத் திருக்கோயிலில் திருப்பணி இயற்றிக்கொண்டிருந்தனரென்க.

இவர் தொண்டை மண்டலத்திலேயே தங்கியிருந்து அதிகாரஞ் செலுத்தினமையால், 'தொண்டை மண்டலம் நின்று காத்தபெருமான்' எனப் பெயர் பெற்றனர். இவராவது, இவருடைய தமையனாராவது மனைவாழ்க்கை நடத்தியதாகத் தெரியவில்லை. சேக்கிழார் பெருமான் ஞானமாக்கதையாகிய பெரிய புராணத்தை ஓதல், ஓது வித்தல், கேட்டல், கேட்பித்தல், தெளிதல் என்னும் ஞான பூசனையையே இயற்றி, ஞான நிட்டையில் வீற்றிருந்து வீடெய்தினரென்று தெரிகிறோம். சேக்கிழார் திருமரபானது எக்காலத்தும் நின்று நிலவ வேண்டு மென்றதற் கிணங்க, இப்பொழுதும் அக்குடியைச் சார்ந்தோருளரென்று கேள்விப்படுகிறோம். அவரியற்றிய பெருநூலானது என்றும் நின்று நிலவுந் தன்மைத் தாதலின், அதுவே அவரது திருப்பெயரைத் தமிழுலகம் உள்ளவரை நிலைபெறச் செய்து அழியாப் புகழை நல்குவ தெனக் கொள்க.

## 8. பெரியபுராண ஆராய்ச்சி

*உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்*
*நிலவு லாவிய நீர்மலி வேணியன்*
*அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்*
*மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.*

பெரியபுராணமானது, சொன்னடையினும் பொருள் விழுப்பத்தினும் இணையற்றதாய் எவ்வகைச் சிவ வழிபாட்டினர்க்கும் பொதுவாகிய பெருநூலாக விருத்தலின், சிவ வழிபாடு உலகில் உள்ளவரை நின்று நிலவும் பெருங்காப்பியமாம். அது, மெல்லோசை மிக்க எளிய இனிய செவ்விய நன்மொழிகளைப் பா நயமும் பொருள் வளமும் பயக்கத்தக்க அரிய முறையில் அமைத்து இயற்றப்பெற்ற செய்யுட்கள் அடங்கியதாகலின், ஒப்பற்ற உயர் நடையுடையது. அச் சொன்னடையின் திட்பநுட்பங்களை விரிவாக இச் சிறு நூலுள் எடுத்துக்காட்டுதல் இயலாத தொன்றே. சிற்சில நயங்களையே ஈண்டுக் குறிக்கின்றோம். இப் புராணத்தின் முதற் செய்யுளையும், கம்பராமாயணத்தின் "உலகம் யாவையும்" என்னும் முதற் செய்யுளையும் ஒப்பிட்டுப் பார்ப்பின், முன்னையதின் ஓசை நயம் தெள்ளிதிற் புலனாகும். "உலகெலா முணர்ந் தோதற் கரியவன்" என்னும் அடியில் மெல்லோசையே மிகுதியும் பயின்று வந்தது. 'உலகெலாம்' என்பதிலுள்ள ககரம் லகரமாகிய இடை எழுத்தோடு கலந்து நிற்றலின், அதன் வல்லோசை மெலிவுற்றது. அவ்வடியில் வந்த தகரமெய்களும் முறையே மெல்லெழுத்தோடும் இடையெழுத்தோடுங் கலந்து மென்மைப்பட்டன. ஈற்றுச் சீரிலுள்ள ககரம் மெல்லோசையின் நயம் விளக்க வந்தது. அவ்வடியின்கணுள்ள சொற்கள் யாவும் எளிய செஞ்சொற்களேயாம். அதனுட் போந்த கருத்து மிகவும் விழுமியது. இராமாயணச் செய்யுள்

முதலடியாகிய "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்" என்பதன்கண் முதலிரண்டு சீரும் புராணச் செய்யுளைப் பார்த்து அமைக்கப்பட்டன போலும்! பெரியபுராணம் கம்பராமாயணத்திற்கு முற்பட்டதென்பது சரித்திரத்தால் இனிது விளங்கும். ஈற்றுச் சீராகிய 'ஆக்கலும்' என்பதில் வல்லோசை மிக்கது. 'உளவாக்கலும்' என்ற சொற்றொடர் அத்தனை நயமுடையதன்று. 'ஆக்கலும்' என்பதே பொருளுணர்த்தப் போதியதாகும்.

இனிப் பெரியபுராண முதற்செய்யுளின் இரண்டாவது அடியின்கண் வல்லோசை யாதும் வந்திலது. இறைவனுடைய கருணையே அவ்வடி போலும்! முதலடியில் இறைவனது பெருமையை உணர்த்துஞ் சொல்லாகிய 'அரியவன்' என்பதன் முதற்கண் வல்லோசை அமைந்ததும் பொருத்தமே. கம்பராமாயண முதற் செய்யுளின் இரண்டாவதடியின்கண் காத்தலைக் குறிக்குஞ் சொல்லும் வல்லோசை மிக்கதே. பெரியபுராணச் செய்யுள் மூன்றுமடியில் இறைவனின் பேரறிவும் பெருஞ் செயலும் சுருங்கிய சொற்களால் ஒருங்கே குறிக்கப்பட்டன. 'சோதியன்' என்ற சொல் ஞானத்தையும், 'ஆடுவான்' என்ற சொல் ஐந்தொழிலையுங் குறிக்கும். அலகில் சோதியனாய் அம்பலத்தாடுவான் என்றமையால், ஆடுந் தொழிலும் அலகிலாத் தன்மையதென்பது தெளியப்படும். ஆடுந்தொழில் கருணையின்பொருட்டு நிகழ்வதென்பது இரண்டாமடியில் இறைவனது கருணையை உணர்த்தினமையால் உய்த்துணரப்படும். கம்பராமாயண முதற் செய்யுளின் மூன்றுமடியில் முத்தொழிலும் இறைவனது விளையாட்டென்பதே குறிக்கப்பட்டது. இறைவனது தொழிலை விளையாட்டென்பது அத்துணைச் சிறந்த முறையன்று. அது கிரீடப்பிரமவாதிகள் கொள்கைக்கு அணித்தாயது. இனிப் பெரியபுராணச் செய்யுளின் நான்காம் அடியில் பொருள் வளமும் ஓசை நயமும் மற்றைச் செய்யுளின் நான்காமடிக்கு இலவாதல் தெளிவு. 'மலர் சிலம்படி' என்றவிடத்து உலகத் தோற்றத்திற் கேதுவாய்

விரியும் அருள்நாத மூல ஒலியாகிய ஓங்காரம் குறிக்கப் பட்டமை காண்க.

ஒற்றுமை வேற்றுமை நயம் விளங்கச் சொற்றொடர் அமைப்பதில் ஆசிரியர் சேக்கிழார் மிகவுந் திறமை சான்றவர்.

"தளர்வொடு சாய்ந்தும் அன்பு
தம்பிரான் திறத்துச் சாயார்" (திருநீலகண்டர், க)

"இன்ன வாறுவ ளஞ்சு ருங்கவும்
எம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்குதல்
இன்றி யுள்ளன மாறியும்"

"உணர்வி னுணர வொண்ணு
வொருவரை யுணர்த்த வேண்டி"
(இளையான்குடி, எ, உக)

"ஆயு நுண்பொரு ளாகியும் வெளியே
யம்ப லத்துணின் ருடுவா ரும்பர்" (இயற்பகை, ச)

"வெண்ணீறு நெற்றி விரவப் புறம்பூசி
யுண்ணெஞ்சில் வஞ்சக் கறுப்பும் உடன்கொண்டு"
(ஏனாதிநாயனார், கஅ)

"அரியறியா மலர்க்க ழல்க ளறியாமை யறியாதார்"
(மானக், க0)

"ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை
யுலகியல்பி னுபநயன முறைமை யாகும்
இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி"
(திருஞானசம்பந்தர், உகச)

"நீங்கினு ரெப்பொருளும் நீங்காத நிலைமையினர்"
(ஏயர்கோன், கஅ0)

என்னும் இவைபோன்ற அடிகள் வேற்றுமை நயம் விளக்குவன.

இனி ஒற்றுமை நயம் விளக்கும் அடிகள் வருமாறு:

"அனேவர்க்கு மனேவராகி" (இயற்பகை, உஉ)

"தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும்" (அமர்நீதி, சக)

"பழமறை பரசுந் தூய பரசு" (எறிபத்தர், எ)

"மூளும் பெருகன் பெனுமூர்த்தியார் மூர்த்தி யார்தாம்" (மூர்த்தி, க)

"திருவாரூர் திருவாரூர்" (திருநாவுக்கரசு, கஉ)

"குளத்திலெடுத் தார்வினையின் குழிவாய்நின்
றெனையெடுத்தார்" (ஐயடிகள் காடவர், க)

"கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றே னேழு பிறப்பின் முடங்குகூன்" (கூற்றுவநாயனர், க)

"வெறியுண் சோலைத் திருமுருகன்
பூண்டி வேடர் வழிபறிக்கப்
பறியுண் டவரெம் பழவினைநோய்
பறிப்பா ரென்னும் பற்றாலே" (முனையடுவார், எ)

"உலகில்வள ரணிக்கெல்லா முள்ளுறையூ ராமுறையூர்" (புகழ்ச்சோழர், க)

"செய்வண்ணத் திறமொழிவேன்
தீவினையின் திறமொழிவேன்" (கண்ணப்ப நாயனர், கசக)

திருநாவுக்கரசு புராணம், கoடு ஆவது பாட்டில்; உலகெலாம் அழிக்க வந்த ஆலகால விடமானது சிவ

பெருமானுக்கு அமுதம் ஆயினாற்போல, சிவபெருமான் தமராகிய அப்ப மூர்த்திகட்கு நஞ்சுகலந்த பாற்சோறு அமுதமாதல் இயல்பே என்பார்,

"பொடியார்க்குந் திருமேனிப் புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க முன்னைவிடம் அமுதானால்
மடியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுத மாவதுதா னற்புதமோ!"

என்றார்.

பெரியபுராணத்துட் சிலேடைகள் சிலவே. சிலேடைக்கு ஓர் உதாரணம் கூறுதும் :

"காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் டுகளணிந்து துளிவ ழகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால்"

என்றவிடத்துத் 'தாமரையானது புல்லிய விதழும் நூலும் மகரந்தத் துகளுமுடைத்தாய்த் தேன்சிதறி வண்டின் இசையோடு யாமத்திலும் பாட்டொலியோடு திகழ்கின்றது' என்ற ஒரு பொருளும், 'வேதியர் நுனியுடைய தர்ப்பைப் புல்லும் பூணூலுந் தாங்கித் திருநீறணிந்து கண்ணீரரும்பிச் சிறந்த சாமவேதம் பாடுவர்' என்ற மற்றொரு பொருளும் புலனாதல் காண்க.

ஒரு சொல்லினை ஒரு செய்யுளில் ஒத்த பொருளில் பன்முறையும் வைத்து வழங்குமாற்றல் இவ்வாசிரியர்க் குண்டென்பது பின்வருஞ் செய்யுளால் இனிது விளங்கும்.

"தாது சூழுங் குழன்மலையாள் தளிர்க்கை சூழுந் திருமேனி
மீது சூழும் புனற்கற்றை வேணி நம்பர் விரும்புபதி

சோதி சூழு மணிமௌலிச் சோழர் பொன்னித் திருநாட்டுப்
போது சூழுந் தடஞ்சோலைப் பொய்கை சூழும் பூம்புகலூர்"
(முருக நாயனுர், க)

"பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்கு
லார்பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர்பரவை யாயினுள் திருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை யிடைப்பட்ட வென்னுசை யெழுபரவை."
(தடுத்தாட். கஅச)

இச் செய்யுளில் 'பெரும்பரவை' என்ற சொற்ருெடர் 'பேர் உம்பர் அவை' எனப் பிரிவுற்றுப் 'பெரிய தேவர் கூட்டம்' எனப் பொருள்படும். இரண்டாவதடியின் தொடக்கத்தில் வந்துள்ள 'பரவை' என்னுஞ் சொல் 'பரவப் படுந் தெய்வம்' எனப் பொருள்படும். அவ்வடியின் இறுதியில் நிற்கும் 'அரும் பரவை' என்ற சொற்ருெடரை 'அரும்பர் அவை' என்று பிரித்தல் வேண்டும். மூன்ருவ தடியிலுள்ள 'பரவை' என்ற சொல் 'திருமகள்' என்று பொருள்படும். இறுதியடியில் 'பரவை' என்ற சொல் 'கடல்' என்ற பொருளில் வந்தது. இப் பாட்டின் தொகைப் பொருளாவது பெயரால் பரவை எனப்படுபவள் பெண் டன்மையினுல விண்ணவர் கூட்டம் போற்றுந் தேவமாத ரால் புகழப்படுந் தன்மையுடையாள். அழகு விளங்கும் அவளது முத்தின் ஒளிமிக்க பற்கள் முல்லையரும்புகளை யொக்கும். திருமகள் போன்ற உடற்சீர் உடைய அவளது திருவடிவின் மென்சாயலாகிய அழகுக் கடலினிடைப்பட்ட என் ஆசையானது 'ஏழுகடல் போல்வது' என்பதே.

சண்டேசுர நாயனுர் கூ ஆவது பாட்டில் பயன்கள் பலவற்றை அழகாகத் தொகுத்துக் கூறியிருப்பது வியக்கத் தக்கது.

"பண்ணின் பயனும் நல்லிசையும்
பாலின் பயனும் இன்சுவையுங்
கண்ணின் பயனும் பெருகொளியுங்
கருத்தின் பயனும் எழுத்தஞ்சும்

விண்ணின் பயனும் பொழிமழையும்
வேதப் பயனுஞ் சைவமும்போன்
மண்ணின் பயனு மப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ?''

திருவெழுகூற்றிருக்கையிற்போல ஒன்றுமுதல் ஏழு வரைஉள்ள எண்களுக்குத் தக்க சொல்லமைத்து இயற்றப்பெற்ற செய்யுளொன்று இப் புராணத்திலுள்ளது. அது வருமாறு:

"செம்மை வெண்ணீற் றொருமையினு
ரிரண்டு பிறப்பின் சிறப்பினுர்
மும்மைத் தழலோம் பியநெறியார்
நான்கு வேத முறைபயின்றூர்
தம்மை யைந்து புலனும்பின்
செல்லுந் தகையா ரறுதொழிலின்
மெய்ம்மை யொழுக்க மேழுலகும்
போற்று மறையோர் விளங்குவது." (சண்டே. உ)

தம் நாவினுற் சொல்வதற்குத் துணியாத கொடுஞ் செய்திகளை இடர் விளையாத சொற்களாற் சொல்லுவதில் இவர் மிகத்திறமை வாய்ந்தவர். மெய்ப்பொருணயனு ரையும் ஏனுதிநாயனுரையும் உயிர் நீக்கிய பகைவர் செய்தியைக் கூறுவார்,

" தான்முன் னினைந்தவப் பரிசே செய்ய "
(மெய்ப்பொருணயனுர், கஇ)

என்றும்,

"முன்னின்ற பாதகனுந் தன்கருத்தை முற்றுவித்தான்''
(ஏனுதிநாயனுர், சo)

என்றுங் கூறினர்.

சில சொற்றொடர்களை இருபொருள் பயக்கும் வண்ணம் அமைத்து, அவற்றைச் சொல்லுவோர்க்கு ஒரு

பொருளுங் கேட்போருக்கு இரு பொருளுந் தோற்றுவித்து நகை விளைத்தல் இவரியல்பு. தடுத்தாட்கொண்ட புராணம் சஅ இல் நம்பியாரூரர் அந்தண வடிவினனாய் வந்த இறைவனைப் "பழைய மன்ருடி போலும்" என்ற விடத்து, 'நெடுநாளாக மன்றுகளில் வழக்காடுபவன்' என்ற பொருளே அவ்வமயத்தில் நம்பியாரூரர்க்குப் புலனாயது. புராணத்தைக் கேட்போர்க்கு 'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளாய்த் தில்லைமன்றுள் நடிப்போன்' என்ற மற்றொரு பொருளும் புலனாதல் காண்க. அங்ஙனமே வழக்கு முடிந்தபின், "நீர் யார்?" என்று வினவியவர்களுக்கு இறைவன் "என்னை யொருவரு மறியீராகிற் போதும்" (தடுத்தாட் கொண்ட புராணம், சுரு) என்றுரைத்தவிடத்து, இறைவன் எல்லாராலும் ஓரளவி னறிந்து வணங்கப்படுபவன்; அவனை யறியாதார் உய்திகூடாரென்ற குறிப்புப் பொருளும் உய்த்துணர வைத்தல் காண்க.

மெய்ப்பொருள் நாயனாரிடம் அவருக்குப் பகைவன்,

"எங்குமில் லாத தொன்று கொடுவந்தேன்" (மெய்ப். கஉ)

என்றவிடத்து, 'எங்குமில்லாத ஆகமம்' என்ற நேர் பொருளும், 'எவ்விடத்திலுஞ் செய்யக்கூடாத கொலைக் கேதுவாகிய கருவியொன்று கொடு வந்தேன்' என்ற குறிப்புப் பொருளும் புலனாதல் காண்க. அவ்வாறே அமர்நீதி நாயனார் புராணம் உக இல் 'அங்கண் வேதியர் பெருந் துடக்கினி லகப்பட்டார்' என்றவிடத்து, 'வேதியரது பெருவழக்கினில் அகப்பட்டார்' என்றொரு பொருளும், வேதியரால் வந்த இறைவனது பேரருட் டொடர்பி லகப்பட்டு உய்தி கூடுதற்குரியரானார்' என்று மற்றொரு பொருளும் புலனாதல் காண்க.

சில இடங்களில் சொல்லாற்றலினாலே நுட்பமான பொருளைக் குறிப்பது இவர்க்கு வழக்கம். திருஞானசம்

பந்தர் உஅ௦இல் 'பெற்ற குலத் தாதையாரும்' என்றவிடத்துச் சம்பந்தப் பெருமானது மெய்த் தந்தையார் இறைவரே யென்றும், பிறப்புச் சார்பான் மட்டுமே சிவபாத விருதயர் அவர்க்குத் தந்தையாரென்றும் குறிப்பித்தமை காண்க. வெப்பு நோயால் வருந்திய பாண்டியன் நாயனுரைக் கண்டவுடன்,

"சிந்தையாற் றெழுது சொன்னுன்
செல்கதிக் கணிய ஞுனன்" (திருஞான எசுகூ)

என்றவிடத்து, வெப்பு நோய் தீர்ந்து சைவத்துட் புகுமுன் வெளிப்படையாகக் கையாற் றெழுதிற்றிலன் என்றும், வெளிப்படையாகத் தொழாமையின் செல்கதியாகிய சிவநெறிக்கு அணித்தாய் நின்ருனேயொழிய, அதனை யெய்திற்றிலன் என்றுங் குறிப்பாலுணர்த்தியவாறு காண்க. காரைக்காலம்மையார் புராணத்தில் அம்மையாரது வனப்பினை விரித்துரையாது சுருங்கிய இரண்டடிகளால் விரித்தற்குரிய பொருளனைத்தும் விளக்கிப்போந்தனர். காரைக்காலம்மையார் புராணம் சூஆவது பாட்டில்,

"நல்லவென உறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினுல்"

என்றவிடத்துப் புலவர் அழகிற் கெல்லை கண்டு வகுத்துரைத்த இலக்கணங்களைக் கடந்ததொரு பேரழகு அம்மையார்க்கு இருந்ததென்பதைச் சுட்டியுரைத்துஉறுப்பு நூலிற் கூறியாங்கு அவர் வனப்பை வகுத்துணர்ந்து கோடற்கும் இடனமைத்தமை காண்க.

பின்வருஞ் செய்திக்குத் தோற்றுவாயாக முன்னரே குறிப்பு மொழியமைத்து உசாவுணர்ச்சி யெழுப்புதல் சில இடங்களிற் காணப்படும்.

"பிழைக்குநெறி தமக்குதவப்
பெண்கொடியைப் பெற்றெடுத்தார்" (மானக். கக)

என்றவிடத்து, ஆண்மக்கட் பேற்ருல், பிதிர்கள் நற்கதி யடைவார்கள் என்று கொள்வார்க்குப் பெண்கொடி பிழைக்கு நெறியை எவ்வாறு உதவுதல் கூடும் என்ற வினு எழுதல் இயல்பே. ஆனுல், கூந்தலை அரிந்து அடியவர்க்கு ஈயும் பெருந்தொண்டிற்குப் பெண்கொடி காரணளாயினள் என்பது குறிப்பால் முன்னுணர்த்தப்பட்டது. சண்டேசுர நாயனுர் புராணத்தில் கo ஆம் பாட்டில்,

"அருமை மணியு மளித்ததுவே நஞ்சு மளிக்கு மரவுபோல்
இருமை வினைக்கு மொருவடிவா மெச்ச தத்த னுளனுனன்"

என்றவிடத்து, நாயனுரின் தந்தையாராகிய எச்சதத்தன் செயலால் விளைந்த தண்டமும் திருவருட் பேறுங் குறிப்பாலுணர்த்தப்பட்டன.

இவர் தமது காப்பியத்துட் பல அழகிய உவமைகள் அமைத்துள்ளார். செல்வமானது பல முயற்சிகளாற் பெருகி யோங்குவது போலத் தோன்றி ஊதிய மிலாமையான் இழக்கப்பட்டொழிவதற்கு உவமையாக யானையென்னு நோயினுல் உள்ளீடற்றுப் பயனிலாததாகும் விளாங்கனியை எடுத்துக்காட்டினுர். அரிவாட்டாய நாயனுர் புராணம், அ ஆம் செய்யுளில்,

"மேவு செல்வங் களிறுண் விளங்கனி
யாவ தாகி யழியவும்"

என்றது காண்க.

'நல்குர வென்னுந் தொல் விடம்' என்ற வண்ணம் வறுமை யென்னும் விடாநோயால் வருந்துவார்க்கும் பெருஞ் செல்வங் கிடைப்பின், அளவற்ற மகிழ்ச்சியுளதா மாகலின்,

'அற்றவர்க ளருநிதியம் பெற்ருற்போல்' (அப்பூதி கஅ.) அப்பூதியடிகள் திருநாவுக்கரசரைக் கண்டு

மகிழ்வுற்றதாகக் கூறினர். நூலாசிரியர் பேரமைச்சராய்ப் பெருஞ் செல்வத்திற் பிறங்கியிருந்தகாலையும், வறுமை நோயின் கொடுமையை நன்குணர்ந்திருந்தாரென்பது இதனற் பெறப்படும். 'மன்னன் உயிர்த்தே மலர் தலை யுலகம்' என்னுங் கருத்தை முன்னோர் கருத்தாகச் சுட்டினர் :

*"மன்னரை யின்றி வைகு மண்ணுல கெண்ணுங்காலை*
*இன்னுயி ரின்றி வாழும் யாக்கையை யொக்கு மென்பார்"*
(மூர்த்தி நாயனர், உக)

தெளிவான எதிர்மறை யுவமைகள் அமைத்துப் பாடுவதில் இவர் வல்லவர். கூன்பாண்டியனுக்கு உடம்பி லொரு பகுதி வெப்பு நோய் ஒழிந்தும், மற்றொரு பகுதியில் அது மிகுந்தும் இருந்த காலை அவ்விரண்டு பகுதிக்குமுள்ள வேற்றுமையைத் தக்க உவமைகளால் விளக்கியுள்ளார்.

*"வெங்நர கொருபா லாகும் வீட்டின்ப மொருபா லாகுந்*
*துன்னுநஞ் சொருபா லாகுஞ் சுவையமு தொருபா லாகும்"*
(திருஞான. எகஅ)

ஏனதிநாயனர் புராணத்தில், நாயனரைப் புலிக்கும், சூழ்ச்சி மிக்க அவர் பகைவனை நரிக்கும் உவமித்தனர்.

*"வெங்கட் புலிகிடந்த வெம்முழையிற் சென்றழைக்கும்*
*பைங்கட் குறுநரியே போல்வான் படைகொண்டு"*
(ஏனதி. சo)

என்றது காண்க.

வாளைமீன்கள் பன்னிற முடையனவாய்ச் செழுமை மிகுதியாற் கமுகின்மேற் றெகுதியாய்ப் பாடுங்கால் அக் காட்சி வானவில் வடிவம் போன்றிருந்த தென்பவர்,

"கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவிற் போலுமால்"
(திருநாட்டுச்சருக்கம். கக)

என்றார்.

ஒரு கருந்திரைக்குப்பின் ஒளியின்கண் உள்ள பொருள்கள் திரை நீங்கிய விடத்துத் தெளிவாக விளங்குமாறு போல இரவு என்னுந் திரை நீங்கிய விடத்துக் கதிரவன் எழுச்சியால் உலகப் பொருள்கள் இனிது விளங்கும் என்பார்,

"எய்காட்டின் மாவளைக்க விட்டகருந் திரையெடுத்துக்
கைகாட்டி வான்போலக் கதிர்காட்டி யெழும்போதில்"
(கண்ணப்ப, கஙச)

என்றார்.

ஆறுகளை மனைவியர்க்கும் கடலைக் கணவனுக்கும் உவமித்தல் இயல்பு. அவ்வுவமை சிறப்பாக எடுத்து ஆளப்படுதற்குரிய காலம் கார்காலம். கார்காலத்தில் போர்வயிற் பிரிந்த தலைவன் வரவைக் கருதி எதிர் நோக்கியிருக்குந் தலைவியின் உள்ளம் அவன்பால் விரைந்து செல்லுமென்பது தெளிவு. கார்காலத்திலே ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பிற காலங்களினும் மிகுந்த விரைவோடு கடல் நோக்கிச் செல்லுதல் இயல்பாதலின், அக் காலத்தை ஒட்டி அவ்வுவமையை எடுத்தாண்டனர்.

"கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளி ருள்ளம்
சீர்கெழு கணவன் தன்பால் விரைவுறச் செல்லு மாபோல்
நீர்கெழு பௌவ நோக்கி நிரைதிரை யிரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகை யாறு"
(சம்பந்தர், அகஉ)

என்றது காண்க.

கடவுள் நெறிச் சார்பான பொருள்களையே உவமைக்கு எடுத்துக்கொள்ளுதல் இந்நூலுள் மிகுதியாகக் காணப் படும். வெண்மைக்குத் திருநீற்றினை உவமையாக எடுத்துக் கொண்டனர்,

"பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது"
(திருமலைச் சிறப்பு, ௩)

என்றது காண்க.

திருக்கூட்டச் சிறப்பில் அகத்தூய்மைக்குத் திருநீறு உவமையாகக் கூறப்பட்டது.

"பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்" (திருக்கூட். ௮)

அடியார்கள் திருக்கூட்டத்தினைப் பாற்கடலுக்கு உவமித்தலாலே அவர்கள் திருமேனிமேலுள்ள திருநீற் றொளியினைப் பாலின் வண்ணத்திற்கும், அவர்கள் ஓதும் அஞ்செழுத்தொலியைப் பாற்கடலின் ஒலிக்கும் ஒப்பிட்டது காண்க.

"அரந்தை தீர்க்கு மடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யானிறை தூய்மையாற்
புரந்த வஞ்செழுத் தோசை பொலிதலாற்
பரந்த வாயிரம் பாற்கடல் போல்வது." (திருக்கூட். ௫)

திருநீறானது மலநீக்கமாகிய தூய்மையையும், சிவப் பேருகிய இன்பத்தையும், திருவொளியாகிய தண்மை யையும் குறிப்பதாதலின், வெண்மையினால் தூய்மையையும், காட்சிக்கு இன்பத்தையும், உடற்குத் தண்மையையும் பயக்கும் நிலவொளிக்குத் திருநீற்றினை உவமித்தார். இதனால் திருநீற்றின் உட்கருத்தும் இனிது விளங்குதலறிக.

"தோற்று மன்னுயிர் கட்கெலாந் தூய்மையே
சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய்
ஆற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீணிலா"
(தடுத்தாட். கசுஉ)

என்றது காண்க.

சான்றோர்களது தூய உள்ளத்திற்குத் திருநீற்றினை ஒப்பிடுவார் 'நல்லோர் மனம்போல்...சேம நிலவு திருநீறு' என்றார். திருநீற்றொளியை நிலவொளிக்கு இணையாகக் கூறுவார், நிலவு இரவின் இருளை நீக்குவதுபோலத் திருநீறும் யாம இருளை நீக்கிற்றென்றதனோ டமையாமல், அதனொளி வீசப்பெற்ற மலர்களிற் படிந்த வண்டுகளும் வெண்ணிறத்தன வாயினவென்றார்.

"நாம மூதூர் மற்றதனுள்
நல்லோர் மனம்போ லரவணிந்த
சேம நிலவு திருநீற்றின்
சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம விருளும் வெளியார்க்கும்
இரவே யல்ல விரைமலர்மேற்
காமர் மதுவுண் சிறைவண்டுங்
களங்க மின்றி விளங்குமால்" (முருகநாயனார், உ)

என்றது காண்க.

இளையான்குடி மாற நாயனார் நன்கு வளராத குறும் பயிர்களை அடியவர்க்குக் கறியமைத்தற் பொருட்டு எவ்வாறு பறித்தனரென்னில், பற்றிற்கும் பழிக்குங் காரணமாகிய மூல மலத்தைப் பறித்தொழித்தல் போலக் களைந்தெடுத்தாரென்று கூறின விடத்துத் தத்துவக் கருத்தினை உவமையாக அமைத்தமை காண்க.

"குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்பார் போலப் பறித்தவை கறிக்குநல்க"
(இளையான், உக)

ஏனாதிநாத நாயனார் வாளினாற் போரில் அவரை எதிர்த்த பகைவர் பட்டு மாய்ந்தமைக்கு, நிலைப்பட்ட மெய்யுணர்வின்முன் காம வெகுளி மயக்க மென்னுங் குற்றங்கள் மாய்ந்தொழிந்ததை உவமை கூறினார்.

"நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்பட்ட போதில்
அலைப்பட்ட வார்வமுதல் குற்றம்போ லாயினார்"
(ஏனாதி, உஎ)

இச் செய்யுளில் திருக்குறட் கருத்துக் காணப்படுவது போலப் பிறவிடங்களிலுந் திருக்குறட் சொல்லுங் கருத்தும் வந்துள்ளன.

"கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினால்"
(ஏயர்கோன், உசுஎ)

"ஏதிலார் போல நோக்கி" (திருநீலகண்ட, எ)

என்றமை காண்க.

வேட்டைக்கண் அச்சத்தோடு வலைகளைத் தப்பி விசையாகச் செல்லும் விலங்குகளைத் தடைசெய்து மிகுந்த சினத்தோடு பிடிக்கும் நாய்களுக்கு, இருவினை வலைநின்றும் வீட்டு நெறி செல்பவர் மனத்தினைத் தடை செய்து பற்றும் ஐம்பொறிகளை உவமித்தார்.

"பலதுறைகளின் வெருவரலொடு பயில்வலையற நுழைமா
வுலமொடுபடர் வனதகையுற வுறுசினமொடு கவர்நாய்
நிலவியவிரு வினைவலையிடை நிலைசுழல்பவர் நெறிசேர்
புலனுறுமன னிடைதடை செய்த பொறிகளினள வுளவே"
(கண்ணப்பர், அரு)

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் அடியார்களது ஆடை மாசு கழிப்பார்போல மும்மலச் சார்பாக வரும் பிறவி மாசினைத் தொலைப்பார் என்றவிடத்தும் மெய்ந்நூற் கருத்தினையே உவமேயமாக அமைத்தனர் :

"தேசுடைய மலர்க்கமலச் சேவடியா ரடியார்தந்
தூசுடைய துகண்மாசு கழிப்பார்போற் றெல்லைவினை
ஆசுடைய மலமூன்று மணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து வருநாளி லங்கொருநாள்"

(திருக்குறிப், ககஎ)

தடுத்தாட்கொண்ட புராணம் கருகூஇல்

"பஞ்சின் மெல்லடிப் பாவைய ருள்ளமும்
வஞ்ச மாக்கள்தம் வல்வினை யும்அரன்
அஞ்செ ழுத்தும் உணரா அறிவிலோர்
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான்"

என்றவிடத்துச் சமயக் கருத்தும் அறநூற் கருத்தும் உவமையாக வந்தன. குற்றமாகத் தோன்றுவனவற்றைக் குற்றமற்றனவென விலக்குதற்பொருட்டு அழகிய உவமைகள் அமைப்பதில் இவர் திறமை மிக்கவர். கண்ணப்ப நாயனர் தமது வாய்நீரால் இறைவனுக்கு நீராட்டினமையும், தமதுவாயினுற் சுவைத்த ஊனமுதம் அவர்க்கு அவர் நல்கினமையுங் குற்றமில்லாத செயல்களே என்பார்,

"வாயின்மஞ்சன நீர் தன்னை
விளைத்தஅன் புமிழ்வார் போல விமலனுர் முடிமேல் விட்டார்"

(கண்ணப்ப, கஉக)

என்றும்,

"எண்ணிறந்த கடவுளருக் கிடுமுணவு கொண்டூட்டும்
வண்ணஎரி வாயின்கண் வைத்ததெனக் காளத்தி
அண்ணலார்க் காம்பரிசு தாஞ்சோதித் தமைப்பார்போல்
திண்ணனுர் திருவாயில் அமைத்தாருன் திருவமுது"

(கண்ணப்ப, கஎஎ)

என்றுங் கூறினுர்,

திருநாளைப்போவார் நெருப்பில் மூழ்கி வந்துவிடத்து அவர் அந்தணரைப் படைத்தோனாகிய அயன் போன்றனரென்பார்,

"செந்தீமே லெழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
வந்தணன்போல் தோன்றினர்' (திருநாளைப், கூக)

என்றார்.

"நீறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி யெழுச்சியினின் மாதவஞ்செய்
சீறடியார் திருவலகுந் திருமெழுக்குந் தோண்டியுங்கொண்டு
ஆறணிந்தார் கோயிலினுள் ளடைந்தவரைக் கொடுபுக்கார்"
(திருநாவுக், கஅ)

என்பதனால் ஒற்றுமை நயம் விளங்குகின்றது.

மூவர் திருப்பதிகங்கள் பாடிய செய்தியைக் கூறுமிடத்துச் சில இடங்களில் திருப்பதிக முதற் குறிப்பையும், சில இடங்களில் முடிபினையும் விளக்கியும், சில இடங்களில் இரண்டினையும் அமைத்தும், திருப்பதிகக் கருத்தினைச் சில இடங்களில் விளக்கி இடைநின்ற சொற்றொடர்கள் அமைத்தும், பிற இடங்களில் திருப்பதிகக் கருத்தினை விளக்கியும் ஆசிரியர் திருப்பதிகங்கட்குத் தோற்றுவாய் அமைத்துள்ளார்.

முதற் குறிப்புக்கு உதாரணம் :

"பித்தாபிறை சூடியெனும் பெரிதாந்திருப் பதிகம்"
(தடுத்தாட், எசு)

"கூற்றாயின வாறு விலக்கிலீ ரெனநீடிய
கோதில் திருப்பதிகம்" (திருநாவுக், எ0)

"தோடுடைய செவியனெனு
மெய்ம்மை மொழித் திருப்பதிகம்" (திருஞான, எஅ)

"செஞ்சடைக் கற்றைமுற்றத் திளநிலா எறிக்கு மெனுஞ்
சிறந்த வாய்மை
அஞ்சொல்வளத் தமிழ்மாலை" (திருநாவுக், கஎக)

"முத்துவி தான மணிப்பொற் கவரி மொழிமாலை"
(திருநாவுக், உகூ)

"உண்ணு முலையா ளெனும்பதிகம்" (திருஞான, கூஎ0)

முடிபின் குறிப்பிற்கு உதாரணம் :

"தவநெறிதந் தருளென்று தம்பிரான் முன்னின்று
பவநெறிக்கு விலக்காகுந் திருப்பதிகம்"
(தடுத்தாட். எக)

"கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படியென்று
பண்டருமின் னிசைபயின்ற திருப்பதிகம் பாடினார்"
(தடுத்தாட், ககூ)

"புண்ணியா வுன்னடிக்கே
போதுகின்றே னெனப்புகன்று" (திருநாவுக். சஉஎ)

"மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோவிவர் மாண்பதென்று
தணிவில் பிணிதவிர்க் கும்ப திகத்தண்டமிழ்"
(திருஞான. கூகஅ)

"......கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வ னேனென்
றெய்தரிய கையறவாந் திருப்பதிகம்" (திருநாவுக். உஉச)

முதலுடன் முடிபுக்கு உதாரணம் :

"சுண்ணவெண் சந்தனச் சாந்துதொடுத்த திருப்பதிகத்தை
மண்ணுல குய்ய வெடுத்து மகிழ்வுட னேபாடு கின்றார்"
.........................................................................

"அஞ்சுவ தில்லையென்றே
யருந்தமிழ் பாடி யறைந்தார்" (திருநாவுக், ககூ-சு)

"சொற்றுணை வேதியன் என்னுந் தூய்மொழி
நற்றமிழ் மாலையா நமச்சி வாயவென்று"
(திருநாவுக், கஉசு)

"ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாகி எனவெடுத்துத்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி
யோங்கட்கென்று" (திருநாவுக், கூ௪)

"பத்தனாய்ப் பாடமாட்டேன் என்றுமுன்
எடுத்துப் பண்ணால்
அத்தாவுன் ஆடல்காண்பா னடியனேன்
வந்த வா"றென்று (திருநாவுக், கசுக)

"அவமிலா நெஞ்சமே யஞ்சல்நீ உய்யுமா றறிதியன்றே
சிவனதாரூர்தொழாய் நீமற வாதென்று செங்கைகூப்பிப்
பவனமாய்ச் சோடையா யெனுந்திருப் பதிகம்"
(திருஞான. ௫கஅ)

கருத்தும் இடைநின்ற சொற்றொடரும் :

"நினைப்பவர்தம் மனங்கோயில் கொண்டருளும்
அம்பலத்து நிருத்த னுரைத்
தினைத்தனையாம் பொழுது மறந் துய்வனோ
வெனப்பாடித் தில்லை சார்ந்தார்." (திருநாவுக், கள௪)

இனித் தேவார திருவாசகச் சொற்றொடர்கள் பெரிய புராணத்துட் பல இடங்களிலும் வந்துள்ளன. ஈண்டு விரிப்பிற் பெருகுமாதலால், ஒன்றிரண்டு உதாரணங்கள் மாத்திரங் காட்டப்படும்.

"அமரர்நா டாளாதே ஆரூராண்ட அயிராவணமே"

என்னுந் திருநாவுக்கரசுகளின் தேவாரச் சொற்றொடர்,

"அமரர்நா டாளா தாரூ ராண்டவர்"
(திருநீலகண்டயாழ்ப், எ)

என்று பெரிய புராணத்துள் வந்தமை காண்க.

"இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னுதே
ஈந்துவக்கும்
தன்மையார்"

என்னுந் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரச் சொற்ருெடர்,

"இன்மையால் இரந்துசென்ருர்க் கில்லையென்னுதே ஈயுந்
தன்மையார்" (சிறப்புலி, ௧)

என்றமை காண்க.

"நன்புலன் ஒன்றி"

என்னுந் திருவாசகச் சொல்,

"நன்புல னுகிய வைந்து மொன்றி" (தடுத்தாட், ௧௨௬)

என்று வந்தது.

ஆசிரியர் சேக்கிழார் சிவனடியார் பெருமையையே கூறவந்தாராயினும், தம் நூலுள் ஆங்காங்குச் செந்தமிழ்ப் பெருமையையுஞ் சுட்டிப்போந்தனர். தம் நூலுக்கு மூலநூலாகிய திருத்தொண்டத்தொகை தமிழின் கண்ணேயே முதலில் அருளிச் செய்யப்பட்டமையால், அதனைத் 'தென்றமிழ்ப் பயன்' என்ருர்,

"தென்றமிழ்ப் பயனு யுள்ள திருத்தொண்டத்
தொகைமுன் பாட" (தில்லைவா, ௯)

என்றமை காண்க.

மூர்த்தி நாயனுர் புராணத்தில் ௩ ஆஞ் செய்யுளில்,

"தருஞால மளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந் தருஞ்செவ்வி மணஞ்செ யீரம்"

என்றமையால், தமிழானது உலகம் முழுவதும் பரந்த பெரு மேன்மை யுடையது என்பதும், அது கடவுட் டன்மை வாய்ந்த தென்பதும், தண்மையும் நறுமணமும் ஈயும் மலர்மாலை போலச் செந்தமிழ்ப் பாமாலையும் கற்ருர்க்கு உவகையும் கேட்டார்க்கு விழைவும் விளைக்கவல்ல தென்பதும் ஆசிரியர் சேக்கிழார் கருத்தென்பது தெளியப் படும்.

'ஞாலமளந்த மேன்மை' என்பதால் தமிழை உலகிலுள்ள ஒரு சிறு நாட்டிலுள்ள ஒரு சிறுமொழியாகக் கருதுதல் மிகத் தவருகும். உலகத்தார் யாவராலும் நன்கு மதிக்கத்தக்க பெருமையுடையது தமிழென்பது இச் சொற் ருெடரால் தெளியலாம். 'தெய்வத்தமிழ்' என்றது கடவு ளின் திருவருள் பெற்ற பெரியார்களால் எடுத்து ஆளப் பட்டமையானும், உயர்மொழிகள் பலவற்றுள்ளும் சிறந்த பெருஞ் சால்பு தமிழிற் குண்மையானு மென்க.

"சால்பாய மும்மைத் தமிழ்" (மூர்த்தி, ௫)

என்பது இதனை வற்புறுத்தும்.

"திசையனைத்தின் பெருமையெலாந்
தென்திசையே வென்றேற
அசைவில்செழுந் தமிழ்வழக்கே
அயல்வழக்கின் துறைவெல்ல" (திருஞான, உ௪)

திருஞானசம்பந்தப் பெருமான் தோன்றியருளினு ரென்றமையால், தமிழின்கட் சிறந்திலங்கும் தேவாரத் திருவருட் பாடல்களின் பெருமையானது உலகெங்கும்

பரவிய விடத்துத் தென்தமிழ் நாடும் செந்தமிழ் வழக்கும் உலகத்தில் யாவராலும் போற்றற்குரியனவென்று குறிப்பித்தவாறும்.

"தலைச்சங்கப் புலவனார் தம்முன்" (திருஞான, கூசு௨)

என்றவிடத்து, இறைவன் தலைச்சங்கப் புலவராய்த் தமிழாய்ந்தமை கூறப்பட்டது. இதனால் தலைச்சங்க மிருந்த தென்பதே ஆசிரியர் சேக்கிழார் கருத்தாதல் தெளிவு. திருஞான சம்பந்தர் புராணம் கூ௫௨ இல் பாண்டிய நாடானது தமிழ்நாடென்பது,

"பானல்வயற் றமிழ்நாடு பழிநாடும் படிபரந்த
மானமிலா அமண்"

என்றமையால், தமிழ்நாட்டிற்குரியது சிவநெறியென்பதும் அது பயிலாமை நாட்டிற்குப் பழிவிளைப்பதென்பதும் ஆசிரியர் கருத்து.

பெரியபுராணத்துள் எண்சுவைக்குரிய மெய்ப் பாடுகளையும் நடுவுநிலை உணர்ச்சியையும் எழுப்பவல்ல கருத்துகளும், சொற்றொடர்களும் மலிந்து கிடக்கின்றன. நாயன்மார்கள் செய்திகள் பலவும் வியப்பும் வீரமும் விளைக்க வல்லன. எறிபத்தநாயனார் புராணத்துள் அந்நாயனார் அரசரின் யானையை வெட்டி வீழ்த்தினமை அவருடைய வெகுளியேயாயினும், அதனைக் கேட்பார்க்கு அது வீரச் சுவையினை எழுப்புந் தன்மையது. பாகர் பலரால் அடக்க வொண்ணாது மதம் பொழிந்து திரிந்த களிற்றினை எறி பத்தர் ஒருவரே ஒருசிறிதும் அச்சமின்றி எதிர்த்து அதன் மேற் பாய்ந்து அதன் துதிக்கையைத் துணித்தபின், அரசர் படையினை எதிர்ப்பான் தாம் ஒருவரே மழுவேந்தி நின்ற அருஞ்செய்கையானது பெரியதொரு வீரச்செய்கை யாமன்றோ? அடியார்மேல் வைத்த அன்பின் மிகுதிப் பாட்டாலும் அச்சம் ஒழிந்து வீரம் மிகுதியாயிற்றென்

பதை ஆசிரியர் சேழக்கிழார் பின்வருமாறு தெரிவித்துள்ளார். எறிபத்தர் உச இல்,

"பாய்தலும் விசைகொண் டுய்க்கும் பாகரைக் கொண்டு சீறிக்
காய்தழ லுமிழ்கண் வேழந் திரிந்துமேற் கதுவ வச்சந்
தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே தகைந்து பாய்ந்து
தோய்தனித் தடக்கை வீழ மழுவினாற் றுணித்தார் தொண்டர்"

ஏயர்கோன் கலிக்காமநாயனார் தமக்குற்ற கொடிய சூலைநோயின்பொருட்டு, வன்றொண்டரால் அது தீருமென்ற இறைவரது திருவாக்கையும் கருதிப் பயன்பெற நினையாது, தாம் உண்மையென நம்பியதைக் கைப்பற்றி, அதினின்றும் வழுவாமைப் பொருட்டு வன்றொண்டர் வரவுணர்ந்தவுடனே தன்னுயிரை மாய்த்துக்கொண்டது அரியதொரு வீரச் செய்கையாம்.

விறன்மிண்ட நாயனார் சிவனடியார் திருக்கூட்டமானது திருநாவலூரார்க்கும், சிவபெருமானுக்கும் புறகென்றுரைத்தமை அவரது ஒப்பற்ற உறுதியை விளக்கும். வீரம் பெருமிதமென்பன ஒரு பொருட் சொற்கள்.

சேரமான் பெருமாள் தமது குதிரையோடு வானில் மறைந்தகாலை, அவருடைய படைவீரர் உயிர்நீத்து வானின்கண் அவர்முன் சேவக மேற்கச் சென்ற வீரச் செய்கை யாவராலும் பாராட்டத்தகுந்தது. திருநாவுக்கரசு நாயனார்மேல் ஏவப்பட்ட மதயானையின் செலவைப் பெருமிதச் சுவை தோன்ற ஆசிரியர் செய்யுளியற்றியுள்ளார். (திருநாவுக், சுகஉ, ககசு-செய்யுட்களைப் பார்க்க.) திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில், நாயனார்க்குக் கொடிய துன்பம் விளைக்க அரசனைத் தூண்டிய செய்திகள் கற்பார்க்கு வெகுளியைப் பெரிதும் விளைக்குந் தன்மையன.

"அலைபுரிவா யெனப்பரவி வாயாலஞ் சாதுரைத்தார்
கொலைபுரியா நிலைகொண்டு பொய்யொழுகும் அமண்குண்டர்"

"மாபாவிக் கடையமணர் வாகீசத் திருவடியாங்
காபாலி யடியவர்பாற் கடக்களிற்றை விடுகென்னப்
பூபாலர் செயன்மேற்கொள் புலைத்தொழிலோ னவர்தம்மேற்
கோபாதி சயமான கொலைக்களிற்றை விடச்சொன்னான்."

மூர்த்தி நாயனார் புராணத்தில் நாயனார் திருப்பணிக்குச் சந்தனக் கட்டை பெறமுடியாவண்ணம் இடர்ப்பாடு விளைத்த அரசனது கொடுமை ஆசிரியர்க்கே மிகுந்த வெகுவியை விளைத்ததென்பது,

"அவ்வாறரசனரடி யாரை யலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத்தடை வீழ விரைந்து வீந்தான்"

என்றமையால் தெளியப்படும்.

சிறுத்தொண்ட நாயனாரும், அவர் மனைவியாரும் தங்களொப்பற்ற தனி மகவை மன நடுக்கமின்றி அரிந்து கறி சமைத்தது வியப்பினும் வியப்பாக இருக்கின்றது. அது, கதையைக் கேட்பவர்கட்கு மிகுந்த இரக்கத்தைப் பெருக்குகின்றது. அரிந்த மகவினை அடியார் கட்டளையிட்டபடி மீண்டும் அழைத்தமை அதனினும் வியப்பாகும்.

மானக்கஞ்சாற நாயனார் மண நிகழும் அமையத்தைப் பொருட்படுத்தாது மணமகள் கூந்தலையரிந்து அடியார்க்குக் கொடுத்ததும், இயற்பகை நாயனார் மனைவியைக் கொடுத்ததும், திருநீலகண்ட நாயனார் மனத்தாலும் மகளிரை நினையாது மனைவியோடு உடனுறைவின்மையை அயலறியாவண்ணம் இல்லற நிகழ்த்தியதும், சண்டேசுர நாயனார் கையிற் சிறுகோலானது மழுவாக மாறினமையும், காரைக்காலம்மையார் தமது கையில் திருவருள் வலிமையால் மாம்பழம் வருவித்தமையும் வியக்கத்தகும் பெருஞ்செயல்களேயாகும்.

அவலமென்பது புராணத்திற் பேசப்படுவோர் துன்புறுதலும், அதனை அறிவோர் இரக்கமுடையராய்த் தாமுந்

துயருறுதலும் என இருவகைப்படும். மெய்ப்பொருள் நாயனார், புகழ்ச்சோழ நாயனார், ஏனாதிநாத நாயனார் என்போரின் முடிவு யாவர்க்கும் மனவருத்தத்தை விளைப்பதாகும். இவர்கள் சரித்திரங்கள் ஆங்கிலத்தில் Tragedy' என்னும் நாடக வழக்குக்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

மூர்த்திநாயனார் முழங்கையைத் தேய்த்தும்; கூற்றுவ நாயனார் முடிசூட்டப்பெருதும் வருந்தினரேனும், இறைவன் திருவருளால் துயர் தீர்ந்து முடி மன்னராய்த் திகழ்ந்தனராதலின், அவர் வரலாறுகள் அவலமும், உவகையும் இணைந்துள்ளன.

கண்ணப்ப நாயனார் இறைவர் திருமேனியில் ஊறு கண்டு அவலமுற்ற திறத்தை ஆசிரியர் சேக்கிழார் தெள்ளிதிற் புனைந்தனர்.

"வந்தவர் குருதிகண்டார் மயங்கினர் வாயில் நன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமங் குஞ்சியின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்"
(கண்ணப், கஎ0)

"விழுந்தவ ரெழுந்து சென்று துடைத்தனர் குருதி வீழ்வது
ஒழிந்திடக் காணார் செய்வ தறிந்திலர் உயிர்த்து மீள
அழிந்துபோய் வீழ்ந்தார் தேறி யாரிது செய்தா ரென்னு
வெழுந்தனர் திசைகளெங்கும் பார்த்தனர் எடுத்தார் வில்லும்"
(கண்ணப், கஎக)

"வேடரைக் காணார் தீய விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியுங் காணார் மீள நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத் தோடும் நிறைமலர்ப் பாதம் போற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு கதறினர் கண்ணீர் வார."
(கண்ணப், கஎஉ)

இழிபுணர்ச்சியானது கொடியவர்கள் தக்க தண்டனை யுற்ற காலையும், உயர்ந்ததற்கு உயர்மதிப்பும் தாழ்ந்த தற்குக் குறைந்த மதிப்பும் ஏற்பட்ட காலையும் மனத்தின் கண் எழற்பாலது.

தண்டியடிகள் நாயனாரைப் பழித்த சமணர்கள் கண் ணிழந்ததும், திருநாவுக்கரசர்மேல் சமணர் ஏவிய யானை ஏவியோர்க்கே ஏதம் விளைத்ததும், காடவர்கோன் கட்டிய திருக்கோயில், பூசலார் நாயனார் தம் சிந்தையின்கண் அமைத்த பெருங்கோயிலுக்கு நிகராகாதென்று இறைவன் அறிவுறுத்தியதும், கண்ணப்பநாயனார் பூசைக்குமுன் சிவ கோசரியார் பூசை தாழ்ந்தமையும் இழிபுச்சுவையை எழுப்புவன.

சத்திநாயனார், மூர்க்கநாயனார், கோட்புலிநாயனார் முதலியோர் திருத்தொண்டிற்கு இடையூறு செய்தார்க்குக் கொடுந்தண்டனை இயற்றின முறைகள் அச்சத்தை விளைப்பன.

உவகை பலவகைப்படும். அடியார்கள் இன்புறுதற் கேதுவாகிய செய்திகள் பலவும் உவகை விளைப்பனவே. திருநீலகண்டநாயனாரும், அவர் மனைவியும் இளமை யெய்தியதும், குங்குலியக் கலயநாயனார் பெருஞ்செல்வம் பெற்றதும், சுந்தரமூர்த்திகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் தம்முள் நட்புப் பாராட்டினமையும், சுந்தர மூர்த்திகள் கண்பெற்றதும் உவகை விளைப்பனவே. தலைவன் தலைவியர்மாட்டுள்ள காதல் நயம் சுந்தர மூர்த்திகள் பரவையாரோடும், சங்கிலியாரோடும் இல்லறம் நடாத்திய வரலாற்றில் செவ்வனே வகுத்துக் காட்டப் பட்டது.

நகைச்சுவையும் சுந்தரமூர்த்திகள் புராணத்திலே இறைவன் நாயனாரைச் சங்கிலியார்க்குச் சூளுரைக்கும்படி செய்த திருவிளையாடலின்கண்ணும், நாயனார் இறைவர்

தந்த பொற்றிரளைத் திருமுதுகுன்றத்து ஆற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்திலெடுத்த செய்திக்கண்ணும் நன்கு புலனாகின்றது. இன்னும் அமர்நீதி நாயனார்பாலும் திருநீலகண்ட நாயனார்பாலும் இறைவன் நடத்திய திருவிளையாடல்களும், சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் ஓலைகாட்டி ஆண்ட திறமும், திருநாவுக்கரசர்க்கும் அப்பூதியடிகட்கும் முதற் காட்சியில் நிகழ்ந்த உரையாடல்களும், இயற்பகை நாயனாரது செயற்கருஞ் செய்கையும் நகைச்சுவை ததும்புவனவே.

ஆசிரியர் சேக்கிழார் தவமிக்க திருநாவலூரர் காதலினால் வருந்துவது காதல் வன்மையைக் காட்டி நகை விளைப்பதென்று குறிப்பிப்பார்,

“மறுவில் சிந்தைவன் றொண்டர் வருந்தினால்
இறும ருங்குலார்க் கியார்பிழைப் பாரென்று
நறும லர்க்கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்ணிலா”

(தடுத்தாட், கசுO)

என்றார்.

தன் மகன்மீது தேர் செலுத்திய மனுநீதி கண்ட சோழனும், சிவவேடங்கொண்டுவந்த தன் பணியாளனின் கால்களைக் கழுவக் கூசிய மனைவியின் கையைத் துணித்த கலிக்கம்ப நாயனாரும், நடுநிலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாவர். ஒன்பது சுவையுள் ஒன்றாகிய நடுநிலையென்பது,

“செஞ்சாந் தெறியினும் செத்தினும் போழினும்
நெஞ்சோர்ந் தோடா நிலைமை”

யெனப்படும். அது காம வெகுளி மயக்கம் நீங்கினோர் கண்ணே நிகழும். சமணர்கள் துன்புறுத்திய காலையும்

அறமகளிர் மயல் விளைத்த காலையும், கயிலை நோக்கிச் சென்றபோது தமது திருமேனிக்கு ஊனம் வந்த காலையும் ''சித்தநிலை திரியாது செய்பணியில் தலைநின்ற'' திருநாவுக்கரசரே சிறந்ததோ ரெடுத்துக்காட்டாவர். அவர் நீற்றறையிலே இருந்த நிலையை ஒரு செய்யுளாலே விளக்குவாம் :

''ஆனந்த வெள்ளத்தி னிடைமூழ்கி யம்பலவர்
தேனுந்து மலர்ப்பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தா னிலராகி யுவந்திருந்தார் தமைக்கண்டு
ஈனந்தங் கியதிலதாம் என்னஅதி சயமென்ருர்.''

''மனத்துக்கண் மாசிலனுதல்'' அறமாகும். உள்ளத்திலுள்ள அறியாமையாகிய இருள்மாசினை நீக்குங் கதிரவனுகத் திருத்தொண்டர் புராணத்தை ஆசிரியர் சேக்கிழார் கருதினுர்.

''மாக்கள் சிந்தையுட் சார்ந்துநின்ற
பொங்கிய விருளை யேனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்குந் திருத்தொண்டர் புராணம்''
(பாயிரம், ௧௦)

என்றது காண்க.

எனவே, பெரியபுராணத்தின் நோக்கம் பேரறப் பயிற்சியை நிலைநாட்டுவதாகும். பொது அறநெறியினும், சமய அறநெறியானது மிகச் சிறந்தது. அறுபான்மும்மை நாயன்மார் சிவவொழுக்கத்தைச் சிவதன்மமென்று திருக்களிற்றுப்படியார் இயம்புகின்றது(௧௬). அச் சிவதன்மமானது மெல்வினை வல்வினை யென்று இருவகைப் படும். மெல்வினையாவது யாவருக்கும் பொதுவாய சமய அறநெறி; வல்வினையாவது உலகர் இயற்றுதற்கரியதொரு சிறந்த அறவொழுக்கமாம். அதுவே நாயன்மாரின் சிவதன்மமாம். அஃதே நாயன்மார் நின்ற நிலையைக் குறிக்கும்.

"வரங்கள் தருஞ்செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினு லன்றுகறி யாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை
வல்வினையே யென்றதுநா: மற்று."

(திருக்களிற்றுப்படியார், கஅ)

இவ்வுயர்ந்த அறநெறிக்கு அடிப்படையாயுள்ளது பொது அறநெறியாகும். அதனைப்பற்றி ஆசிரியர் சேக்கிழார் பல இடங்களில் மிக அழகாகக் கூறியுள்ளார்.

"தீயவென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத்
தூயமாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்புசொல்
வரைத்தோ"

(திருக்குறிப்புத், சஎ)

என்றவிடத்து, நாட்டு மாந்தர் எக்காலத்துங் குற்றமற்ற உள்ள நிலையை உடையராயிருத்தல் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.

திருநாட்டுச் சிறப்பில் குடிகள் தம் கடமைகளைச் செவ்வியின் இயற்று முறையை ஓர் அழகிய செய்யுளால் தெளித்துள்ளார்.

"அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள்பேணி
பரவருங் கடவுட் போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிகள் ஓங்கி
வரைபுரை மாட நீடி மலர்ந்துள பதிகள் எங்கும்"

(திருநாட்டுச் சிறப்பு, உக)

"மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்"

(மனுநீதி கச)

என்றபடி மக்கட் பொதுவாழ்க்கை செவ்வியின் நிகழ்வதற்கு அரசர் துணை இன்றியமையாமையின், அரசர்க்குரிய கடமையைக் குடிகளாற்றுவது ஒருதலையான் வேண்டப்

படுவதொன்றாகலின், அதனை முதற்கட் செய்து எஞ்சிய பொருள் கொண்டு பிற அறங்களைப் பேணவேண்டு மென்றும், தெய்வம் விருந்து ஒக்கல் புலவராகிய குரவர் என்பாரைப் போற்றுதல் இல்லறத்தார் கடனென்று அறநூல் கூறுதலின், கடவுளையுங் குரவரையும் விருந்தினரையுங் கிளைஞரையுந் தாங்கவேண்டுமென்றும் மேற்போந்த செய்யுளுட் குறித்தனர். தன்னைப் பேணிக் கொள்வதுபற்றிக் கூறவேண்டியதில்லை யாதலின், அதனை ஆசிரியர் விதந்தோதிற்றிலர். அரசர் தமக்கு வேண்டிய வற்றைத் தாமே கேட்டுக்கொள்வா ராதலின், 'அரசுகொள் கடன்க ளாற்றி' என்றார். இக் கடமைகளாற்றுதலாற் பெருஞ் செல்வம் விளையுமென்று குறிப்பான் உணர்த்துவார் 'வரைபுரை மாட நீடி மலர்ந்துள' என்றார்.

தில்லைவாழந்தணர் பெருமையைக் கூறுமிடத்தும் "மன்னுயிர் அருளான் மல்கத் தருமமே பொருளாக் கொண்டு" என்றும், "மாறிலா ஒழுக்கம் பூண்டார்" என்றும், "தானமுந் தவமும் வல்லார்" என்றும், "மானமும் பொறையுந் தாங்கி" என்றும் கூறினமையால், அவர்கட்கு அறநெறி இன்றியமையாத தென்று குறிப்பித் தவாறும்.

அரசர் கடமையை மனுநீதி கண்ட புராணத்துள் ஆசிரியர் அழகாகத் தொகுத்துரைத்தார்.

"மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ"

(மனுநீதி, ௩௬)

"அறம்பொருள் இன்ப மான அறநெறி வழாமற் புல்லி
மறங்கடிந்து" (மனுநீதி, ௧௭)

என்றதுமது.

அரசர்க்கு என்றும் செற்றமொழிந்த நடுவுநிலைமையே வேண்டுமென்பார் 'செற்ற நீக்கிய செம்மையின்' (௧௬) என்றார். இப்புராணத்துள் 'மெய்ம்மனுப்பெற்ற நீதியுந் தன்பெய ராக்கினான்' (௧௬) என்றவிடத்து 'மெய்ம்மனு' என்றமையால், அவனின் வேறாகிய பொய்ம்மனுவை யொதுக்கியவாறும். இப்பொழுது வழங்கும் மனுநீதி நூலின் தன்மையைக் காலஞ்சென்ற பேராசிரியர் திருவாளர் சுந்தரம் பிள்ளையவர்கள், எம். ஏ.,

"வள்ளுவர்தம் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி யொருகுலத்துக் கொருநீதி"

என்று இங்ஙனங் கூறியவிடத்து நன்கறிய வைத்தார்கள். குடிகட்கு உரிய உதவி ஓம்புதலும், பகைவரை வெல்லுதலும், செங்கோல் செலுத்துதலும், திருக்கோயில் முதலிய அறநிலையங்களைப் பாதுகாத்தலும் அரசர் கடனுமென்பது மெய்ப்பொருள் நாயனார் புராணச் செய்யுளால் இனிது விளங்கும்.

"அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி ஓங்குநீர் மையினின் மிக்கார்"

"மங்கையைப் பாகமாக வைத்தவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்"

(மெய்ப்பொருள், ௨, ௩)

பண்டை அரசமக்கள் படைக்கலப் பயிற்சி முதலியவற்றைக் கற்ற அளவில் நில்லாது சமயநூற் பயிற்சியும் உடையராயிருந்தனர் என்பார்,

"தவமுயன் றரிதிற் பெற்ற தனியிளங் குமரன் நாளுஞ்
சிவமுயன் றடையுந் தெய்வக் கலைபல திருந்த ஓதிக்
கவனவெம் புரவி யானை தேர்படைத் தொழில்கள் கற்று"

(மனு, ௧௮)

என்றார்.

அரசியற் பொறை சுமத்தற்கரியதொரு சுமையென்பார்,

"அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்"

என்று மன்னன் மகன்மேல் தேர் ஊர்ந்த செய்தி கூறுமிடத்தே கூறினர். அவர்கள் உட்பகையையும் வெல்ல வேண்டுமென்று குறிப்பார்,

"சீலங்கொடு வெம்புலன் தெவ்வுடன் வென்று நீக்கி"
(மூர்த்தி, ௬௭)

என்றார்.

அக்காலத்து வணிகர் செய்ய அறநெறியில் நின்றாரென்பது,

"மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி யோங்குபதி"
(காரைக்கா, ௧)

என்பதாற் றெளிக.

வேளாள மரபினர் வாய்மையில் தலைசிறந்தவராய் உழவியற்றிப் பல்லுயிர்க்கும் அறவினையே மேற்கொண்டார் என்பது,

விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக்குடிமைப் பெருஞ்செல்வர்......
..............................................
தொன்னிலத்து மன்னுபயிர் வேத வாய்மை
உழவுதொழி லாற்பெருக்கி யுயிர்க ளெல்லாம்
ஓங்கவருந் தருமவினைக் குளரா லென்றும்"
(திருக்குறிப்புத், ௪0௨)

என்றமையாற் பெறப்படும்.

எம்மரபினரும் நன்னெறி நின்றன ரென்பதைச் "சாதிகள் நெறியிற் றப்பா" (திருநாட்டுச் சிறப்பு, உச) என்றமையால் விளங்கும்.

தூய அறநெறியில் நின்றார் நெஞ்சிலே இறைவனது திருவடித்தாமரை மலருமென்பதை,

"வஞ்ச வல்வினைக் கறுப்பறு மனத்தடி யார்கள்
நெஞ்சின் நீங்கிடா அடிமலர் நீணிலம் பொலிய"
(அமர்நீதி, அ)

என்றவிடத்துக் குறித்தார்.

பெரிய புராணத்தின் இல்லற வாழ்க்கை நிகழ்த்திய அன்பர்களுடைய மனைவியர் அனைவருங் கற்பொழுக்கத் திற் சிறந்தவராய்த் திகழ்ந்தனரென்பது தெளிவு. கற் பென்பது கணவன் சொல்வழிநிற்றல். இயற்பகை நாய னார் புராணத்தில் இயற்பகையார் தம் மனைவியைப் பார்த்து,

"இன்றுஉனை இம்மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்"

என்றுரைப்ப அப்பெண்மணி கற்பின் மேம்படு காதலிய ராதலாலும், இதுவரை தன் கணவனிடமிருந்து கேளாத சொல்லைக் கேட்டமையாலும், அச்சொல்லைக் கேட்டவுடன் கலங்கினர். ஆயினும், உடனே தெளிவடைந்து தமது உடற்கண் தமக்கென ஒரு பற்றுமிலராய்த் தம் உயிர்த் தலைவனை நோக்கிக் கூறியதாவது,

"இன்று நீர்எனக் கருள்செய்தது இதுவேல்
என்னு யிர்க்கொரு நாதநீர் உரைத்தது
ஒன்றை நான்செயும் அத்தனை யல்லால்
உரிமை வேறுள தோஎனக்கு" (இயற்பகை, க)

என்றனர்.

இவரே கணவனைக் கடவுளாகக் கொண்டொழுகும் ஒழுக்கத்தை விளக்கினராவர். திருமடந்தைக்கும் இத்

தகைய உயர்பண்பு இல்லையென்பார், "திகைத்து நின்றனள் திருவினும் பெரியாள்" என்றார். உடல் நலத்தால் திருவினையொத்து உள நலத்தால் அவளினும் மேம்பட்டவளென்பதற்கு, இன்னும் இப் பெண்மணி தம் கணவன் அடியாரிடத்திற் பரிவு கூர்ந்தவண்ணமே கணவன் தன்மையளாய் அடியார்பாற் பரிவு கூர்ந்தாளென்பது, சுற்றத்தார் இயற்பகையாரைத் தாக்கியபோது இவள் கூறிய மொழியாற் புலனும்.

"மறைமுனி அஞ்சி னான்போல் மாதினைப் பார்க்க மாதும்
இறைவனே அஞ்ச வேண்டா இயற்பகை வெல்லும் என்ன"

(இயற்பகை, கசு)

என்றது காண்க.

'இறைவனே' என்றமையால் அடியாரை இயற்பகையார் இறைவனாகக் கருதியவண்ணமே அவர் மனைவியாரும் கருதினாரென்பது தெளிவு.

அடியவராய் வந்த இறைவன்பால் இருவரும் ஒத்த பேரன்புடையராய்த் திகழ்ந்தனராதலின், இருவரும் ஒரே பொழுதில் சிவனுலகப் பெருவாழ் வெய்தப்பெற்றனர். இயற்பகையார்க்குக் கிடைத்த பெருநிலையே அவர் மனைவியார்க்குங் கிடைத்ததென்பது,

"நண்ணிய மனைவியோடு நம்முடன் போதுகென்று"

(இயற்பகை, உக)

"திருவளர் சிறப்பின் மிக்க
திருத்தொண்டர் தமக்குந் தோற்றம்
மருவிய தெய்வக் கற்பின்
மனைவியார் தமக்குந் தக்க
பெருகிய அருளி னீடும்
பேறளித் திமையோ ரேத்தப்
பொருவிடைப் பாகர் மன்னும்
பொற்பொது வதனுட் புக்கார்"

(இயற்பகை, உ௪)

என்பதாற் போதரும்.

திருநீலகண்டரைப் போலவே அவர் மனைவியாருந் துறவுபூண்டிருந்தது பெரிதும் வியக்கற்பாலது. மாதர் அடக்கத்துக்கு இணையற்ற எடுத்துக்காட்டாவார் அவரே. உற்றார் உறவினர் அயலார் என்பார் ஒருவருக்குந் தமது நிலையை அப் பெண்மணியார் கூறிற்றிலர்.

"அற்புறு புணர்ச்சி யின்மை அடலறி யாமை வாழ்ந்தார்"
(திருநீலகண்டர், அ)

என்பதாற் றெளிக.

இறைவன் உலகத்துக்கு அவர் துறவை விளக்க வில்லையாயின், அவர் முதுமைப் பருவத்திலும் ஒருவரும் அதனை அறிந்திருத்தல் முடியாது. தீரத்துறந்த அவர் தம் கணவனோடு பேரின்ப வீட்டினைத் தலைப்பட்டாரென்க.

இளையான்குடி மாறநாயனார் மனைவி தம் கணவனார்க்குத் தக்க அமையத்தில் துணைபுரியும் பேரமைச்சர் போல்வதில் ஒப்பற்றவர். அடியார்க்கு அமுது செய்வித்தற் பொருட்டுச் செந்நெல்முளை வாரிக்கொண்டு வரும்படி சொன்னதும், குறும்பயிர் கொண்டு வேறு வேறு கறியமுதாக்கியதும் அப் பெண்மணியே. நள்ளிரவில் ஒன்றுங் கிடையாதவிடத்து ஒருவரையுங் குறைகூறாது தன் வினையை நொந்ததும், மிகுதியாகக் கறியமுது ஆக்க இயலாவிடத்து நினைவினாற் குறையை நேர்ந்ததும், தன்நலங் கருதாது வித்தினையும் வீட்டுக் கூரையினையும் அடியார் பொருட்டுப் பயன் படுத்தியதும் பற்றற்ற அவரது உயர் தன்மையினையும் விருந்தோம்பும் அளப்பிலா ஆர்வத்தையும் தெள்ளிதின் உணர்த்தும். இதனாலே நாயனாரோடு அவரும் இறைவனது பேரின்பப்பேற்றிற் குரியரானார்.

"அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி"

என்றது காண்க.

அமர்நீதி நாயனர் மனைவியுந் தம் கணவன் தொண்டிற்குத் தடை செய்யாது துணை நின்றதால், அவரோடுங் குடும்பத்தோடுஞ் சிவபுரி யணைந்தனர்.

குங்குலியக்கலய நாயனர் மனைவியும் மிக்க வறுமை வந்தவிடத்தும், உணவிற்கு முட்டுப்பாடுற்ற காலத்தும் கணவனர் திருப்பணிக்குப் பயன்படும் பொருட்டுத் தமது திருமங்கல நாணை விற்றவிடத்தும் வருந்தாதிருந்து இறைவனருளாற் செல்வம் வந்தகாலை,

"அல்லொத்த கண்டன் எம்மான் அருள்தர வந்தது"
(குங்குலியக், ௪௯)

என்றமையால் அவரது கற்புங் கனிவுங் கொண்டாடத் தக்கன.

அரிவாள் தாய நாயனர் மனைவியும் பசியால் வருந்திய காலத்துந் தம் கணவனர்க்குத் துணையாக அவர் பின்னே திருக்கோயிலுக்கு ஆனைந்தும் ஏந்திச் சென்றார். ஆதலால் இறைவன்,

"நன்றுநீ புரிந்த செய்கை நன்னுத லுடனே கூட
ஒன்றிநம் முலகில் வாழ்வாய்" (அரிவாட்டாய, உ௯)

என்று பேரருள் செய்தனர்.

அப்பூதியடிகள் மனைவியார் புதல்வன் இறந்தவிடத்துந் துன்புற்று வருந்துதலை மேற்கொள்ளாது ஆளுடைய அரசர்க்கு அமுது செய்விக்கும் பெருந்தொண்டினையே இயற்ற முற்பட்டது மிகவும் வியக்கற்பாலது.

ஏயர்கோன் கலிக்காம நாயனர் மனைவியாருந் தம் கணவன் உயிர் நீத்ததை யறிந்துந் தாமும் அழாது பிறர் அழுதலையுந் தடுத்து ஆளுடைய நம்பியைச் சிறப்பாக வரவேற்றது செயற்கருஞ் செய்கையாகும்.

"மறுவஇங் கணைந்தார் நம்பி
என்றுமுன் வந்தார் கூற
ஒருவரும் அழுதல் செய்யாது
ஒழிகவென்று உரைத்துப் பின்னர்"
(ஏயர்கோன், ௯௧௮)

"கணவர்தம் செய்கை தன்னைக் கரந்துகா வலரை நம்பி
அணைவுறும் பொழுது சால அலங்கரித்து எதிர்போம் என்னப்
புணர்நிலை வாயில் தீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச் சென்றார்"
(ஏயர்கோன், ௯௧௧)

திருநீலநக்க நாயனார் மனைவியும் இறைவர்பாற் பேரன்புடையவரென்பது சிவபெருமானுடைய திருமேனி மீது ஒரு சிலந்தி விழுந்ததைக் கண்டவுடனே ஓடிச்சென்று அன்பினால் ஊதித் துமிந்தமையாலும், ஊதித் துமிந்தது போலத திருமேனியின் எஞ்சிய பகுதியைச் சிலந்தியின் கொப்புளம் போலத் திருநீலநக்க நாயனார்க்கு இறைவன் கனவிற் காட்டினமையாலுந் தெளியப்படும்.

பரவையாருஞ் சங்கிலியாரும் உமையம்மையார் சேடிய ராதலின், அவர் பெருமை கூறவேண்டியதில்லை.

ஆளுடைய நம்பிக்கு மணஞ்செய்யக்கருதிய புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியார் மகள் திருநாவலூரரையே ஒழியாது நினைத்திருந்து சிவலோக மடைந்தமையான், அவள் கற்பிற்சிறந்த தனி நாயகியாவள். ஆடவருள் தமக்குக் கணவராய்ப் பெறுதற்குரிய ஒருவரையே உள்ளத்தில் நினைப்பதும், உள்ளத்தில் நினைத்தமாத்திரையிலேயே மணம் நிகழ்ந்ததாகக் கருதி, நினைத்த மணமகனைப் பெறுதவிடத்துப் பிறரை நோக்காத பெருந்தன்மையே சிறந்ததொரு கற்பு முறையாமென்று கொளவதும் அக் காலத்தில் மேன்மக்களாற் போற்றப்பட்டு வந்தன. அதற்கு இவர் சிறந்த எடுத்துக்காட்டாவார். திருநாவுக்

கரசர் தமக்கையராகிய திலகவதியாரோ தம்மை மணஞ் செய்யவிருந்த கலிப்பகையாரைத் தம் கணவனாக முற்றுங் கருதிவிட்டமையால், அவர் இறந்தவுடனே தாம் கைம்மை நோன்பு மேற்கொள்வதையே எண்ணாது உயிர்விடத் துணிந்தமை மிகவும் வியக்கத்தக்கதொரு செயலாகும். நினைந்த அளவிலே அன்பு செலுத்துதல் தலையன்பாகும். முற்பிறவித் தொடர்பாக உழுவலன்பு நிகழக்கூடிய இடத்தேதான் அத்தகையதாகிய தலையன்பு நிகழுவதாகும். கலிப்பகையாரைத் திலகவதியார் கண்டனரோ கண்டிலரோ என்பது சரித்திரத்தால் விளங்கவில்லை. தம் கணவனைப்பற்றி அவர் கேட்ட அளவிலேயே அவர்மாட்டு அன்பு வைத்தார்.

கேட்டவுடன் காதலித்தல் தலையன்பெனவும், கூடியவுடன் காதல் மிகுதல் கடையன்பெனவுங் கூறுப. தலையன்புக்குக் காரணம் எழுமையுந் தொடர்ந்த அன்பாகிய உழுவலன்பெனப்படுமாதலின், அது பல் பிறவிகளிலே செவ்விதிற் கைக்கொண்ட கற்புநிலையின் பயனாகும். கற்புநிலையில் நிற்றல் மெய்த்துறவிற் கேதுவாகும். எல்லாப் பொருள்களினுஞ் சிறந்ததாகக் கருதிக் காதலித்த கணவன் தொடர்பும் நிலையிலா இயல்பிற்றென்று கொள்ள வேண்டுங் காலத்தே பரம்பொருளினிடத்தே பேரன்பு விளையும். பரம்பொருளாகிய பற்றற்ற இறைவனைப் பற்றிய காலத்தே உலகப் பற்றறும். இவ்வுண்மை திலகவதியார் வாழ்க்கையால் மலையிலக்காக விளங்கியது போலப் பிற வரலாறுகளால் விளங்குவதில்லை. கன்னிப் பருவத்தே நிலையாமை கண்டு அகப்பற்றும் புறப்பற்றும் ஒழித்துப் பெருந்துறவு பூண்ட மங்கையர் தலைவி திலகவதியாரே யாவர்.

காரைக்காலம்மையராகிய புனிதவதியார் தம் கணவனோடு உடனுறைந்தகாலை, அவனும் அறியாதவண்ணம் சிவபெருமானிடத்திலும் சிவனடியாரிடத்திலும் அளவிறந்த பேரன்பு செலுத்தினமை அவரது ஒப்பற்ற அடக்

கத்தையும் முன்னைப் பெருந்தவத்தையுங் குறிப்பனவாகும். பெண்மணிகளுள் அவரே பேரற்புதம் இயற்றினர். இறையன்போடு பேரறிவும் உடையராதலின், அற்புதத் திருவந்தாதி முதலிய நுண்பொருள் செறிந்த அமுதத் திருவருட் பாடல்கள் திருவாய்மலர்ந்தருளினர். இல்லற வாழ்க்கையில் தமக்கென யாதொரு விருப்பமும் இல்லாதவராயிருந்தும் உலகியல்புக்குத் தக்கவாறு தம் பெற்ேறோர் விருப்பப்படி மணந்தும், கொழுநன் விருப்பப்படி இல்லறம் நடத்தியும், ஒருவரும் அறியாவண்ணம் இறைவன்பாற் பேரன்பு செலுத்திய இவரது பேரடக்கப் பேராற்றல் யாவராலும் வியத்தற்குரியது. இவரைப்போல் இவரையன்றி வேறெவருமில்லை யென்பது மிகத் தெளிவான உண்மையாகும்.

பொதுவாக உலகத்தாரும், சிறப்பாகத் தம் கணவனாகிய மன்னனும், அவன் குடிகளும் சிவநெறியைத் தலைக்கூடி உய்யவேண்டுமென்னும் பெருங்கருணையினாலே சைவசமயத்தை நிலைநாட்டிய பெண்மணியார் மங்கையர்க்கரசியாராவர். பாண்டியநாட்டை யாளுதற்குரிய சிறந்ததொரு பெண்ணரசாய் இவர் திகழ்ந்தமையால், எவ்வெச் செய்திகளை எவ்வெவ்வகையில் இயற்றிப் பயன் காண வேண்டுமோ, அவ்வவ்வகையில் அவற்றைச் செய்து முடிப்பதில் இணையற்ற திறமை வாய்ந்தவர். நாட்டிற்கு எல்லா நன்மைகளினும் மேம்பட்டது சமயப் பாதுகாப்பாதலின், தம் கணவனாகிய அரசன் சமண் சமயத்தில் மூழ்கியிருத்தலினாலும், தாம் யாது செய்தல் கூடுமென்று நினையாது திருஞானசம்பந்தப் பெருமானை வரவழைத்துச் சைவசமயத்தை நிலைநாட்டினமை இவரது நுண்ணறிவையும், சிவனடிப் பேரன்பையும் விளக்குவதாகும். கணவன் சமணசமயத்திற் புகுந்ததற்குக் காரணம் ஊழ்வினையேயன்றி வேறில்லை. அவன்பால் அவர் வெறுப்புக் கொள்ளாது, அவனோடு இல்லறம் நடாத்தி வந்தமை இவரது மனத்தின் செம்மையைத் துலக்குவதாகும். சமணரிடத்துச் செவ்விய முறையில் வழக்காடி உண்மையை நிலை நாட்டு

வதனையே அரசன்மாட்டு வற்புறுத்தினரேயன்றி, ஒரு பாற் சார்ந்து சைவசமயத்தைக் கொள்ளும்படி வேண்ட வில்லை. தம்மளவிலே சைவசமயத்தில் எல்லையில்லாத பற்றுடையராய் இருந்தனரென்பது சமணரால் சிவனடி யார்க்கு இடையூறு நேர்ந்தபோது தாம் உயிர் விடக் கருதினமையால் தெற்றெனப் புலனாகும். சமணர் தோற்ற பின்பு அவர் கழுவேறினமைபற்றி இவர் யாதுங் கூற வில்லை. இல்லற நெறியினும் அரசியன் முறையினுஞ் சிறந்து சிவநெறியை நிலைநாட்டியதில் இவர் ஒப்புயர்வற்ற பெண்மணி யாவர்.

பெரிய புராணம் இயற்றுவித்த அநபாய சோழனைப் பற்றிச் சேக்கிழார் தமது பெரிய புராணத்திற் பலவிடங் களிலுங் குறித்துள்ளார். அநபாய மன்னன் பொன்னம் பலத்தினைத் தூய பொன்னினால் வேய்ந்ததாக ஆசிரியர் குறித்தார்.

> "மேய விவ்வுரை கொண்டு விரும்புமாஞ்
> சேய வன்றி நப் பேரம் பலஞ்செய்ய
> தூய பொன்னணி சோழனீ டூழிபா
> ராய சீரந பாய னரசவை." (பாயிரம், அ)

அநபாயன் இந்த நாடு முழுவதுந் தன்னரசினைத் தனிச்சிறப்புடன் ஆண்டனனென்றும், தன்கீழ் வாழ்வார் மாட்டு அருளுடையனாய்த் திகழ்ந்தானென்றுங் கூறுவார்.

> "வையம் பொதுக்கடிந் தினிது காக்குங்
> கொற்றவ னநபா யன்பொற் குடைநிழல் குளிர்வதென்றால்
> மற்றதன் பெருமை நம்மால் வரம்புற விளம்ப லாமோ"

என்றார்.

மனுநீதி கண்ட சோழனின் பெருமை கூறுங்காலை "மன்னு சீரந பாயன் வழிமுதல்" என்றார்.

ஏறிபத்த நாயனார் புராணத்திலும் இயற்பகை நாயனார் புராணத்திலும் அநபாயனது மரபின் சிறப்புச் சிலவிடங்களில் விரிக்கப்பட்டுள்ளது.

"சென்னி வெண்குடை நீடந பாயன் திருக்கு லம்புகழ்
பெருக்கிய சிறப்பின்" (இயற்பகை, க)

"மன்னிய அநபா யன்சீர் மரபின்மா நகர மாகுந்
தொன்னெடுங் கருவூ ரென்னுஞ் சுடர்மணி வீதி மூதூர்"
(ஏறிபத், உ)

அநபாயனது செங்கோற் பெருமையை ஆசிரியர் சேக்கிழார் ஓர் உவமையாக வைத்து விளக்கினர்.

"அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னுஞ் சீர்த்திச்
செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூ னிமிர்ந்த தன்றே"

ஆசிரியர் சேக்கிழார் மடந்தையர் வனப்பினைப் பரவையார் சங்கிலியார் வரலாற்றின்கண்ணும், நாவரசர்க்கு மயல் விளைக்க முயன்ற அரமகளிரைக் கூறிய விடத்தும், பூம்பாவையை யெழுப்பிய சரிதங்கூறு மிடத்துஞ் செவ்விதின் விளக்கினர். பரவையார் வனப்பை விதந்தோதுவார், அந்நங்கையாரின் ஒவ்வோர் உறுப்பிற்கும் உவமை தனித் தனியே கூருது, அவருக்குக் கூறும் உவமைகளனைத்தையுந் தொகுத்துரைத்தனர்.

"மானிளம் பிணையோ தெய்வ வளரிள முகையோ வாசத்
தேனிளம் பதமோ வேலைத் திரையிளம் பவள வல்லிக்
கானிளங் கொடியோ திங்கட் கதிரிளங் கொழுந்தோ காமன்
தானிளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ என்ன."
(தடுத்தாட். கஙச)

எவ்வுறுப்பினுங் கண்ணனது சிறப்பினதாதலின், மான் போன்ற மருட்சியான பார்வையுடைய நங்கைக்குப் பெண்மானை உவமித்தார். 'விழியாற் பிணையாம்' என்னுந்

திருக்கோவையார் அடியையுங் காண்க. 'மானினேர் விழி மாதராய்' என்றதுமது. மலர் முகையினைப் பல்லிற்கு உவமித்தல் மரபாதலின், 'இளமுகையோ' என்றார். தங்கையாரது நயமிக்க இன்சொல்லுக்குத் தேனினை உவமித்தார் என்றலுமுண்டு. மேனியின் செவ்விக்கும் மென்மைக்கும் பவளத்தையுங் கொடியையும் உவமை கூறினர். சிறந்த உறுப்புகளைத் தெரிந்தெடுத்து அவற்றிற்குரிய உவமைகளையே தொகுத்துக் கூறினர். தங்கையாரின் கன்னித் தன்மையையும் வாடாது வளர்ந் தொளிரும் எழிலையும் வற்புறுத்தும் பொருட்டு, 'இளம் பிணையோ வளரிளமுகையோ, இளம்பதமோ, இளங் கொடியோ, இளங்கொழுந்தோ, இளந்தனுவோ' என்று ஒவ்வோர் உவமையோடும், இளமையை இணைத்துக் கூறியது காண்க. கயிலைநின்று ஞாலத் திழிந்தமையின் "தெய்வ வளரிளமுகை" என்றார். புருவத்திற்குச் சிறுவில்லையே உவமித்தல் பொருத்த மாதலாலும், விளையாட்டுப் பருவத்திற் சிறுவில்லையே விற்பயில்வோர் பயன்படுத்துவாராதலாலும் 'இளம் பருவங் கற்குந் தனியிளந் தனுவோ' என்றார். நாயனர் நலத்தைக் கவரும் தனியுயர் வுடைமையால் 'காமன் கனியிளந் தனுவோ' என்றார். ஒவ்வோ ருறுப்பினைப் பார்த்த அவ்வளவிலே அஃதே உள்ளம் முழுதையுங் கவர்ந்து நின்றது. ஒருறுப்பைப் பார்த்த அளவிலேயே அதற்கு உவமை கூறும் பொருள் வடிவாகவே நங்கையார் தோன்றின ராதலின், அவ்வுவமைப் பொருளே அவர் போலுமென அயிர்த்தமை கூறியவாரும். கயிலையில் நின்றிழிந்து நிலவுலகின்கண் தோன்றினமையால், இவ்வுலக வாழ்க்கை தமக்குத் தக்கதன்றென்று கருதி மருள்வார் போன்றமை யின், மானிளம் பிணையோ என்றும், மேலுலகில் நின்று வந்து வளர்கின்றவராய்க் கன்னிப் பருவங் கடவாமையின், 'தெய்வ வளரிள முகையோ' என்றும், திருநாவலூரற்கே யுரியவராய்ப் பெண்ணலஞ் சிறந்து விளங்கினமையால் 'வாசத் தேனிளம் பதமோ' என்றும், பாற்கடலிற் றேன்றிய திருமகளைப்போல அழகுமிகுந்தவளாய்க் கற்பிற்

கடையாளமாய் முல்லை நிலத்திற்குரிய இளமுல்லைக் கொடி போன்றமையின், ‘திரையிளம் பவளவல்லிக் கானிளங் கொடியோ’ என்றும், நம் நாயனுர்க்கு அமுதம் போன்றவளாய் அமுதினுலியன்ற திருமேனியுடைமையால் ‘திங்கட் கதிரிளங் கொழுந்தோ’ என்றும், கவின் மிக்க தொரு வில்லினைப்போல வளைந்து துவளும் திருமேனி யுடைமையால் ‘காமன் தனியிளந் தனுவோ’ என்றும் ஆசிரியர் மொழிந்தனரென்ப. திருமகள் செம்மேனி யுடைமையால் ‘பவளவல்லி’ என்றனர். ஒப்பற்ற இளமை நலமுடைமையால் காமனும் இளமைச் செவ்வியைப் பரவையார்பால் கற்றற்குரியன் என்பார், ‘காமனுந் தானிளம் பருவங் கற்கும்’ என்ருர். ‘கற்பகத்தின் பூம்கொம்போ’ என்ற பாட்டிலும் பரவையார் வனப்பு இனிது விளக்கப்பட்டது.

திருநாவுக்கரசு நாயனுர் புராணத்தில் விண்மாதரின் மயல் விளைக்குஞ் செயல்களைக் கூறுமிடத்து மின்னற் கொடிகள் போல அவர்கள் வந்து இறங்கினமையும், அவர்கள் தம் அருமைக் கனி வாயினுலும், குவளைக் கண்களினுலும், மெல்விரல்களினுலும், குறிகள் செய்து மயல் விளைத்தமையும் ஆசிரியர் எடுத்தியம்பினுரேயன்றி இழிந்த மொழிகளால் யாதுங் கூறிற்றிலர்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் புராணத்திலே பூம்பாவையின் பொற்பினைப் புகலுமிடத்து, விடந் தீண்டு வதற்குமுன் பொதுவாகவும், உயிர்த் தெழுந்ததற்குப் பின் சிறப்பாகவும் ஆசிரியர் அதனைப் புனைந்துரைத்தனர். பூம்பாவையின் வனப்பின் ஒளியினையே பல உவமைகளால் ஆசிரியர் வியந்தனர். அப்பெண்மணி நடை பயிலுமிடத்தே பல உறுப்புகளினின்றும் அவற்றின் அணியினின்றும் மின்னெளி வீசினமையால், ‘மின்னின்வித்து’, எனவும், தூய பொன்மேனி யுடைமையானும், மிகுந்த மென்மை யுடைமையானுந் ‘தமனியக் கொடியின் தளிர்கிளை’ எனவும், இயல்பாய ஒளியோடு அணி ஒளியுங் கலந்து

செஞ்சுடர்க் கொழுந்தெனத் திகழ்ந்தமையால், 'மணி கிளரொளியின் அஞ்சுடர்க் கொழுந்து' எனவும் புனைந் துரைத்தார். கன்னிப்பருவத்து மிக்க கவினோடு பெற்றோர்க்கும், பிறர்க்கும் பெருமகிழ் விளைத்தமையின், 'அழகின் முன்னிளம் பதமென அணிவிளக்கென்ன' என்றார்.

பூம்பாவை உயிர்த்தெழுந்தபின் அவள் உறுப்புகள் பலவற்றையும் தனித்தனியே ஆசிரியர் புனைந்துரைத்தனர். இது பிற்காலப் பெருங்காப்பியங்களின் மரபினைத் தழுவிய முறை. முகத்தினைச் செந்தாமரைக்கும், குழலினை வண்டுக் கூட்டத்தின் ஒழுங்கிற்கும், நுதலினை வானவில்லிற்கும், புருவத்தைக் காமன் சிலைக்கும், கண்ணினைக் கயலுக்கும், மூக்கினையும் இதழினையும் முறையே பச்சோந்திக்கும் இந்திர கோபத்தினுக்கும், காதின் மகரக்குழைகளைக் காமன் வெற்றிக் கொடிக்கும், கழுத்தினைச் சங்கிற்கும், கொங்கையை அமுத கும்பத்திற்கும், கைகளைக் காந்தட் பூவிற்கும், தொடையினை வாழைத்தண்டிற்கும், முழந் தாளினைப் பொற்பந்திற்கும், கணைக்காலினைக் காமனது அம்புக் கூட்டிற்கும், பரட்டினைச் செம்பொற் றட்டிற்கும், மெல்லிய அடிகளைப் பூந்துணர்க்கும் ஆசிரியர் உவமித்தனர்.

பூம்பாவையே அழகிற் றலைமை வாய்ந்தவளென்பது ஆசிரியர் கருத்தாதலின், 'அழகினுக் கணியாய் நின்றாள்' என்றார். அயன் படைத்த திலோத்தமையினும் அழகு மிக்கவள் என்பார், 'வேதாப படைத்தவள் அவளினும் நல்லாள்' என்றார். பரவையாரை 'வாசத்தேனிளம் பதம்' என்றனர். பூம்பாவையை 'அழகின் முன்னிளம் பதம்' என்றார். பூம்பாவையின் திருநுதலானது 'அழகின் மாரி பொழிந்திடப் புயற் கீழிட்ட வாங்கிய வானவில்லின் வளரொளி வனப்பு வாய்த்தது' என்றார். மேனியின் ஒளியினைப் பன்முறை விதந்தோதுவது ஆசிரியர் வழக்கம்.

'மண்ணிய் மணியின் செய்ய வள்ரொளி மேனியாள்'

'தண்ணளி விரிந்த சோதி வெள்ளத்தில்'

'ஒண்ணிறக் கரிய செய்ய கயலிரண் டொத்து'

'பாவை நாசியும் பவள வாயும்'
நணிய பேரொளியிற் றேன்றும்'

'கிளரொளி மகரவேறு கெழுமிய தன்மை யாலும்'

'விற்பொலி தரளக் கோவை விளங்கிய கழுத்து'

'எரியவிழ் காந்தண் மென்பூ'

'மங்கை கைகளாய்க் காந்தி வெள்ளம் அருகிழிந் தனவோ'

'முழந்தாளின் செவ்வி பொலிந்தொளி விளங்கிப் பொங்க'

'காமரு பவளச் சோதிப் பொற்றிரள் வைரப் பத்திப்'

'பூந்துணர் மலர்ந்த போலு நற்பதம் பொலிவு காட்ட'

என்ற இடங்களில் வனப்பொளியை விதந்தமை காண்க.

காமன் சிலைக்குப் புருவத்தை ஒப்பிட்டகாலைப் புருவ மிரண்டாதலில், காமனுக்குச் 'செருவெழுந் தனுவ தொன்றும் சேமவில்லொன்றுமாக' இருசிலைகள் உள்ளன வெனக் கொள்க. 'மூக்கும் இதழும் அமைந்துள்ள நிலைமை பச்சோந்தியானது தனக்குக் கீழுள்ள இந்திர கோபத்தைப் பற்றுவதற்குத் தாழ்ந்துள்ளமைபோல இருந்தது' என்றார். இங்ஙன நந் தற்குறிப்பேற்றமமைந்த உதாரணங்கள் பல; அவை விரிக்கிற் பெருகும்.

சங்கிலியாரைக் கோவா முத்திற்குந் தொளைக்கப் படாத முத்திற்கும் வண்டு படியாத வளமிக்க மெல்லரும் பிற்கும் உவமித்தார் (ஏயர்கோன், உஉஎ, உஉஅ). அம் மடந்தையின் மெல்லியல்பையும், மேனி யொளியையும், இனிய தோற்றத்தையும், இணையற்ற முறையில் இரண்டடி களில் ஆசிரியர் அமைத்திருத்தல் வியக்கத்தக்கது.

"பொன்னு மணியு மலர்ந்தவொளி யமுதி லளாவிப் புதியமதி
தன்னு ணீர்மை யாற்குழைத்துச் சமைத்த மின்னுக் கொடி
[போல்வாள்."

மேனியின் நிறமானது மின்னிற்குங் குழல், கண், இதழ் முதலிய பகுதிகள் பல்வகை மணிகட்கும் ஒத்திருப்ப தனாலே 'பொன்னு மணியும் மலர்ந்த வொளி' என்றார். நாயனார் உள்ளத்தைக் கவர்தலால், 'அமுதிலளாவி' என்றார். கன்னிப் பருவத்தின் இளவெழில் விளங்கித் தோன்றுதலால், 'புதியமதி தன்னுள் நீர்மையினாற் குழைத்து' என்றார். ஒளிமென் சாயலுடையாரென்பார், 'மின்னுக் கொடிபோல்வார்' என்றார். சங்கிலியார்பால் நாயனார் பெண்ணலம் துய்க்குமிடத்தை யுணர்த்துமிடத்து,

"யாழின்மொழி எழின்முறுவல்
இருங்குழைமேற் கடைபிறழும்
மாழைவிழி வனமுலையார்" (ஏயர். உகஅ)

என்றார்.

திருவினும் உருவமிக்கா ரென்பார், "புண்டரிகத் தவள் வனப்பைப் புறங்கண்ட தூநலத்தை" யென்றார்.

ஆசிரியர் மடந்தையர் வனப்பை வர்ணித்ததுபோல ஆடவரது வீரத்தையும், இயற்பகை நாயனார் புராணம், எறிபத்த நாயனார் புராணம், ஏனாதிநாதர் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம் என்னும் நான்கினுள்ளும் இனிதெடுத்து விளக்கினார். இயற்பகைநாயனார் தாம் ஒருவரே சுற்றத்தாரனைவரையுங் கொன்று வென்றதை ஆசிரியர் மிக்க பெருமிதந் தோன்ற விரித்துரைத்தனர்.

"பெருவிற லாளி யென்னப் பிறங்கெரி சிதற நோக்கிப்
பரிபவப் பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை
ஒருவரு மெதிர்நில் லாதே யோடிப்போய்ப் பிழையு மன்றேல்
எரிசுடர் வாளிற் கூறாய்த் துடிக்கின்றீ ரென்று நேர்ந்தார்"

மூண்டுமுன் பலராய் வந்தார் தனிவந்து முட்டி ஞர்கள்
வேண்டிய திசைகள் தோறும் வேறுவே றமர்செய் போழ்தில்
ஆண்டகை வீரர் தாமே யனைவர்க்கும் அனைவ ராகிக்
காண்டகு விசையிற் பாய்ந்து கலந்துமுன் துணித்து வீழ்த்தார்."
(இயற்பகை, கஎ, உஉ)

படையெழுச்சியின் சிறப்பை எறிபத்தநாயனார் புராணத்தில் விளக்கினர்.

"பொங்கொலிச் சின்ன மெல்லாம் பொருபடை மிடைந்த [பொற்பின்
மங்குல்வான் கிளர்ச்சி நாண மருங்கெழுந் தியம்பி மல்க"

"தூரியத் துவைப்பு முட்டுஞ் சுடர்படை யொலியு மாவின்
ஞர்மணி யிசைப்பும் வேழ முழக்கமுந் தடந்தேர்ச் சீரும்
வீரர்தஞ் செருக்கி ஞர்ப்பு மிக்கெழுந் தொன்று யெல்லைக்
காருடன் கடைநாட் பொங்கு கடலெனக் கலித்த வன்றே"
(எறிபத்த, கக, கஉ)

படைகள் போர்புரியுஞ் சிறப்பினை ஏனாதிநாதர் புராணத்தில் இனிது விளக்கினர்.

"வாளொடு விழுமுடல் வென்றவன்
மார்பிடை யறமு னெறிந்திட
ஆளியி னவனு மறிந்தன
ஞயினர் பலருள ரெங்கணும்"

"ஆருயிர் கழியவும் நிற்பவர்
ஆண்மையில் இருவரும் ஒத்தமை
போரடு படைகொ டளப்பவர்
போல்பவர் அளவிலர் பட்டனர்." (ஏனாதி, உ௦, உக)

வில் விழாவின் சிறப்பும் வேட்டையின் சிறப்பும் கண்ணப்பநாயனர் புராணத்திற் செவ்வையாக அமைந்துள்ளது. கண்ணப்பநாயனர் புராணம் எஅஆம் பாட்டு :

"ஏனமோடு மானினங்கள் எண்குதிண் கலைக்குலங்
கானமேதி யானைவெம் புலிக்கணங்கள் கான்மரை
யானமா வநேகமா மருண்டெழுந்து பாயமுன்
சேனைவேடர் மேலடர்ந்து சீறியம்பு நூறினர்."

இசையினாலே எல்லா உயிர்களும் ஒத்த உணர்ச்சியுடையனவாய்ப் பகைமை யொழித்து இணங்கி நிற்பதும் எப்பொருளும் அசைவற்று நிற்பதும் ஆனாயர் புராணத்தில்,

"நலிவாரு மெலிவாரும் உணர்வொன்று நயத்தலினான்
மலிவாய்வெள் ளெயிற்றரவ மயின்மீது மருண்டுவிழுஞ்
சலியாத நிலையரியுந் தடங்கரியு முடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்" (௩௪)

"மருவியகால் விசைத்தசையா மரங்கண்மலர்ச் சினைசலியா
கருவரைவீ ழருவிகளுங் கான்யாறுங் கலித்தோடா
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா
இருவிசும்பி னிடைமுழங்கா எழுகடலு மிடைதுளும்பா" (௩௫)

என்னும் பாட்டுகளிற் செவ்விதிற் புனைந்துரைக்கப் பட்டது. இசையின் அசைவில்லாத்தன்மை திருஞான சம்பந்தர் புராணம் கஉஉ இல் உரைக்கப்பட்டது. விரிப்பிற் பெருகும்.

இனி, இயற்கைப் பொருள் அழகினை ஆசிரியர் செப்பு முறைமையை ஒரு சிறிது ஆராய்வாம். திருமலைச் சிறப்புக் கூறுமிடத்து, உலகத்தை ஒளிபொருந்தியதொரு கொடியாகவும், பல திருப்பதிகளுந் தளிர்களாகவும், கயிலை அக்கொடியின் முடியிலுள்ள வெண் மலராகவுந் தோன்றுவனவாக வருணித்தார். பிறவுலகங்கள்போல, நிலவுலகமும் ஒளிபெற்றிலங்குவதால், 'ஒளிமணவல்லி' என்றார். பல தலங்களும் மேலுங் கீழுமுள்ள நிலப் பகுதிகளி லுள்ளனவாயும், பனிமலைப்பாலுள்ள கயிலையானது எப்பதிக்கும் மேலாகவுந் தோன்றின வென்றார்.

''நிலவும் எண்ணில் தலங்களும் நீடொளி
இலகு தண்டளிர் ஆக எழுந்ததோர்
உலக மென்னும் ஒளிமணி வல்லிமேன்
மலரும் வெண்மலர் போல்வதம் மால்வரை''
(திருமலை, க)

என்றது காண்க.

கண்ணப்பநாயனர் புராணத்திலே குறிஞ்சிநில மாக்களாகிய வேடர் வாழ்க்கையை ஆசிரியர் செவ்விதின் இயம்பிப் போந்தனர்.

முத்துக் கொழிக்கும் அருவியின் பாங்கர் யானை மருப்பினு லமைத்த வேலியை யுடையதாய்த் திகழ்வது உடுப்பூ ரென்றமை நயமிக்கது.

''நித்தில வருவிச் சாரல் நீள்வரை சூழ்ந்த பாங்கர்
மத்தவெங் களிற்றுக் கோட்டு வன்றொடர் வேலி கோலி
யொத்தபேர் அரணஞ் சூழ்ந்த முதுபதி உடுப்பூ ராகும்''
(கண், உ)

வேடருள் ஆண்குழந்தைகள் தம் ஆண்மைக்கேற்ப விலங்கின் குட்டிகளோடும், பெண்பிள்ளைகள் தம் மென்மைக் கேற்ப, மெல்லிய மான்களோடும் விளையாடு வதை ஆசிரியர் அழகாகச் செப்பினர்.

''வன்புலிக் குருளை யோடும் வயக்கரிக் கன்றி னேடும்
புன்றலைச் சிறும கார்கள் புரிந்துடனு டலன்றி
அன்புறு காதல் கூர வணையுமான் பிணைக ளோடும்
இன்புற மருவி ஆடும் எயிற்றியர் மகளி ரெங்கும்.'' (கண், ௬)

வேட்டுவர் வேட்டைக்கு வீரமாய்ச் செல்லும்போது அவரெழுப்பும் ஓசையை நேரிற் கேட்டாற்போலப் புலப் படும்வண்ணம் இயம்பினமை பாராட்டத்தக்கது.

"வெல்படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டந்தோறுங்
கொல்லெறி குத்தென் றார்த்துக் குழுமிய வோசை யன்றிச்
சில்லரித் துடியுங் கொம்புஞ் சிறுகணு குளியுங் கூடிக்
கல்லெனு மொலியின் மேலுங் கறங்கிசை யருவி யெங்கும்."
(கண், [illegible])

திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்துள், ஐந்திணை வளங்கள் ௯ ஆம் பாட்டு முதல் ௪௭ ஆம் பாட்டு வரை தொகுத்துரைக்கப்பட்டன.

"குறவர் பன்மணி யரித்திதை விதைப்பன குறிஞ்சி
கறவை யானிரை மானுடன் பயில்வன கானம்
பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனஞ்
சுறவ முண்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்."

திருஞானசம்பந்தர் புராணம் ௫௨௯ ஆம் பாட்டில் குன்றுகளிற் பனி மூடியிருப்பது குன்றுகள் குளிர் தரங்க மாட்டாது வெண்போர்வை போர்த்திக் கொண்டாற் போன்றதென்று செப்பினர்.

"சூழ்பனியாற்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்"

என்றனர்.

பெரிய புராணத்திற் பலவிடங்களிற் பொழில் வருணனை காணப்படுகின்றது. பல்வகை மரங்களைத் தொகுத்துரைப்பது இவர் வழக்கம்.

"நாளிகே ரஞ்செருந்தி நறுமலர் நரந்த மெங்கும்
கோளிசா லந்த மாலங் குளிர்மலர்க் குரவ மெங்குந்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகமெங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்க மெங்கும்."
(திருநாட்டுச் சிறப்பு, ௨௮)

௨௯ ஆம் பாட்டும் மரங்களைத் தொகுத்துரைப்பதே.

தடுத்தாட்கொண்ட புராணம் கூ௩ ஆம் பாட்டும், மர அடுக்குப் பகர்வனவே. கூச ஆம் பாட்டு வருமாறு.

"வன்னி கொன்றை வாழை சண்பகம் ஆரம்
மலர்ப்ப லாசொடு செருந்திமந் தாரங்
கன்னி காரங்குர வங்கமழ் புன்னை
கற்ப பாடலிகள் கூவிள மோங்கித்
துன்னு சாதிமரு மாலதி மௌவல்
துதைந்த நந்திகர வீர மிடைந்த
பன்ம லர்ப்புனித நந்தவ னங்கள்
பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்."

திருஞானசம்பந்தர் புராணத்திலே, அந்தணரது வேட்டற்றொழிலை மரங்களும் மேற்கொண்டனவென்று ஆசிரியர் நயமுறப் புனைந்தமை பாராட்டத்தக்கது.

"பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீ ளிலைக்கடையால் ஒழுகுதலான் நெடிதவ்வூர்
மரங்களும்ஆ குதிவேட்குந் தகையவென மணந்துளதால்."

(திருஞானசம், எ)

பொழில்களின் அருகேயுள்ள வயல்களில் முளைத் திருக்குஞ் செந்தாமரையில் தேமாமரக் கனிகளின் தேனானது இலைகளினூடே சென்று வீழ்தல், நெருப்புக் குண்டத்தில் நெய்யினை ஆகுதி செய்தல் போன்றமையால், 'மரங்களும் வேட்டன' என்றார். கிளைகள் நெருங்கப் பெற்றுக் கதிரவன் மண்டலத்தை அளவளாவினாற்போல் வளர்ந்துள்ள செழுமை மிக்க மரங்கள் அசையுங்காலை அவற்றின்மேற் படர்ந்த முகில்களினின்று புனன்மழையாவது, அவற்றின் மலர்களினின்று தேன்மழையாவது பொழிந்துகொண்டிருந்தமையால் மழை எக்காலத்தும் ஒழியாதிருந்த தென்றார்.

"நனைமருவுஞ் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரமண் டலம்வருடுஞ் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனமருவி அசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனன்மழையோ மதுமழையோ பொழிவொழியா பூஞ்சோலை"
(திருநாளைப், ௬)

பொழிலைச் சூழ்ந்து மொய்த்த வண்டுகளின் கூட்டம், நீலமணியாலிழைத்த மணியாரம்போல் இலங்க, மரங்களின் செவ்விய தளிர்கள் நல்ல விரல்கள் போலவும், தளிர்களின் நுனியிலுள்ள மலர் அரும்புகள் நகங்கள் போலவுந் தோன்ற, பெருமரங்கள் நிலமகளின் கைகள்போன்றிருப்ப, வெண்மதியானது நிலமகள் தனது உருவத்தைப் பார்க்கும்பொருட்டுப் பிடித்த கண்ணாடிபோற் றோன்றும் படி மலர்ச் சோலைகள் ஓங்கி வளர்ந்தன என்றமை நயமிக்கது.

"மொய்யளிசூழ் நிரைநீல முழுவலயங் களினலையச்
செய்யதளிர் நறுவிரலிற் செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும் ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற் போலுயர்வ மலர்ச்சோலை."
(திருநாவுக்கரசு, ௯)

பொழில்களிலே திருப்பதிகங்களைக் கிளிகள் கூறப் பூவைகள் கேட்பதாகவும், கிளியும் பூவையும் சிவனடியார் வரவுகண்டு சிவமொழி பயில்வதாகவுங் கூறியுள்ளார்.

"தெள்ளு மோசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள்" (மனுநீதி, ௮)

"சிவமுன் பயின்மொழி பகர்கின் றனவளர்
சிறைமென் கிளியோடு சிறுபூவை" (திருநாவுக், ௬0)

என்றார்.

நாயன்மார் வாழ்ந்திருந்த திருப்பதிகள் பலவும் மருத நிலத்திலுள்ளனவாதலின், மருத நிலத்திற்குச்

சிறப்பாயுரிய உழவினை அழகுற இயம்புவான், ஆசிரியர் பல திருப்பாடல்கள் இயற்றியுள்ளார். திருநாட்டுச் சிறப்பிலே மிகுந்த பாட்டுகள் (க0—உகூ) உழவு செய்யு முறையையும் உழத்தியர் செய்கையையும், பயிர்கள் மரங்கள் முதலியவற்றின் சிறப்பையுமே பகர்கின்றன.

உழத்தியர் வயற்கணுள்ள செங்குவளையைப் பறித்தணிதலும், தங்கள் கூந்தலின்பாலுள்ள வண்டுகளை யோட்டுதற்பொருட்டு, மலர்களாகிய களைகளை யோச்ச, அவற்றிலுள்ள வண்டுகளும் முன்னுள்ளவற்றோடு கூடினமையால் ஓட்டு முயற்சி பிறவற்றை வரவழைக்கும் பயனையே தந்தது. அதனாற் சிறிது மனந்தளர்வெய்தி நெற்றியில் வியர்வைதோன்றப் பெற்றாலும், செந்தாமரைப் பூவினின்றிழியும் புதுத் தேனைப் பருகுவதனால், புன் சிரிப்புடையராயினர் என்றனர். அப் பெண்டிர் பற்கள் முல்லையரும்பை யொப்பன வென்றுங் குறித்தனர்.

“செங்குவளை பறித்தணிவார் கருங்குழல்மேற் சிறைவண்டை
யங்கைமலர்க் களைகொடுகைத் தயல்வண்டும் வரவழைப்பார்
திங்கணுதல் வெயர்வரும்பச் சிறுமுறுவல் தளவரும்பப்
பொங்குமலர்க் கமலத்தின் புதுமதுவாய் மடுத்தயர்வார்.”

(திருநாட்டுச், கச)

நெல்விளையப்பெற்ற கதிர்கள் சாய்ந்து கிடக்குங் காலை அரனன்பர்கள் ஒருவரையொருவர் வணங்கித் தாழ்ந்தாற்போன்ற தோற்றமிருந்த தென்பார்,

“பத்தியின் பால ராகிப் பரமனுக் காளா மன்பர்
தத்தமிற் கூடினார்கள் தலையினால் வணங்கு மாபோன்
மொய்த்தநீள் பத்தி யின்பான் முதிர்தலைவணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல விளைந்தன சாலியெல்லாம்”

(திருநாட்டுச், உஉ)

என்றார்.

நெற்குன்றுகளால் மருதமானது குறிஞ்சியாகத் தோன்றிற்றென்பார்,

"கைவினை மள்ளர் வானங் கரக்கஆக் கியநெற் குன்றால்
மொய்வரை யுலகம் போலு முளரிநீர் மருத வைப்பு"
(திருநாட்டுச். ௨௯)

என்றார்.

மூங்கிலும் கரும்பும் தாழும்படியாகச் செந்நெற் கதிர்கள் மேலோங்கும் வளமிக்க சோணாடென்பார்,

"வேழக் கரும்பினொடு மென்கரும்பு தண்வயலில்
தாழக் கதிர்ச்சாலி தானோங்குந் தன்மையதாய்"

என்றார்.

வேழக் கரும்பு என்பது பெரிய கரும்பு என்பாரு முளர்.

வாழைக் குலைகள் யானைத் துதிக்கைபோலத் தோன்ற அதனருகே வளர்ந்த செந்நெற் கதிர்கள் குதிரை முகம் போல் தோன்ற, விளைபொருளேற்றும் பெருவண்டிகள் தேர்போல விளங்க, வயலுழவர் காலாட்படை போலத் தொழிலியற்றினமையால், மருத நிலமானது நால்வகைச் சேனையுடன் மிளிரும் போர்க்களத்தை யொத்ததென்றது பின் வருஞ் செய்யுளிற் காண்க :

"கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கைம் முகங்காட்ட
மருங்குவளை கதிர்ச்செந்நெல் வயப்புரவி முகங்காட்டப்
பெருஞ்சகடு தேர்காட்ட வினைஞரார்ப் பொலிபிறங்க
நெருங்கியசா துரங்கபல நிகர்ப்பனவா நிறைமருதம்."

செந்நெல்வயல் நின்று களையென எடுத்தெறியப் பட்ட செந்தாமரைப் பூக்களின் பாங்கர் வயற் சங்குகள் முத்துகளைச் சொரிவதால் மள்ளர்கள் விண்ணவர்

போற்றுஞ் சங்கநிதி பதுமநிதியுடையார் போன்றனர் என்று வியந்தார்,

"செங்கெ லார்வயற் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தஞ் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி போன்றுளார்."

முத்துப் பிறக்குமிடங்களை விறன்மிண்ட நாயனர் புராணத்துட் டொகுத்துரைத்தமை காண்க.

"வாரி சொரியுங் கதிர்முத்தும்
வயன்மென் கரும்பிற் படுமுத்தும்
வேரல் விளையுங் குளிர்முத்தும்
வேழ மருப்பி னொளிர்முத்து
மூரன் முறுவல் வெண்முத்த
நகையார் தெரிந்து முறைகோக்குஞ்
சேரர் திருநாட் டூர்களின்முன்
சிறந்த மூதூர் செங்குன்றூர்." (விறன்மிண்டர் உ)

இப் பாட்டினுட் கடன் முத்து மினுக்கமுடையதாயும், கரும்பு முத்து பெரியதாயும், மூங்கின் முத்துக் குளிர்ந்த தாயும், யானைக்கொம்பு முத்துப் பரந்த ஒளியுடையதாயும் இருப்பதாகக் குறிப்பித்தார்.

பனிக்காலத்தைக் கூறுமிடத்துக் கதிரவனும் கைநிமிர்க்கமாட்டாது, வெயிற் கதிர்களைக் குறைந்தவளவு காட்டுவதும், மறைப்பதுமாயிருந்தா னென்றார்.

"மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக் குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவு மடங்குவதும் ஆகுமால்"

என்றது காண்க.

வேனிற் காலத்திலே நீர் வற்றிய ஆற்றிலே கானலை நீரென்று திரியக்கொண்டு மான்கள் செல்லுதலும், நெடுந் தூரஞ் சென்று இரைதேடும் புள்ளினங்கள் மெலிந்து போதலும், பறவைகள் குளிர்தேடிப் பனியுள்ள இடத்தே தங்குதலும், காற்றின் பொருட்டு உயர்ந்த மாளிகைகளின் மேலிடத்திற்கு மக்கள் செல்லுதலும், குளிர்ச்சி வேண்டி மாந்தர் நிலாமுற்றத்தையும் குளிர்ந்த சோலையையும் பூம்பொய்கைகளையும் பூங்குழலாரையும் நாடுதலும், மயில் ஒடுங்கக் குயில் எழுந்து கூவுதலும், வண்டு பாடுதலும், செந்தாமரை மலர் விரிதலுமாகிய செயல்கள் நிகழ்கின் றனவென்று திருஞானசம்பந்த நாயனார் புராணம், ௩அசு, ௩அஎ, ௩அஅ ஆம் பாடல்களிற் பகர்ந்தமை தேர்க.

பல்வகை ஒலிகளின் நயத்தைச் சேரமான்பெருமா ணாயனார் புராணத்துள் ஆசிரியர் தொகுத்துரைத்தார்.

"காலையெழும்பல் கலையினொலி களிற்றுக் கன்று வடிக்குமொலி
சோலையெழுமென் சுரும்பினொலி துரகச்செருக்காற் சுலவுமொலி
பாலை விபஞ்சி[1] பயிலுமொலி பாட லாடன் முழவினொலி
வேலை யொலியை விழுங்கியெழ விளங்கி யோங்கும் வியப்பின
தால்." (சேரமான், உ)

ஒளியின் சிறப்பினைக் கண்ணப்பநாயனார் புராணத் தில் தொகுத்துரைத்தமை காண்க.

மூங்கிலின் வீழ்ந்த முத்துகள் குன்றுபோற் குவிந்து கிடப்பதால் அவற்றின் நிலவொளியும், பாம்பு தன் வாய் நின்று இரைகாண எடுத்து வைத்த செம்மணிச் சோதியும் முறையே திங்களொளியையும், ஞாயிற்றினொளியையும் ஒத்தமையால் திங்களும், ஞாயிறும் இறைவரைக் கும்பிடு வான் திருக்காளத்தி மலையை யடைந்தமை போன்ற தென்றார்.

---

1. விபஞ்சி - வீணை.

"கழைசொரி தரளக் குன்றிற் கதிர்நிலவு ஒருபாற் பொங்க
முழையரவு உமிழ்ந்த செய்ய மணிவெயில் ஒருபான் மொய்ப்பத்
தழைகதிர்ப் பரிதி யோடுஞ் சந்திரன் றலையு வாவில்
குழையணி காதர் வெற்புக் கும்பிடச் சென்றால் ஒக்கும்"
(கண்ணப்ப, கஉக)

என்பது காண்க.

இயற்கை விளக்காலுஞ் செயற்கை விளக்காலும் புற விருணீக்கமும், அகத்தினின்றெழும் ஒளியால் அகவிருள் நீக்கத்துடன் புறவிருளொழிவும் நேர்ந்தன வென்பார்,

"செந்தழல் ஒளியில் பொங்குந் தீபமா மரங்க ளாலும்
மந்திகள் முழையில் வைத்த மணிவிளக் கொளிக ளாலும்
ஐந்தும்ஆ றடக்கி யுள்ளார் அரும்பெருஞ் சோதி யாலும்
எந்தையார் திருக்கா ளத்தி மலையினில் இரவொன் றில்லை"
(கண்ணப்ப, கஙக)

என்றார்.

இதனுட் போந்த மூவகை விளக்குகளும் வியத்தகு தோற்றங்களாதலுந் தெளிக.

திருஞானசம்பந்தர் புராணத்திலே, அந்தணர் செய்யும் ஓமப்புகையாலாய இரவும் திருநீற்றொளியாலாய பகலும் எப்போதும் உண்மையால், வேறு பகலும் இரவும் மிகையென்று கூறிய அழகை உற்று நோக்குக.

"உளங்கொள்மறை வேதியர்தம் ஓமதூ மத்திரவுங்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலுமலர்ந்து
அளந்தறியாப் பல்லூழி யாற்றுதலால் அகலிடத்து
விளங்கியஅம் மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை"

என்றார்.

பொதுவாய் விளங்குஞ் செய்திகளைச் சொல்லுமுறையால் நயஞ் சிறக்கச் செப்புதல் இப்புராணத்துட் சிறந்

துள்ளது. திருவாரூர்வீதி சிவபெருமான் திருநாவலூரர்க் காகத் தூது செல்லப்பெற்ற ஒப்பற்ற பெருமை வாய்ந்த தென்பதை,

"தொடர்ந்து கொண்டவன் ருெண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்" (மனுநீதி, சு)

என்றறிவுறுத்தி யருளினுர்.

திருநீலகண்ட நாயனுர் திருக்குளத்தில் மூழ்கி யெழுந்தபோது விண்ணவர் பூமாரி பொழிந்தனர் என்ற கருத்தை,

"வாவியின் மூழ்கி யேறுங் கணவரும் மனைவியாரும்
மேவிய மூப்பு நீங்கி விருப்புறும் இளமை பெற்றுத்
தேவரு முனிவர் தாமுஞ் சிறப்பொடு பொலியுந் தெய்வப்
பூவின்மா மழையின் மீள மூழ்குவார் போன்று தோன்ற"
(திருநீலகண்டர், நக)

என்ற முறையாகத் தெரிவித்தார்.

அளவற்ற அன்புடன் திண்ணனுர் காளத்திமலையை யடைந்தாரென்பார்,

'நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை யேறத் தாமும்'
(கண்ணப்ப, க0க)

என்ருர். இனைய நயங்கள் பல.

இனிப் பெரிய புராணத்திற் போந்த சமயக் கருத்துகளை ஒரு சிறிது தொகுத்துரைப்பாம். கடவுள் ஒருவர் என்பதைப் பல விடங்களில் ஆசிரியர் குறித்துள்ளார்.

.............................................. 'எவ்வுயிர்க்குஞ்
சான்ரு மொருவனை'.............................(திருநாவுக், கஙச)

'கருவ ரைப்பிற் புகாதவர் கைதொழு

மொருவர்'..................................(திருஞான,கஅரு)

ஊர்தொறும் பலிகொண் டுய்க்கு மொருவன்'................

(குங்குலியக், உஉ)

'உணர்விஞல் உணர வொண்ணு ஒருவரை'

(இளையான், உ௩)

'ஏகநா யகரைக் கண்டார்'...... (கண்ணப்ப, க0ரு)

'ஓங்குபூங் கோயிலுள்ளா ரொருவரை.' (தடுத்தாட், க௩எ)

அவன் சத்தியுஞ் சிவமுமாய்த் தோன்று முன்னர்ப் பிரிவிலாத ஒரு பொருளென்பார் 'பேதியா ஏகமாகி' என்ருர். இதற்குப் 'பிற பொருளொடு கலந்து நின்ற காலையுந் தன்றன்மை மாருதவனுய்' என்றும் பொருள் கொள்ளலாம். உயிர்கள் தாமே இறைவனே யறிந்துய்ய இயலாதன வென்பார்,

'உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்' (பாயிரம், க)

என்ருர்.

'.....................................யார்தொடர்ந் தெட்ட வல்லார்'

(தடுத்தாட். ௩௯)

'.....................................எல்லை தெரிய வொண்ணுதார்')

(விறன், ௯)

'யாவர்களும் அறிவரிய இறைவன் றன்னை.'

(திருஞான, க0உரு)

கடவுள் எல்லை யில்லவர் என்பது,

'எல்லை யில்லவன்..............................' (அமர்நீதி, உ௯)

'எல்லை யிலான்..............................' (திருநீலகண், ௩க)

'அந்த மில்லவர்.........................' (திருஞான, ௩எஉ)

'ஈறில்லாதவர் ......................'
'முடிவில்பரம் பொருளானூர்'

என்றூர்.

கடவுள் எல்லையற்ற ஞானவடிவனென்பார்,

'அலகில் சோதியன்............................' (பாயிரம், க)
என்றூர்; இறைவனது வரம்பிலாற்றலை யுணர்த்துவான்,

'ஆதியாய் நடுவு மாகி யளவிலா அளவு மாகி'
(தில்லைவாழ், க)

என்றூர். முதல்வன் அளவிடப்படாதவனுயிருந்தும் மன்னுயிர்களின் பொருட்டு அளவுட்பட்ட அண்டங்களிலும் வியாபகனுய்த் திருமேனிகொண்டெழுந்தருளுதலால், 'அளவுமாகி' என்றூர்.

'மூவாத முதலாகி நடுவாகி முடியாத
சேவாருங் கொடியாரை...........' (ஏயர்கோன், கஉ௯)

என்றதும் அது. இறைவன் என்றுமிளேயோன் என்பதை 'மூவாத' என்ற சொல் குறித்து நின்றது.

'மூவாத முழுமுதலார்...........' (ஏயர்கோன், கஙு)

என்றூர்.

'மூவர் தமக்கு முதலாகு மவரை.........' (சேரமான், கக)
என்றவிடத்து இறைவன் அயன் அரி அரற்கு வேருய் அவர்கள் தலைவனுவான் என்பது சுட்டப்பட்டது.

'மூவருக்கு அறிவரும் பொருளாகிய மூலத்தேவர்'
'....................................யார்க்கு
முன்னவனே' (மனுநீதி, சஎ)

என்றவிடத்து இறைவனது அநாதித்தன்மை குறித்தவாரும். எல்லாவற்றையும் முறையினி னடாத்து முதல்வனென்பார்,

'ஆணையாஞ்சிவம்...................' (கண்ணப், கOக)

என்றார். எல்லாவற்றையும் படைப்போனும் ஒடுக்கு வோனுஞ் சிவனே என்பார்,

'...........எல்லாந் தான்வைத்து வாங்க வல்லான்'
(திருநீலகண்டர், உO)

என்றார். 'எவ்வுயிருந் தோற்றுவித்து அயன்போற்றும் அந்தணனார்' என்றதும் அது. 'எவ்வுயிருந் தருவானை' 'எண்ணிலாத தேவர்கள் தம் பெருமானை'

'எல்லாம் உடைய ஈசனே இறைவன் என்ன அறியாதார்'
(சாக்கியர், எ)

'ஆவதும் அழிவும் அவர்செயல்'

'எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனுமுணர்வு'

'பெருமயானத்து நடம்புரிவார்'

'எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளும்'
(திருஞானசம், அசஎ)

என்ற திருவாக்குகளுங் காண்க.

ஐந்தொழிலும் அநாதி யென்பார்.

'ஆதியு முடிவு மில்லா அற்புதத் தனிக்கூத்தாடும், நாதனார்'

என்றார்.

இறைவன் இயல்பாகவே பாசங்களின் நீங்கினவ ரென்பார்,

'கோதிலா வாரமுதை'

'என்றுங் கேடிலாதானை' (தடுத்தாட், கஉஅ)

'மெய்ப்பொருளானார்'

'உள்ளங்கலப் பொருளாய உம்பர்பிரான்'

'பொய்யன்புக் கெட்டாத ஐயன்'

'தூயநற் சோதி போற்றி'

என்றார்.

இறைவன் எண் பெருவடிவாய்த் திகழ்வது மாத்திர மன்றி, உலகங்களுக்கப்பாலுள்ள சுத்த மாயையினுள்ளும் வியாபகமாய் அருள் வடிவாய்த் திகழ்கின்றானாதலின் தூய வடிவுடையா னென்பார்,

"வானாகி நிலனாகி அனலும் ஆகி
மாருதமா யிருசுடராய் நீருமாகி
ஊனாகி உயிராகி உணர்வும் ஆகி
உலகங்கள் அனைத்துமாய் உலகுக் கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார்" (திருஞான ௩௬௧)

என்றார். சிவலிங்கத்தினியல்பு கூறுமிடத்து,

"காணாத அருவினுக்கும் உருவினுக்குங் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய்"

என்றமையால், சிவலிங்கம் உலகத் தோற்றத்திற்குக் காரணமாய் இறைவனது அருவுருவச் சோதிவடிவமென்று கருதப்படும். 'அருவாகி யுருவாகி யனைத்துமாய் நின்ற பிரான்' என்றமையால் மூவுருவுங் குறித்தமை காண்க.

இறைவன் மெய்யறிவிற் கிளைத்த வரம்பிலின்பனென் பார், 'உணர்வி னேர்வருஞ் சிவபோகத்தை' என்றார். 'நிலவுலாவிய' 'பருகாவின் னமுதத்தை' 'செய்ய தேனை' 'மெய்த்தாயினும் இனியானை' 'பேச இனியானை' 'ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி' 'மலர்ப்பாதத்து அமுதுண்டு'

'எல்லையிலின்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி' என்ற திருவாக்குகளில் இறைவனது இன்பவியல்பு குறிக்கப்பட்டமை காண்க.

இறைவன் பேரருளாளன் என்பது, 'நீர்மலிவேணியன் எவ்வுயிர்க்குந் தாயானே' 'உலகுய்ய நடமாடும்' 'மன்றுளே திருக்கூத் தாடி அடியவர் மனைகள்தோறுஞ் சென்றவர் நிலைமை காட்டும்' 'ஏதமில் பல யோனி யெண்பத்து நான்கு நூறுயிர நந்தனுள் வைத்த, பேதமும்புரந் தருளுமக் கருணைப்பிரான்' என்பவற்றாற் பெறப்படும்.

இதுகாறுங் கூறியவற்றான், இறைவனின் எண் குணங்களையும் ஆசிரியர் இனிதுணரவைத்தவாறு தெளியப்படும். கலைஞானத்திற்கும் இறைவனே காரண மென்பார், 'வேதகாரணராய்,' 'வேத முதல்வர்,' 'அறிவி னெல்லையாய திருத்தில்லை,' 'அருமறைச் சிரத்தின் மேலாஞ் சிற்பர வியோமம்' என்றியம்பினர். 'ஐந்தெழுத்தும் பாடிய பொருளாயுள்ளான்' என்றது ஐந்தெழுத்தும் மறையென்று குறித்தவாறும். நற்கல்வியின் பயன் கடவுள் வழிபாடென்பார், 'வேதப்பயனுஞ் சைவம்' என்றார். 'வேதவாய்மைக் காவலர்,' 'அருமறைச் சைவந் தழைப்ப' 'வாய்மைவேத நன்மைத்திரு நீற்றுயர் நன்னெறி தாங்கு மேன்மை' 'ஆரணத்துட் பொருளாயினரை,' 'அருமறைகள் துணிந்த வான்பொருள்' என்ற திருவாக்குகளும் இதனை வலியுறுத்தும். 'முந்தைமறை யாயிர மொழிந்த திருவாயான்', 'தூமறை பாடும் வாயார்' 'பொருட்டிரு மறைகள் தந்த புனிதன்', 'ஆதியா மறைப்பொருளா அருந் தமிழின் திருப்பதிகம் அருளிச் செய்ய', 'சொல்லிறந்த ஞான மறைத்திருவாயார்', 'நான்மறை தந்தளித்தார்,' 'சந்தமறை தந்தவர்' என்ற திருவாக்குகளான், இறைவன் மொழிந்த மறைகள் ஞானமயமாய்த் தூயனவா யிருப்பவை என்று தெரிதலால், இவை இப்போதுள்ள வட நான்மறை யென்று கருத இடமில்லை. நூற்பொருளைத் தான் இறைவன் ஆலின் கீழ் முனிவர்க் கறிவுறுத்தி

யருளினுன் என்றமையால், வடவேதப் பொருளை மட்டுமே அவன் அறிவுறுத்தினனென்பது திப்பமுடைய கொள்கையன்று.

> "ஆலின்கீழ் நால்வர்க்கன் றறமுரைத்த அங்கணனை
> நூலின்கட் பொருள்நாடி நூலறிவார்க் கீந்தானை"

என்றது காண்க. ஆகமங்கள் சொன்ன முறையிலே சிவபூசை நிகழ்தற்குரிய தென்பதை,

> 'கருணைப்பிரான் மொழிந்த ஆகமவழி போற்றி'

> 'எண்ணி லாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
> உண்மையாவது பூசனை எனவுரைத் தருள்'

> "பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவர்
> எங்கு மாகி யிருந்தவர் பூசனைக்
> கங்கண் வேண்டு நிபந்தமா ராய்ந்துளான்
> துங்க வாகமஞ் சொன்ன முறைமையால்" (மனு, கஞ)

> 'எய்தியசீ ராகமத்தில் இயம்பியபூ சனைக்கேற்ப'
> (கண்ண, ககூ)

என்ற திருவாக்குகளால் தெளியப்படும். ஆகமநெறியின் வேருக 'அறிந்த நெறி'ப்படி பூசித்தலும் அன்பர் செயற்பாலதே என்பது கண்ணப்பர் இறைவனை வழிபட்டாரென்று கூறுவார்,

> 'அங்கிலையில் அன்பனுர் அறிந்தநெறி பூசிப்ப'

என்றமையின்வைத் தினிதுணரப்படும்.

மறைகளால் அறியப்படாதவ னென்பார்,

> 'மயக்கறு மறையோலிட்டு மாலயன் தேடகின்ருன்'
> (இயற்பகை, உக)

'.......................செழுமறைகள்
ஓலமிடவும் உணர்வரியார்' (விறன்மீண், க)

என்றார். வேதாகமங்களின் குறியிறந்தவன் இறைவனென்று குறித்தவாறும். கண்ணப்ப நாயனார் புராணத்திலே, இறைவன் அருணோக்கினாலே மும்மலங் கெடுதல் கூறப்பட்டது.

'யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற'
(கண், கடுசு)

என்றவிடத்து, மூன்று மலத்துள் ஒன்றாகிய கரும மலம் என்பது மூலகன்ம மாதலின், இருவினையின் வேறாக அதனைக் கருதினரென்க. 'யாக்கைத் தன் பரிசு' என்றவிடத்து, மாயாமலம் குறிக்கப்பட்டாலும், யாக்கைக்கு மூலகாரணமாய மாயையை, அதனின் வேறாகக் கருதினமை தெளிக.

'மும்மை
மாமலங்களற வீடருள் தில்லை' (தடுத்தாட், கஉ)

என்றவிடத்து, 'மாமலம்' என்பது மூலமலம் என்பதைக் குறிக்கும்.

'ஆதிவரு மும்மலமு மறுத்த வாய்மை' (முழுநீறுபூ, சு)

என்றது காண்க.

'பந்தம் வீடு தரும்பர மன்கழல்' (தடுத்தாட், கடுச)

என்றமையால், இறைவனது சத்தியினாலே மறைப்பும் அருளலும் நடைபெறுகின்றன வென்பது குறித்தவாறும்.

'இருவினைப் பாசமு மலக்க லார்த்தலின்' (திருநாவு, கஉக)

என்றவிடத்து 'மலம்' என்பது ஆணவத்தை யுணர்த்தி நின்றது.

'பேணுதத் துவங்க ளென்னும் பெருகுசோ பான மேறி
ஆணையாஞ் சிவத்தைச் சார' (கண்ணப், க௦௯)

என்றமையால், தத்துவங்கள் படிமுறையிலுள்ளன என்பதும், அவற்றையெல்லாங் கடந்த பரம்பொருள் சிவ மென்பதும் அறியற்பாலன.

'முன்னைவல் வினையு நீங்கி முதல்வனை அறியுந் தன்மை
துன்னினுன் வினைக ளொத்துத் துலையென நிற்ற லாலே'
(திருஞானசம், அகக)

என்றவிடத்து, இருவினை ஒப்பினுலேதான், முதல்வனை அறியுந்தன்மை வந்தெய்தும் என்பது உணர்த்தப்பட்டது.

'ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை'

என்றமையால், 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்ற நான்கும் ஆசிரியராற் சுட்டப்பட்டன.

'அறுசமயத் தலைவராய் நின்றவர்' (சாக்கிய, க)

என இறைவனைச் சிறப்பித்தமையாலும்,

'ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும்'
(திருஞான, கஉ௯உ)

முத்தி புக்கதாகக் கூறினமையாலும், உட்சமயம் ஆறினையே 'அறுசமய'மென ஆசிரியர் விதந்தன ரென்று தெரிகிறது. சைவத்தின் தனிச்சிறப்பை ஆசிரியர் விதந்து கூறும் பாட்டு வருமாறு :

"செய்வினையுஞ் செய்வானும் அதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்தறிந்தார்"
(சாக்கிய, ௯)

சிவயோகத்தினியல்பைப் பெருமிழலைக் குறும்பர் புராணத்திலும், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார் புராணத்திலும் சுருக்கமாகக் கூறினர். சரியையும் கிரியையும் திருத்தொண்டு என்பதனுள் அடக்கி அதனை விரிவாகப் புராணத்துட் கூறினமை வெளிப்படை.

பெரிய புராணத்தினுலே, பயன் கருதாது மனமொழி மெய்களாற் செய்யும் பல்வகைத் திருத்தொண்டினுலும், சிவயோகத்தாலும், முழுநீறுபூசி நிலையாமையுணர்ந்து சிவத் தியான முதிர்ச்சியினுலும் இறைவன் திருவருட் பேற்றிற்கு உரிமை நேர்ந்து ஞானமெய்தி உயிர்கள் வீடடையும் பான்மையன என்பதே பெறப்படும். திருத் தொண்டு என்பதில், உலகிலுள்ள பிற நெறிகளெல்லாம் அடங்குமென்றது மிகையாகாது. ‘அப்பாலும் அடிச் சார்ந்தார்’ என்னுந் திருக்கூட்டத்துள், பிற நாட்டிலே தவமியற்றி ஞானம் பெற்றுச் சிவனடி சேர்ந்தாரும், முக் காலத்திலுஞ் சேரும் பான்மையர் யாவரும் அடங்குவ ராதலின், பெரிய புராணத்தின் விரிந்த நோக்கமும், பொருள்கோளும் அதனை உலகர்க்குப் பொது நூலெனக் குறிக்கு மியல்பின.

திருத்தொண்டின் இயல்பினை ஒரு சிறிது ஆராய்வாம். நேசநாயனர் புராணத்திலே திரிகரணத்தாலும் அவர் தொண்டியற்றியதை ஆசிரியர் ஒருசெய்யுளுட் குறித்தனர்.

“ஆங்கவர் மனத்தின் செய்கை அரனடிப் போதுக் காக்கி
ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்தஅஞ் செழுத்துக் காக்கித்
தாங்குகைத் தொழிலின் செய்கை தம்பிரா னடியார்க் காக”
(நேசநாயனர், ௨)

என்றமை காண்க.

திருத்தொண்டர் எப்போதும் இறைவனை மறவாத இயல்புடையரென்பார்,

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலு மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்"
(பத்தராய்ப்பணிவார். எ)

'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்'

என்பதற்கிணங்கச் சிவனடிப் பேரன்பர்க்கு அன்பின் மெய்ப்பாடு நிகழ்வதைப் பலவிடங்களில் ஆசிரியர் விதந்துள்ளார்.

"ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களியெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறழித்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திடுவார்மெய்க் குணமிக்கார்."
(பத்தராய்ப்பணிவார், ௬)

அன்பே பெரியபுராண உயிர்க்கருத்தென்பதை,

'கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்' (திருக்கூட், அ)

என்பதனாற் பெறவைத்தார்.

தடுத்தாட்கொண்ட புராணத்திலே திருநாவலூரர் பேரன்பினைச் சில மொழிகளால் ஆசிரியர் தெளிவாகப் புலப்படுத்தினர்.

'ஊனும் உயிரும் உருக்கும் அன்பால்
உச்சிகுவித்தசெங் கைகளோடுங்' (தடுத், கஉச)

"என்றெழு மோசை கேளா வீன்றவான் கனைப்புக் கேட்ட
கன்றுபோற் கதறி நம்பி கரசர ணாதி யங்கந்
துன்றிய புளக மாகத் தொழுதகை தலைமே லாக"
(தடுத்தாட், கஅ)

"அன்பு பெருக உருகியுள்ள மலைய.............
.....................முடி விலாக் காதன் முதிரவோங்கி
நன்புல ஞகிய வைந்துமொன்றி நாயகன் சேவடி யெய்தப்
[பெற்ற
இன்பவெள் ளத்திடை மூழ்கினின்றே" (தடுத், கஉசு)

என்றமை காண்க.

'கண்ட வர்க்குறு காதலின் மனங்கரைந் துருகத்
தொண்ட ரன்பெனுந் தூநெறி வெளிப்படுப் பாராய்''
(அமர்நீதி, கூ)

என்றமையால், இறைவன் தொண்டரன்பினை யுலகினர்க்குணர்த்த அமர்நீதி நாயனர்க்குத் தோற்றித் திருவிளையாடல் இயற்றின ரென்பது தெளியப்படும்; இக் கருத்துத் திருநீலகண்டர் புராணத்திலுங் குறிக்கப்பட்டது.

"மின்னொளிர் சடையோன் ருனுந் தொண்டரை
விளக்கங் காண
நன்னெறி யிதுவா மென்று ஞாலத்தோர்
விரும்பி உய்யும்
அந்நெறி காட்டும் ஆற்ருல் அருட்சிவ
யோகி யாகி''
(திருநீலகண்ட, கo)

என்றனர்.

கண்ணப்ப நாயனர் புராணத்துள்ளும் அன்பின் மெய்ப்பாடு கூறுவார்,

'மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்புநெக் குருகி யுள்ளத் தெழுபெரு வேட்கை யோடும்'
(கண்ணப், கo)

"நெடிதுபோ துயிர்த்து நின்று நிறைந்தெழு மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீர் அருவி பாய

அடியனேற் கிவர்தாம் இங்கே அகப்பட்டார் அச்சோ வென்று
படியிலாப் பரிவு தானேர் படிவமாம் பரிசு தோன்ற."

(கண்ணப், ௧௧௬)

இன்னும் ௧௧௨ ஆம், ௧௧௫ ஆம் பாட்டுகளில் இறைவனைப் பிரித லாற்ருமையை அழகுற இயம்பினமை காண்க.

'போதுவர் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலி னேக்கி நிற்பர் கன்றகல் புனிற்ருப் போல்வர்'

'சோர்தரு கண்ணீர் வாரப் போய்வரத் துணிந்தா ராகி.'

திருநாவுக்கரசர் புராணத்திலே, சொல் வேந்தர் மெய்ப்பாட்டினை உரைக்குஞ் செய்யுள் வருமாறு:

"கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாவே
பெய்யுந் தகையன கரணங் களுமுடன்
உருகும் பரிவின" (திருநாவுக், ௧௯௭)

"வார்ந்து சொரிந்த கண்ணருவி
மயிர்க்கால் தோறும் வரும்புளகம்
ஆர்ந்த மேனிப் புறம்பலைப்ப
அன்பு கரைந்தென் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயனபெற்றுத்
திளைப்பத் திருவே கம்பர்தமை
நேர்ந்த மனத்தி லுறவைத்து
நீடும் பதிகம் பாடுவார்." (திருநாவு, ௫௨௫)

காரைக்காலம்மையார் புராணத்துள்,

..................'பொருவிடையார் திருவடிக்கீழ்
ஓங்கியவன் புறுகாதல் ஒழிவின்றி மிகப்பெருக' (௧௪)

'மெய்ம்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தான்'
'தம்மனங்கொண் டுணர்தலுமே' (௨௬)

என்றமையால், புனிதவதியார் பேரன்பு தெளிக. அம்மையார் இறைவனிடம் முதற்கண் வேண்டியது 'இறவாதவின்ப அன்பே'

திருஞான சம்பந்தர் புராணத்துள் அன்பின் இணையற்ற பெருக்கினை அவர் வேடர்பெருமானாகிய கண்ணப்ப நாயனாரை வணங்கியவிடத்து ஆசிரியர் மிக அழகாகப் புலப்படுத்தினர். அன்பினையும் அன்பின் பயனையும் ஒருங்கே ஞானவள்ளலார் கண்டாரென்றார்.

"வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண் பார்போன்
மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்"

(திருஞான, க0உஉ)

"உள்ளத்தில் தெளிகின்ற அன்பின் மெய்ம்மை
உருவினையும் அவ்வன்பின் உள்ளே மன்னும்
வெள்ளைச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பும் பொங்கிப்
பள்ளத்தில் இழிபுனல்போல் பரந்து செல்லப்
பைம்பொன்மலை வல்லிபரிந் தளித்த செம்பொன்
வள்ளத்தில் ஞானவா ரமுத முண்டார்
மகிழ்ந்தெழுந்து பலமுறையும் வணங்கு கின்றார்."

சைவ சமயத்தின் பெருமையைத் தெளிவாகப் பல இடங்களில் ஆசிரியர் குறித்திருப்பது பாராட்டத்தக்கது. மூர்த்தி நாயனார் புராணம் சறு ஆவது செய்யுளில்,

"நிலவுந்திரு நீற்று நெறித்துறை நீடு வாழ
உலகெங்கும் நிரம்பிய சைவ முயர்ந்து மன்ன"

என்றார். சிறப்பாகிய திருநீற்றுநெறி ஈண்டுத் தழைப்பவும், பொதுவாகிய சிவநெறி ஞாலமெங்கும் நிரம்பி நிலை பெறவும் என்று குறித்தமை வியக்கத்தக்கது. கடவுட் கொள்கையைச் செவ்விதாகவுடைய எந்நெறியுஞ் சைவச் சார்பாயது என்றுய்த்துணர்க.

"சைவநெறி தலைமேழும் பாலிக்குந் தகைமையீறல்"
(திருநாவுக், கஉ)

என்றவிடத்து மேலாய ஏழுலகத்தாரும் சிவநெறியின ரென்ப தறியற்பாற்று.

"பொருட்சமய முதற்சைவ நெறி" (திருநாவுக், கஅ௩)

என்றமையால், மெய்யாய நெறிகளுண் முதன்மையானது சிவநெறி யென்பது ஆசிரியர் கருத்து.

வைதிக நெறிகளுள் வாய்மையானது சைவச் செந் நெறியென்பார்,

................"வைதிக வாய்மைச் சைவச்
செந்நெறி விளக்கு கின்றார்" (திருஞான, சு0௩)

"உலகியல் வேதநூ லொழுக்கம் என்பதும்
நிலவுமெய்ந் நெறிசிவ நெறிய தென்பதும்"

என்றது இதனை வற்புறுத்தும். சண்டேசுர நாயனர் தோன்றியருளியது சைவம் வளர்த்தற்பொருட்டென்பார்,

"மன்றி னடஞ்செய் பவர்சைவ வாய்மை வளர..........
.........வந்துதயஞ் செய்தார் விசார சருமனர்"
(சண்டேசுரர், கஉ)

என்றார்.

அறத்தை அடிப்படையாகவுடையது சைவம் என பார்,

"அறங்கொள் சைவத் திறந்தழைப்ப" (சேரமான், ௩)

என்றார். சைவத்தின் அளப்பிலாத்தன்மையை,

"ஈறில்சிவ
நன்னெறியே பொருளாவ தெனவுணர்வு நாட்டுவார்"
(சாக்கியர், ௭)

என்றவிடத்துத் தெரித்தனர். சிவநெறியைத் திருநெறி யென்பது வழக்காதலின்,

"தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே"
(திருஞான, அ௫௧)

என்றனர்.

விறன்மிண்ட நாயனர் புராணத்துள் சைவத்தின் தொன்மையை ஆசிரியர் விதந்தோதினர்.

"ஒக்க நெடுநாள் இவ்வுலகில் உயர்ந்த சைவப் பெருந்தன்மை
தொக்க நிலைமை நெறிபோற்றி" (விறன்மிண், ௩0)

என்றது காண்க.

விறன்மிண்டரே பெரிய புராணத்திற்கு மூலமாய்த் திருத்தொண்டத்தொகை பாடப் பெறுதற்குக் காரண மானவராதலின், அவர் பெருமையை ஆசிரியர் போற்றிய பகுதியொடு இச் சிறிய ஆராய்ச்சி முடிவு பெறுகின்றது.

"ஞாலம் உய்ய நாமுய்ய நம்பி சைவ நன்னெறியின்
சீலம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன்
பாடச் செழுமறைகள்
ஓலமிடவும் உணர்வரியார் அடியார் உடனும் உளதென்றால்
ஆலம்அமுது செய்தபிரான் அடியார் பெருமை அறிந்தாரார்."

முற்றும்

பேராசிரியர்

கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்

எழுதிய

## வரலாற்று நூல்கள்

திருஞானசம்பந்தர் வரலாறும் நூலாராய்ச்

அப்பரடிகள் ,, ,,

சுந்தரமூர்த்தி ,, ,,

மணிவாசகப் பெருமான் ,, ,,

பட்டினத்தடிகள் ,, ,,

தாயுமானவர் ,, ,,

குமரகுருபர அடிகள் ,, ,,

சிவஞான முனிவர் ,, ,,

மெய்கண்டாரும் சிவஞானபோதமும்

தமிழர் சமயம்

---

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
*1/140*, பிரகாசம் சாலை, சென்னை-1.

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம் திருச்சிராப்பள்ளி-2